இளங்கோ வாசகம்

[மூன்றும் புத்தகம் - மூன்றும் படிவம்]

முதற் பிரிவு

ப. முருகன், M. A.
மாநிலக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை

முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே 1954, ஜூன், 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 11 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54

சாந்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

‘இளங்கோ வாசகம்’ என்னும் இந் நூல்வரிசை உரிமைபெற்ற நம் மாநில மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

‘புதிய கல்விமுறைக் கேற்ற புதிய புத்தகம் வேண்டும்’ என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத்தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப்பெற்றுள்ளன. மாணவர்தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காலைக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

எண்		பக்கம்
I.	கடவுள் வாழ்த்து	... 1
II.	நீதிப் பகுதி	
	1. நீதிநெறி விளக்கம்	 6
	2. சிறுபஞ்ச மூலம்	... 9
	3. நன்னூல்	... 12
	4. திருக்குறள்	... 14
III.	வரலாற்றுப் பகுதி	
	1. அசோகன்	... 23
	2. முயற்சி திருவினை ஆக்கும்	... 25
IV.	கதைப் பகுதி	
	நளவெண்பா	... 34
V.	வருணனைப் பகுதி	... 39
VI.	பலவகைப் பாடல்கள்	... 42

உரைநடைப் பகுதி

1.	தமிழ்த் தென்றல்	... 49
2.	வில் வீரன்	... 61
3.	அடிமை நீக்கிய அண்ணல்	... 70
4.	வானொலி நிலையம்	... 79
5.	மலை கலங்கினும் நிலை கலங்காதவர்	... 88
6.	செங்குட்டுவன் அரசியல்	... 97
7.	மேழிச் செல்வம்	... 105
8.	கொடியைக் காத்த குமரன்	... 112
9.	சந்தச் சாமியார்	... 119
10.	பயணக் கடிதம்	... 126
11.	கவிக் குயில்	... 137
12.	குடிசைத் தொழில்கள்	... 144
13.	நான் சிறுவனாக இருந்தபோது	... 150
	அரும்பொருள் அகராதி	... 158

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

உலகெலாம் படைத்துக் காத்து,
உருவிலா தழித்து, நாளும்
உண்மையாய் எண்ண மான
ஒருவனாய் அருவ னாகி,
சலமிலா தெண்ணு வோர்க்குச்
சத்திய மயமே யாகித்
தனித்தனி பிரித்த போதும்
தானதிற் பிரியா னாகி
மலரின் மேல் தேவ னாகி
மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி
மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப்
பற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும்
பரமனார் பெருமை போற்றி! 1

— நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையும் அன்றே. 2

—திருநாவுக்கரசர்

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே! 3
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!

—இளங்கோவடிகள்

மன்னுயிர்த் தொகுதியி டேற வானினும்
இந்நிலத் தினும்பிறி திலையென் றேமறை
பன்னியேத் தேடுப்பது பாவ நீவருக்(கு)
இன்னமு தாயது ஏசு நாமமே. 4

—எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை

தமிழ்த்தாய் வாழ்த்து

ஆற்றிடினும் தீயிடினும்
    அன்பர்தமைக் காத்தே
அவர்வேண்டும் பேறருளும்
    அன்பே !புன் மாக்கள்
போற்றிடினும் தூற்றிடினும்
    பொருள் செய்யாப் பொறையே !
பூவில்இணை யாருமிலாப்
    பொலிவுடைய பொற்பே !
மாற்றறியாப் பொன்னே !நன்
    மணியே !செஞ் சுடரே !
வாடாத மணமலரே !
    மணந்தருதென் காலே !
ஏற்றவிளங் கோலமுடன்
    என்றென்றும் வாழ்வாய் !
எங்கரந்தைத் தமிழ்ச்சங்கத்
    தினிதுறைசெந் தமிழே ! 5

— கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

குறிப்புரை

1. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் சிறந்த நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர். இவர் அரசவைக் கவிஞர் என்னும் பெருமையைப் பெற்றவர்; சமரச நோக்கம் உடையவர்; மகாத்மா காந்தியடிகளிடம் மிக்க அன்புடையவர்; இவர் பாடல்கள் இனிய எளிய நடையில் அமைந்தவை.

அருவனாகி - உருவமில்லாதவனாகி. சலம் - சஞ்சலம், சூது. மலரின்மேல் தேவன் - பிரமன். மாதொரு பாகன் - சிவபிரான். மால் - திருமால். பரமனார் - இறைவன்.

2. இப் பாடல் திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்து எடுக்கப்பெற்றது. 4, 5, 6 திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியவை. இவருக்கு அப்பர் என்றும் வேறு பெயர் உண்டு. இவர் சைவ சமயாசாரியர் நால்வரில் ஒருவர். திருவாமூரில் பிறந்தார். இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

மெய்ம்மை - உண்மை. விருப்பு - அன்பு, பக்தி. பொறை - சாந்தம். தம்மையும் - சிவபெருமானையும். கண்டு - கண்டு வணங்கி. தகவு - தக்க குணங்கள். செம்மை - அறநெறி.

3. இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் இளவல். இவர் இளமையிலேயே துறவு பூண்டார். இவரே சிலப்பதிகாரம் என்னும் காவியத்தை இயற்றியவர். சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இது கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறும்.

பெருமை + உலகம் = பேருலகம். கமல உந்தி - தாமரையை உடைய உந்தி. தாமரையைப்போலவே கண்களும், வாயும், பாதங்களும் சிவந்திருந்ததலின் இங்ஙனம் கூறினர்.

4. கிருஷ்ணப் பிள்ளை சிறந்த தமிழறிஞர். இவர் கிறிஸ்துவ மதத்தினர். இவர் எழுதிய 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் நூலிலிருந்து இப் பாடல் எடுக்கப் பட்டது.

மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்கள். ஈடேற - உயர்ந்த வாழ்வு பெற. பன்னி - கூறி.

வினாக்கள்

1. இறைவன் தன்மைகளைப் பற்றி நாமக்கல் கவிஞர் என்ன கூறுகிறார்?
2. சிவகதிப் பயிரை எவ்வாறு விளைத்தல் வேண்டும்?

3. திருமாலின் அழகை இளங்கோவடிகள் எவ்வாறு வருணிக்கிறார்?

4. ஏசு நாமம் இன்னமுதாவது எப்படி?

5. தமிழ்த்தாயின் பெருமைகள் யாவை?

பயிற்சி .

1. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

தனித்தனி, பற்பல, வேலியிட்டு, கண்ணிமைத்து, என்றென்றும்.

2. பிரித்துக் கூறுக:

உருவிலா, விருப்பெனும், மன்னுயிர், பொலிவுடைய கண்மணி, செஞ்சுடர், என்றென்றும்.

3. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் காணப்படும் வரலாற்றுப் பகுதியை விளக்கித் தமிழன் பெருமையைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

4. எதிர்ப்பதம் தருக:

படைத்து, அருவம், பொய்ம்மை, போற்றுதல், வாடாத.

II. நீதிப் பகுதி

1. நீதிநெறி விளக்கம்

எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்(து)
உய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னாகும்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. 1

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க்கொவ்வான்; மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா; புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 2

கற்றார்க்குக் கல்வி நலனே நலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரோ
அழகுக்(கு) அழகுசெய் வார். 3

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்(று) அகமகிழ்க!—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெலாம்
எற்றே இவர்க்குநா மென்று. 4

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம். 5

கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்(கு)
உண்டோ உணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து. 6

குறிப்புரை

நீதியாகிய வழிகளுக்கு விளக்குப்போன்று உதவுதலின் இந் நூலுக்கு நீதிநெறி விளக்கம் என்று பெயர். குமர குருபரர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் தோன்றியவர். முருகன் திருவருள் பெற்றவர்; 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார்.

1. இடமறிந்து - நூலில் நயம் நிறைந்த இடங்களை அறிந்து. உய்த்துணர்ந்து - மதிநுட்பத்தால் ஆராய்ந்தறிந்து.

2. முகம் என்றது நாவை. இவர் - இங்கே புலவரைக் குறிக்கும். மலரவன் பிரமன்.

3. நலன் - அழகு. மணிப்பூண் - இரத்தினத்தால் செய்யப்பட்ட ஆபரணம்.

4. மெலியார் - செல்வத்தில் தாழ்ந்தவர். கருத்து அழிக - உள்ளத்தில் வருந்துக. எற்றே - எம்மாத்திரம்.

5. தற்புகழ்தல் - தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல். தீச்சுடர் - விளக்கை. நயவாமை - விரும்பாமலிருத்தல். நலம் - இன்பம்.

6. உணர்ச்சி - அறிவு. எரி - நெருப்பு. மாசுணம் - பெரிய மலைப்பாம்பு. 'மாசுணம் பேராவாய்க் கண்துயில்வ' என்று கூட்டுக.

வினாக்கள்

1. 'பொன் மலர் நாற்றமுடைத்து'—இவ் வுவமையால் விளக்கப்படும் நீதி யாது?

2. தமிழ்ப்புலவர் எவ்வாறு மலரவனைவிட உயர்ந்தோராவர்?

3. கற்றோர்க்கு அணியாவது யாது? எதுபோல?

4. எப்போது அகம் மகிழவேண்டும்? எப்போது கருத்தழிய வேண்டும்?

5. கீழ்மக்கள் தன்மை யாது? இதற்குக் காட்டப்பட்ட உதாரணத்தை விளக்குக.

பயிற்சி

1. இப் பகுதியில் கல்வியின் பெருமையைக் கூறும் செய்யுட்களின் கருத்தைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.

சேர்த்து எழுதுக:

2. இடம்+அறிந்து, கலன்+அல்லால், கருத்து+அழிக, நன்மை+நீர், கண்+துயில்வ.

3. ஆறும் செய்யுளின் உவமான உவமேயங்களைத் தனித்தனியே எடுத்துக் கூறுக.

4. இரண்டாம் செய்யுளின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் கூறுக.

5. 'உய்த்துணர்ந்தும் சொல்வன்மை இன்றெனின் என்னாகும்?'—இஃது என்ன வாக்கியம்? இதனைப்பொருள் மாறுபடாதவாறு செய்தி வாக்கியமாக மாற்றுக.

2. சிறுபஞ்ச மூலம்

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வது நன்று. 1

பூவாது காய்க்கு மரமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார்—தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்
குரையாமை செல்லு முணர்வு. 2

பூத்தாலுங் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலு மூவார்நூ றேற்றாதார்—பாத்திப்
புதைத்தாலு நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு. 3

ஒருவ னறிவானு மெல்லாம்யா தொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமில் லானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானு மில். 4

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. 5

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்து
ஒல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—ஒல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தான்
ஆயின் அழிதல் அறிவு. 6

குறிப்புரை

சிறு பஞ்சமூலம் பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்தது. இதனை இயற்றியவர் காரியாசான் என்பவர். இவர் சைன மதத்தினர். கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் ஆகிய ஐந்து வேர்கள் மக்களின் நோயைத் தீர்ப்பதுபோல இந் நூலில் ஒவ்வொரு பாடலிலும் அடங்கியுள்ள கருத்துக்களும், அறியாமையை நீக்கப் பயன்படுவன. இந் நூலின் சிறப்புப்பற்றி இதனை 'மாமூலம்' என்பர்.

1. பெருமை பிழைத்தல் பொறுத்தல் எனப் பிரித்துப் பொருள் கொள்க. பல பொருளார் - மிக்க பொருளையுடைய செல்வர். நகைகெட - இகழ்ந்துரைப்பது நீங்க.

2. மூவாது மூத்தவர் - வயதினால் மூத்தவர்களாக ஆகாது போனாலும் அறிவினால் மூத்தவர்கள் ஆவார்கள். தாவா - கெடாத. மேதைக்கு-அறிவுள்ளவனுக்கு. நாறுவ - முளைப்பன. நாறல் - முளைத்தல்.

3. மூவார் - அறிவினால் முதிர்ந்தவர் ஆகார். உணர்வு - அறிவு.

4. கணன் - கணம். தொகுதி, அடங்க - முழுமையும். எல்லாமறிந்தவனும், ஏதுமறியாதவனும், கல்வியே இல்லாதவனும், குற்றமே இல்லாதவனும், எல்லாம் கற்றவனும் உலகத்தில் இல்லை என்பதே இந்தப் பாட்டின் திரண்ட கருத்தாகும்.

5. வழக்கறிந்து - செலவு செய்தலைத் தெரிந்து. வெருவுதல் - பயந்து செல்லுதல். வீழ்ந்து - விரும்பி. ஓம்பி - பாதுகாத்து. திரு ஆக்கும் செல்வத்தை அதிகப்படுத்தும். இல்வாழ்க்கைத் துணைவியின் குணம்பற்றிக் கூறுகின்றார்.

6. நல்ல - நல்லனவற்றை. வெளிப்படுத்து - பிறர்க்கு எடுத்துரைத்து. ஒல்லும் - முடியும். ஒல்லை -

விரைவு. ஊற்றங்கோல் - ஊன்றுகோல். மாயம் - வஞ்சனைச் செயல். மாற்றுக - நீக்குக, ஒழித்திடுக.

வினாக்கள்

1. பெருமையும் சிறுமையும் யாவை?
2. மூவாவது மூத்தவர் யார்?,அவர் எதுபோன்றவர்?
3. மூத்தாலும் மூவார் யார்? அவருக்குக் காட்டப்பட்ட உவமையை விளக்குக.
4. 'ஒருவனறிவானும்' என்னும் செய்யுட் கருத்தை எழுதுக.
5. பெண்டிர்க்குரிய சிறப்புகள் யாவை?
6. 'நல்ல வெளிப்படுத்து' என்னும் செய்யுளில் கூறப்படும் நீதிகளைத் தொகுத்து எழுதுக.

3. நன்னூல்

மாணாக்க ரிலக்கணம்

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம்ஆ டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மாணாக்கர். 1

மாணாக்கராகாதவ ரிலக்கணம்

களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே. 2

பாடங் கேட்டலின் முறை

கோடல் மரபே கூறுங் காலை
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச் .
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர். 3

மாணாக்கர் வழிபாடு செய்யும் விதம்

அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமொடு
எத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே. 4

குறிப்புரை

நன்னூலைப்பற்றி யறியாத தமிழ்வாணர்களே இரார். இதனை இயற்றியவர் பவணந்தி முனிவர். இவர் சைனர். தொண்டை மண்டலத்தில் சனகாபுரத்தில் பிறந்தார். சீயகங்கனின் வேண்டுகோளுக்கு இணங்கி எல்லோருக்கும் பயன்படும் வகையில் நன்னூலை இயற்றியருளினார்.

1. இல்லிக்குடம் - ஓட்டைக்குடம். நெய்யரி - பன்னாடை.

2. களி - கள் குடிக்கின்றவன். மடி - சோம்பேறி. மானி - அகங்காரம் பிடித்தவன். பிணியன் - நோயாளி. தொன்னூல் - பழைய நூல்கள். படிறன் - பொய் பேசுகின்றவன்.

3. முனிதல் - வெறுத்தல். பருகுவனன்ன ஆர்வத்தனாகி - தாகத்தால் துன்பப் படும்போது தண்ணீரைக் கண்டு உடனே குடித்துவிடலாமா என்று எண்ணுவதைப் போல மிக்க ஆர்வம் கொண்டு. களம் - இடம்.

வினாக்கள்

1. மாணாக்கர் எத்தனை வகைப்படுவர்? அவர் எவை போல்வர்?
2. எவரெவர்க்குப் பாடம் சொல்லுதல் கூடாது?
3. பாடங் கேட்டலின் முறையை விளக்கி எழுதுக.
4. மாணாக்கர் எவ்வாறு வழிபாடு செய்தல் வேண்டும்?

4. திருக்குறள்

(அரசியலாரால் குறிப்பிடப் பட்டவை)

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 1

செயற்குஅரிய செய்வார் பெரியர் ; சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார். 2

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் ; அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. 3

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 4

தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல். 5

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் ;
மறத்திற்கும் அஃதே துணை. 6

மோப்பக் குழையும் அனிச்சம் ; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 7

இனிய உளஆக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. 8

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 9

நன்றே தரினும் நடுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 10

யாகாவார் ஆயினும் நாகாக்க ; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. 11

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 12

பொறுத்தல் இறப்பினை என்றும் ; அதனை
மறத்தல் அதனினும் நன்று. 13

இலம்என்று வெஃகுதல் செய்யார், புலம்வென்ற
புன்மைஇல் காட்சி யவர். 14

கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல். 15

சொல்லுக சொல்லில் பயனுடைய ; சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல். 16

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். 17

இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர். 18

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 19

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன் ? 20

மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்தது ஒழித்து விடின். 21

களவினால் ஆகிய ஆக்கம், அளவுஇறந்து
ஆவது போலக் கெடும். 22

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க ; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 23

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற? 24

இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல். 25

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். 26

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை. 27

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். 28

கற்றிலன் ஆயினும் கேட்க: அஃதுஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. 29

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 30

சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. 31

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணுவார். 32

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்? 33

மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து. 34

எண்ணித் துணிக கருமம்: துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. 35

உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர். 36

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். 37

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா ; எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். 38

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 39

அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குஉடையான் கட்டே தெளிவு. 40

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 41

அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு 42

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 43

அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் நீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை ? 44

கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும். 45

சிதைவுஇடத்து ஒல்கார் உரவோர் ; புதையம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு. 46

மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு. 47

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 48

இடுக்கண் வருங்கால் நகுக : அதனை
அடுத்தூர்வது அஃதுஒப்பது இல். 49

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. 50

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. 51

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ அற்று. 52

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை. 53

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும். 54

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல். 55

அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். 56

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு. 57

கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை. 58

விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்திமைப்பின்
ஓட்டுஅன்றோ வன்க ணவர்க்கு. 59

முகம்நக நட்பது நட்புஅன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு. 60

உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 61

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 62

அமர்அகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரில் தனிமை தலை. 63

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க; வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 64

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 65

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 66

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 67

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். 68

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் 69

இலம்என் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும். 70

குறிப்புரை

1. மலர் மிசை - (மனமாகிய தாமரை) மலர்மேல். ஏகினன - சென்று தங்கினவன். மாண் - மாட்சிமை.

3. மாசு - குற்றம். ஆகுலம் - ஆரவாரம். நீர - தன்மையன.

5. அவை - சபை.

6. சார்பு - துணை. மறத்திற்கும் - பாவத்துக்கும்.

7. அனிச்சம் - ஒருவகையான மலர்.

8. இனிய - இனிய சொற்கள். இன்னாத - கடுஞ்சொற்கள்.

9. வையகமும் - உலகமும்.

10. நடு - நடுநிலைமை. இகந்து - தவறி. ஆக்கம் - செல்வம்.

11. சோகாப்பர் - துன்புறுவர். இழுக்கு - குற்றம்.

12. உலகம் - உலகத்திலுள்ள மக்கள். ஒட்ட - பொருந்த.

13. இறப்பினை - செய்த தீமையே.

14. இலம் - செல்வம் இல்லை என்று. வெஃகுதல் - பிறர் பொருளைக் கொள்ளக் கருதுதல். புலம் - ஐம்புலன்கள், காட்சி - அறிவு.

15. கண்ணற - இரக்கம் இல்லாமல்.

17. துன்னற்க - செய்யாதொழிக.

18. கடன் - கடமை. இடனில் - செல்வம் இல்லாத. பருவம் - காலம்.

19. ஆற்றுவார் - தவம் செய்வார். ஆற்றல் - வன்மை. மாற்றுவார் - பசியைப் போக்கும் இல்லறத்தார்.

20. பட - தோன்ற. நோவது - இகழ்வது.

21. மழித்தலும் - மொட்டையடித்துக்கொள்ளலும்.

22. ஆக்கம் - செல்வம்.

23. பொய்யற்க - பொய் சொல்லாதே.

24. நகை - முகமலர்ச்சி.

25. ஒறுத்தல் - தண்டித்தல். நன்னயம் - நன்மை.

26. இறை - கடவுள். வைக்கப்படும் - எண்ணப்படும்.

27. விழுச் செல்வம் - பெருமையுடைய செல்வம். மாடு - செல்வம்.

28. இலங்கு - அறிவானது விளங்கும்.

29. ஒற்கத்தின் - தளர்ச்சியடையும் நேரத்தில்.

30. மெய்ப்பொருள் - உண்மையான பொருள், உண்மை.

31. ஓரீஇ - நீக்கி.

33. இடிக்கும் - குற்றம் கண்டவிடத்து இடித்துக் கூறும்.

34. சான்றோர்க்கு - அறிவுடையவர்க்கு. ஏமாப்பு - பாது காவல்.

35. கருமம் - செயல்.

36. உடைத்தம் - தம்முடைய. ஊக்கத்தின் - மன வெழுச்சியால். இடைக்கண் - பாதியில்.

37. ஞாலம் - உலகம். கைகூடும் - கிட்டும்.

38. எஞ்சாமை - குறையாதபடி.

39 நாடி - ஆராய்ந்து. மிகை - அதிகமானதை.

40. தேற்றம் - தெளிவு. தெளிவு - நம்பிக்கை.

42. அரண் - பாதுகாவல். பொச்சாப்பு - மறதி.

43. குடிதழீஇ - குடிகளை அன்புடன் ஆதரித்து. கோல்- செங்கோல். அடிதழீஇ - அரசனது பாதங்களைத் தழுவி.

44. அல்லல் - துன்பம். படை - ஆயுதம்.

45. கண் - இரக்கம். நீடு - நீண்டகாலம்.

46. சிதைவு - தளர்ச்சி. ஒல்கார் - பின் வாங்கார். பாடு - பெருமை. உரவோர் - வலிமையுடையோர் (மன உறுதி யுடையோர்.)

47. மடி - சோம்பல். அடி அளந்தான் - திருமால்.

48. கூலி - பயன்.

49. இடுக்கண் - துன்பம். நகுக - சிரித்திடுக.

52. ஏமார்த்தல் - பாதுகாத்தல்.

53. தைரியம் - துணிவு.

54. தெறும் - அழிக்கும்.

55. ஐயப்படாது - சந்தேகப்படாமல். அகம் - மனம்.

56. அவை - சபை.

57. பொறை - சுமை. இறைவற்கு - அரசனுக்கு. இறை - கப்பம். நேர்வது - தருவது.

58. கூற்று - எமன். உடன்று - கோபித்து.

59. ஓட்டு - தோல்வி. வன்கணவர்க்கு - வீரர்க்கு.

60. முகநக - முகம் மலரும்படி. அகம் - மனம்.

61. உள்ளற்க - எண்ணாது ஒழிக. அல்லல் - துன்பம்.

62. அழிவந்த - கெடுதிகளை. அறூர் - நீக்கார்.

63. அமர் அகத்து - போரில். ஆற்றறுக்கும் - கீழே தள்ளிவிட்டுச் செல்லும். கல்லாமா - போர்த் தொழிலைக் கல்லாத குதிரை.

64. ஒன்னார் - பகைவர்.

65. இழுக்கார் - தவறமாட்டார்கள்.

66. குன்றின் அனையார் - மலைபோல் உயர்ந்தவர். குன்றுவர் - சிறுமையடைவர். குன்றி அனைய - குன்றிமணி அளவு சிறிய.

67. ஆற்றுவர் - செய்வார்கள்.

68. ஊழி - ஊழிக்காலம். ஆழி - கடல்.

69. குடிசெய்வல் - தான் பிறந்த குடியினை முன்னேறச் செய்வேன். மடி - சோம்பல். தற்று - வரிந்து கட்டி.

70. இலம் - பொருள் இல்லை என்று. அசைஇ - சோம்பல் கொண்டு. நகும் - சிரிப்பாள்.

III. வரலாற்றுப் பகுதி

1. அசோகன்

சந்திர குப்தன்மகன்—பிந்து
சாரன் புகழ்சிறந்தான்.
வந்தனன் அவன் மகனும்—அசோகன்
வளர்பிறைச் சந்திரன்போல். 1

'மன்னன் எனில் இவனே'—என
மன்னுயிர் போற்றியவன்
பொன்முடி புனைதுறவி—அசோகன்
புகழினைக் கேளடியோ! 2

வலமிகு வாலிபத்தில்—பெரு
மல்லனிவன் படையால்
கலிங்கத்தை வென்றதுவும்—போர்க்
களத்தினைப் பார்த்தயர்ந்தான். 3

எத்தனை பேரைக்கொன்றேன்!—அந்தோ
ஏதுக்கிப் போரெனவே
கத்தியை விட்டெறிந்து—புத்தர்
கருணையைச் சரண்புகுந்தான். 4

நாட்டி லெங்குந்தூண்கள்—மிக
நாட்டியே நல்லுரைகள்
ஏட்டைப் போலத்திட்டி—அறம்
இலகிட நீதிசெய்தான். 5

— சுத்தானந்த பாரதியார்

குறிப்புரை

இப் பாடலின் ஆசிரியர் சுத்தானந்த பாரதியார். இயற் பெயர் வேங்கடராம ஐயர் என்பது. இவர் திருச்சிராப் பள்ளிக்கு மேற்கில் உள்ள காட்டுப் புத்தூரிற் பிறந்தவர். இவர் பல எளிய இனிய உரைநடை நூல்களும், செய்யுள் நூல்களும் இயற்றியுள்ளார். இந்தியப் பேரரசனாகிய அசோகன் வரலாறு இப் பாடல்களில் மிகச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பிந்துசாரன் - அசோகருடைய தந்தை. மன்னுயிர் போற்றி - பிறவுயிர் காத்து. புனை - அணி. வலம் மிகு வெற்றி மிக்க. அயர்ந்தான் - மயங்கினான். மல்லன் - வீரன் கலிங்கம் - கலிங்க தேசம். இலகிட - விளங்க. அறம் - நீதி

வினாக்கள்

1. அசோகர் யாருடைய மகன்?
2. அசோகர் எந்த நாட்டின்மேல் படையெடுத்தார்? அதன் முடிவு யாது?
3. அவர் புத்தமதத்தைத் தழுவக் காரணம் என்ன?
4. புத்தமதம் எங்கும்பரவஅசோகர்என்னசெய்தார்?
5. அசோகர் பெருமைகளைப்பற்றி ஒரு குறிப்பு வரைக?

பயிற்சி

1. தேசப் படத்தைப் பார்த்துக் கலிங்கநாடுள்ள பகுதியைக் கண்டுபிடி.
2. இப்பகுதியை உன் சொந்த வாக்கியங்களில் உரை நடைப் படுத்திக் கூறுக.
3. வளர் பிறைச் சந்திரன்போல், மன்னுயிர், அயர்ந் தான், சரண் புகுந்தான், இலகிட—இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. முயற்சி திருவினை ஆக்கும்

தொண்டைநன் னாட்டைச் சார்ந்த
தொல்புகழ் களத்தூர் தன்னில்
பண்டைநற் றவத்தி னாலோர்
பாலகன் பிறந்தான்; மற்றுக்
கண்டவர் கலக்க முற்றார்
கண்ணிலாக் குழவி யென்றே!
மண்டலம் புகழ வந்த
மாதவச் சேயி தாமே. 1

தந்தையாம் வடுக நாதர்
தநயனைக் காணுந் தோறும்
சிந்தைநைந் தயர்ச்சி கொள்வார் ;
செய்வகை யாதோ என்பார்.
'எந்தையே! ஈசா!' என்றே
இறைவனை இறைஞ்சி நிற்பார் ;
மைந்தனும் மாசில் வீர
ராகவன் மகிமை ஓரார். 2

மந்திரம் தந்தி ரங்கள்
மருத்துவம் முதலா வுள்ள
முந்தையோர் முறைகள் யாவும்
முயன்றனர் வடுக நாதர் ;
சுந்தரச் சிறுவன் கண்தாம்
சுகமுறக் காண வில்லை!
'விந்தையோ! வினையோ!' என்றே
விம்மினள் அன்னை அந்தோ! 3

விலையிலா மணியாய் வந்த
வீரரா கவன்தன் பேச்சாம்
வலையினால், அன்பால், இன்பால்,
வயங்குநற் செயல்கள் தம்மால்
நிலைதிரிந் திருந்த பெற்றோர்
நீங்கினர் துன்பம் அம்மா!
மலையெனும் துன்ப மேனும்
மறந்திடல் இயற்கை யன்றோ? 4

எழுத்தறி பருவத் தோர்நாள்
இராகவன் தன்பெற் றோரை
அழைத்தக மலர்ந்து, 'கல்வி
அறிந்திட ஆசை,' என்றே
வழுத்திடத் தந்தை தாயர்
வாட்டம துளத்திற் கொண்டு
விழித்திட லானார், 'என்னே
விளம்புவ திவனுக்' கென்றே. 5

"அம்மையே அப்பா, என்னை
அன்புடன் கல்விச் சாலைக்(கு)
இம்மையே அனுப்பு வீரேல்
என்றன்ஆ சிரியர் தம்மை
மும்முறை எழுத்தை எல்லாம்
முதுகினில் எழுதச் சொல்லிச்
செம்மையே கற்பன்," என்றே
செப்பினன் செல்வ மைந்தன். 6

மதலைதன் மாற்றங் கேட்டே
மகிழ்ந்தனர் தந்தை தாயர்
சுதனுமவ் வாறே சென்று
சூழ்ச்சியிற் கற்க லானன்
நிதமுவவ் வாசான் சொல்லும்
நீதிநூல் நிகண்டந் தாதி
சதகநூற் புராண மோடு
சாத்திரத் தொகுதி எல்லாம். 7

முதுகினில் எழுதக் கற்றும்
முறைமையிற் சொல்லக் கேட்டும்
மதுகையாற் பாடல் யாவும்
மனத்தினிற் பாடஞ் செய்தும்
எதுகையும் மோனை யுங்கொள்
இனியநற் பாடல் யாத்தும்
சதுரராய்த் திகழ லானார்
சற்குணச் செல்வர் அம்மா! 8

வேளிர்தம் குலத்து வந்த
வீரரா கவராம் செம்மல்
காளையாம் பருவ முற்றார்;
கடிமண மதுவும் பெற்றார்.
வாளைபாய் வயல்கள் நீடு
வளத்தின்ஆர் களத்தூர் தன்னில்
கேளிரும் நட்புஞ் சூழக்
கேண்மையின் வாழ்ந்து வந்தார் 9

இன்சொலும் ஈகை யுங்கொண்
டிருவரும் வாழும் போது
நன்சொலே ஆய்ந்து கூறும்
நங்கைவாய் தவறி ஓர்நாள்
புன்சொலொன் றியம்பி னாளால்
புலவரும் பொறுக்க லாற்றார்
"நின் சொலே காப்பன்," என்றே
நீங்கினார் ஊரை விட்டே. 10

கண்ணிலாக் குறையி னாலே
காதலி அவம தித்தாள்
பெண்ணவள் பகர்ந்த வண்ணம்
பெருவள நாடு வேழம்
திண்ணம் நான் கொணர்ந்த பின்னே
திரும்புவன் களத்தூர் என்றார்.
எண்ணுவார் எண்ணிச் செய்யின்
இயற்றலாம் யாவும் அன்றே? 11

நூலெலாம் ஆய்ந்து கற்ற
நுண்ணறி வுடைய ரேனும்
மாலுலாம் உலகம் என்றும்
மதிக்குமோ பொருளி லாரை?
கோலினால் குறிக்கொண் டேனும்
கொணர்தலே தகுதி என்றே
காலினால் நடந்து சென்றார்
கல்வியில் வீர ரானார். 12

அந்தகர் இவர்தாம் என்றே
அவமதித் திருந்தோ ரெல்லாம்
சுந்தரப் பாடல் கேட்டே
சொல்லொணு வியப்பில் நின்ருர்;
வந்தவர் புலமை கண்டே
வழங்கிஞர் பரிசை மன்னர்.
தந்தஅப் பரிசில் பெற்றே
தாமும்ஊர் திரும்பி ஞரே. 13

புண்ணியப் புலவர் தாமும்
புகழ்பெறு களத்தூர் வந்தே
"எண்ணி நீ உரைத்த வாறே
யானையும் நாடும் பெற்றேன்.
பெண்மணீ பாராய்," என்னப்
பேதைஅம் மனைவி தானும்
கண்ணினில் அருவி பாயக்
கணவனுர் காலில் வீழ்ந்தாள். 14

"பெற்றஇச் செல்வ மெல்லாம்
பேசில்நின் மொழியா லன்ரூே?
குற்றமொன் றில்லை," என்றே
கூறிஞர் புலவர் தாமும்
கற்றனம் பலவே நீதி
கவிஞர்தம் சரிதத் தாலே
முற்றும்நீர் முயன்று சொல்வீர்
முழுமனப் பொறுமை கொண்டே. 15

—பேராசிரியர் மயிலை. சிவ முத்து

குறிப்புரை

பேராசிரியர் மயிலை. சிவ. முத்து அவர்களைத் தமிழ் நாடு நன்கு அறியும். எழுத்தாலும், பேச்சாலும் தமிழுக்கும் சமூகத்துக்கும் ஓயாமல் உழைப்பவர். இவர் சென்னையில் உள்ள மைலாப்பூரில் பிறந்தார். சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றி வருகிறார். சென்னை மாணவர் மன்றமும் இவரால் பெரிதும் போற்றப்படுகிறது.

ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகட்குமுன்னே செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த பொன் விளைந்த களத்தூரிலே வடுகநாத முதலியார் என்னும் வேளாளர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பிறவிக் குருடாக ஒரு புதல்வர் பிறந்தார். அப் புதல்வர் பெயர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பது. அவர் எழுத்துக்களைத் தம் முதுகில் எழுதச் சொல்லிக் கற்றுக் கொண்டாராம். பல அரிய பெரிய நூல்களை யெல்லாம் பிறர் வாயினாற் சொல்லக் கேட்டே நெட்டுருப் போட்டுப் பெரும் புலவராக விளங்கினர் நமது முதலியார்.

வீரராகவ முதலியார் ஒருமுறை எங்கோ சென்றிருந்து தம் இல்லம் திரும்புதல் கண்ட சிலர், "முதலியார் வருகின்றார்," என்று அவர்தம் மனைவிக்கு அறிவிக்க, அவ்வம்மையார், "வந்தால் என்ன? அவர் யானைக்கன்றும் வளநாடும் பெற்று வந்தாற்போல் கூறுகின்றீர்களே!" என்று பரிகாசமாகச் சொல்ல, முதலியார் அதனை இகழ்ச்சிக் குறிப்பாக எண்ணி, "அப்படியானால் யானைக் கன்றும், வளநாடும் பெற்ற பின்னரே நான் இல்லம் புகுவேன்," என்று சூளுரைத்து யாத்திரை செய்யப் புறப்பட்டார். ஈழநாட்டு அரசனாகிய பரராச சிங்கம் என்பவன் இவருக்கு யானைக் கன்றும், வளநாடும் அளிக்க அவைகளைப் பெற்ற பின்னரே இவர் இல்லம் சென்றனர் என்பர் சிலர். இவர்தம் தமயனார்

மனைவி இவ்விதம் புகன்றதாகவும், அதன் பின்னரே இவர் படித்துப் பரிசுகள் பலவும் பெற்றதாகவும் கூறுவர்.

இயற்கையிலேயே குருடராகப் பிறந்தும் தமது முயற்சியினால் பெரும் புலவராகிப் பல அரிய நூல்களை இயற்றிய இப்பெரியார் சரிதத்தை மாணவர் என்றும் தம் மனத்தில் கொண்டிருத்தல் வேண்டும்.

1. பண்டை - பழமை. மண்டலம் - பூமி. சேய் - குழந்தை. தநயன் - புதல்வன் (தநயை பெண்பால்)

2. அயர்ச்சி - துன்பம். மாசு + இல் (மாசு - குற்றம்) இறைஞ்சி - வணங்கி. ஓரார் - எண்ணார்.

3. முந்தையோர் - முன்னோர். விந்தை - புதுமை.

4. வயங்குதல் - விளங்குதல்.

5. வழுத்திட - சொல்ல.

6. இம்மை - இப்பொழுது.

7. மாற்றம் - சொல். சுதன் - மகன். நிதம் - தினந்தோறும்.

8. மதுகை - ஆசை. யாத்தல் - கட்டுதல். சதுரர் - வல்லவர்.

9. வேளிர் - வேளாளர்.

10. செம்மல் - பெரியோன். கடி - சிறப்பு. கேளிர் - சுற்றத்தார். கேண்மை - நட்பு. நங்கை - பெண். புன்சொல் - இழிவான சொல்.

11. பகர்ந்த - சொன்ன. வேழம் - யானை. திண்ணம் - நிச்சயம். கொணர்ந்த - கொண்டு வந்த.

12. மால் - அறியாமை. குறிக்கொண்டு - அடையாளமாகக் கொண்டு.

13. அந்தகர்-குருடர். வியப்பு-ஆச்சரியம். வரிசை-பரிசு.

14. அருவி பாய - சிறிய ஆறுபோல் கண்ணீர் வழிந்தோட.

15. கவிஞர் - புலவர்.

வினாக்கள்

1. வீரராகவ முதலியார் எவ்வூரில் பிறந்தார்? அஃது எந்த மாவட்டத்தைச் சார்ந்தது?

2. பிறந்த மகனைக் கண்டு பெற்றோர் வருந்தக் காரணம் என்ன?

3. பெற்றோர் எங்ஙனம் துன்பம் நீங்கினர்?

4. வீரராகவ முதலியார் எங்ஙனம் கல்வி கற்பதாகப் பெற்றோரிடம் கூறினார்?

5. முதலியார் எவ்வாறு புலவர் ஆனார்?

6. 'நங்கை வாய் தவறி ஓர் நாள் புன் சொலொன் றியம்பினாள்'—நங்கை யார்? புன்சொல் யாது?

7. 'உலகம் மதிக்குமோ பொருளில்லாரை?'—இடங் கூறி விளக்குக.

8. புலவர் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் என்ன செய்தார்?

9. இப் பாடத்தால் அறியும் நீதிகள் யாவை?

பயிற்சி

1. இப் பாடத்தில் காட்டப்பட்ட படம் இவ் வரலாற்றில் எந்த நிகழ்ச்சியைக் குறிக்கிறது?

2. சார்ந்த, தொல்புகழ், அயர்ச்சி, நிலைதிரிந்து, வழுத்திட, விழித்திட, குறிக்கொண்டு - இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

3. இப் பாடத்திலிருந்து விளிப் பெயர், ஏவல் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் இவைகட்கு உதாரணங்கள் தருக.

4. பனிரண்டாம் செய்யுளின் முதலிரண்டடிகளைச் செய்தி வாக்கியமாக மாற்றிக் கூறுக.

IV கதைப் பகுதி

நள வெண்பா

கலி நளனைவிட்டு நீங்குதல்

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி. 1

தேர் செலுத்திவந்த நளனிடம் தமயந்தி தன் மக்களை அனுப்ப, அவன் அவர்களைத் தழுவி வினவுதல்

மக்களை முன்காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள் நீர்
"என்மக்கள் போல்கின் றீர் யார்மக்கள்?" என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 2

பிள்ளைகள் கூறுதல்

"மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்," என்றார் அழுது. 3

நளன் வினா

"உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ?—செங்கை
வளவரசே!" என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து. 4

மக்கள் விடை

“ நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர் அடுமடையா!—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 5

நளன் கூறுதல்

“மன்னர் பெருமை மடையர் அறிவரோ?
உன்னை அறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல்,” என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். 6

நளனை இன்னாரென்று தம் மக்கள் கூறிய செய்திகளால் அறிந்து தமயந்தி வீமனிடம் சொன்னாள்.

அவன் நளனிடம் வருதல்

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகண் டேறும் வளநாடன் தன்னைத்
தெரிவரிதா னின்றான் திகைத்து. 7

வீமன் நளனை நோக்கிக் கூறுதல்

“ பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்கும் திருநாடா ! உன்னை
ஒளியாது காட்டுன் உரு.” 8

நளன் மாறுவேடம் நீங்கல்

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோல் போயிற்றே—அக்காலங்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. 9

வீமன் விருந்து செய்தல்

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையும் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலைவேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. 10

— புகழேந்திப் புலவர்

குறிப்புரை

நிடத நாட்டரசன் நளனுடைய கதையை வெண்பாக்களினால் கூறுதலின் இந்நூல் 'நள வெண்பா' எனப் பெயர் பெறும். புகழேந்திப் புலவர், தொண்டை நாட்டுக் களத்தூரிலே, பனிரண்டாம் நூற்றாண்டில் பிறந்தார். இவரை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனுவான்.

நள வெண்பா, சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என்னும் முப்பிரிவுகளுடையது.

1. வண்டார் - வண்டுகள் நிறைந்த. மள்ளுவ நாட்டு எங்கோமான் - மள்ளுவ நாட்டை யாண்டுவந்த சந்திரன் சுவர்க்கி. தண்டார் - குளிர்ச்சி பொருந்திய மாலை.

2. வெய்துயிரா - பெருமூச்சு விட்டு. புயம் - தோள். வன்மம் - பகைக் குணம்.

3. அன்னை - தமயந்தி. கான் - காட்டில். மற்றொருவன் - புட்கரன்.

4. இழுக்கன்றோ?-தாழ்வல்லவா? இளவரசு - இந்திரசேனன்.

5. அடுதல் - சமைத்தல். மடையா - சமையற்காரனே. எஞ்சாது - குறையாது.

7. போது - அரும்பு. கண்ணி - மாலை. ஓதம்-குளிர்ந்த நீர். வளநாடன் - நளன்.

8. பைந்தலை - பசியதலை. பணம் - படம். பூகம் - கமுகு. மந்தி - பெண் குரங்கு.

9. மிக்கோன் - திருமால். சார்வாக - பற்றாக. மான் அகத்தேர் - குதிரைகள் பூட்டப்பட்டுள்ள தேர்.

10. வாழுவா - நீங்காத. விதையக் கோன் - விதர்ப்ப தேசத்திற்கு அரசனான வீமன்.

வினாக்கள்

1. புகழேந்திப் புலவர் நன்றி மறவாதவர் என்பதை எவ்வாறு உணரலாகும்?

2. நளன் மக்களைப் பார்த்து என்ன வினவினான்?

3. யார் என்று வினவிய நளனைப் பார்த்துப் பிள்ளைகள் என்ன கூறினார்கள்?

4. 'உங்களர சொருவன் ஆளநீர் ஓடிப்போந் திங்கண் உறைதல் இழுக்கன்றோ?'—இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.

5. 'தீமையே கொண்ட சிறு தொழிலாய்' என்று நளனை மக்கள் இகழ்ந்துரைக்கக் காரணம் என்ன?

6. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ'—இதனைக் கூறியவன் யார்? எப்போது?

7. 'ஓதம் வரிவளை கண்டேறும் வள நாடன்'—இச் சொற்றொடரை விளக்குக.

8. 'பைந்தலைய நாகத்தின்'—இச் செய்யுளால் குறிப்பாகக் கூறப்படுவது யாது?

9. நளன் மாறுவேடம் நீங்கியமை எது போன்றிருந்தது?

பயிற்சி

1. எங்கோமான், வெய்துயிரா, வளநாடு, சிறுதொழிலாய், முனிந்தருளல், கரந்துறையும் - இவற்றைப் பதம் பிரித்து எழுதுக.

2. நளனுக்கும் அவன் மக்களுக்கும் நடந்த உரையாடலை உரைநடைப் படுத்திக் கூறுக.

3. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ?'—இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

V. வருணனைப் பகுதி

புறாக்கள்

வீட்டுக்கு வெளிப் புறத்தில்
வேலன்வந் தேபு றாவின்
கூட்டினைத் திறக்கு முன்பு
குடுகுடு எனக்கு நித்தல்
கேட்டது காதில்! கூட்டைத்
திறந்ததும் கீழ்ச்ச ரிந்த
கோட்டுப்பூப் போற்பு றாக்கள்
குதித்தன கூட்டி னின்றே!



இட்டதோர் தாம ரைப்பூ
　　இதழ்விரித் திருத்தல் போல
வட்டமாய்ப் புறுக்கள் கூடி
　　இரையுண்ணும் ; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை ; குத்து மில்லை :
　　வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை ; கீழ்மேல் என்னும்
　　கண்மூடி வழக்க மில்லை. 2

தாய்இரை தின்ற பின்பு
　　தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும் ; குஞ்சு
　　தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கைத்
தாய்அருந் தியதைக் கக்கித்
　　தன்குஞ்சின் குடல் நிரப்பும் ;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்
　　அன்புக்கோர் எடுத்துக் காட்டாம். 3

—பாரதிதாசனார்

குறிப்புரை

பாரதிதாசனுர் சீர்திருத்தக் கவிதைகள் எழுதுவதில் வல்லுநர். இவர் கவிதைகள் இனிய நடையும் எளிமையும் உடையவை; புதுமைக் கருத்துக்கள் நிறைந்தவை. இவர் இயற் பெயர் கனக சுப்புரத்தினம் என்பது. புதுவை இவரது பிறப்பிடமாகும். இப்பாடல்கள் *அழகின் சிரிப்பு* என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

கீழ்ச்சரிந்த - கீழே தாழ்ந்த. கோட்டுப்பூ - கிளைகளில் பூக்கும் மலர். வெட்டில்லை - சண்டை சச்சரவுகள் இல்லை என்றபடி. கட்டில்லை-சுதந்திரமாக இருக்கின்றன என்பது கருத்து. கீழ் மேல் - தாழ்வும் உயர்வும் ஆகிய வேற்றுமை. கண்மூடி வழக்கம் - மூடப் பழக்கம். மூக்கு - அலகு. குடல் - வயிறு. எடுத்துக்காட்டு - உதாரணம்.

வினுக்கள்

1. வேலன் கூட்டைத் திறப்பதற்குள் புருக்கள் என்ன செய்தன ?

2. புருக்களின் வாழ்வில் காணப்படும் நற்பண்புகள் யாவை ?

3. தாய்ப்புரு அன்புக்கோர் எடுத்துக் காட்டாவது எப்படி ?

பயிற்சி

1. (1) கூட்டைத் திறந்ததும் புருக்கள்.......................................போல குதித்தன.

(2) ....போல வட்டமாகப் புருக்கள் கூடி இரை உண்ணும்.

2. அவற்றின் வாழ்வில் வெட்டில்லை; கண்மூடி வழக்கமில்லை.—இதனைத் தனிவாக்கியமாக மாற்றிஎழுதுக.

VI. பலவகைப் பாடல்

நாரை விடு தூது

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே
"எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து

கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்," எனுமே. 1

— சத்திமுற்றப் புலவர்



பாம்புக்கும் எலுமிச்சம்பழத்திற்கும் சிலேடை

பெரியவிட மேசேரும் : பித்தர்முடி யேறும் :
அரியுண்ணும் : உப்புமே லாடும்—எரிகுணமாம் :
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். 2

— காளமேகப் புலவர்

அற்புதங்கள்

பூநக்கி ஆறுகால் : புள்ளினத்துக் கொன்பதுகால் :
ஆனைக்குக் கால்பதினே ழானதே—மானேகேள்
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததனைக்
கண்டதுண்டு கேட்டதில்லை காண். 3

— காளமேகப் புலவர்

பாக்குவெட்டி

விறகு தறிக்கக் கறிநறுக்க
வெண்சோற் றுப்புக் கடகுவைக்கப்
பிறகுபிளவு கிடைத்த தென்றால்
நாலாறாகப் பிளந்து கொள்ள
பறகு பறகென் றேசொறியப்
பதமா யிருந்த பாக்கு வெட்டி
இறகுமுளைத்துப் போவ துண்டோ?
எடுத்தீ ராயிற் கொடுப்பீரே. 4

—இராமச்சந்திரக் கவிராயர்

ஊரின் பேர்

முன்னொரு ஊரின் பேராம்
முதலெழுத் தில்லா விட்டால்
நன்னகர் மன்னர் பேராம்
நடுவெழுத் தில்லா விட்டால்
கன்னமா மிருகத்தின் பேர்
கடையெழுத் தில்லா விட்டால்
உன்னிய தேனின் பேராம்
ஊரின்பேர் விளம்பு வீரே.

— இராமச்சந்திரக் கவிரா

நூல் தோற்றம்

நிலம்வளி தீநீர் வானம்
நிலவிய உலகில் உள்ள
பலபொருள் பொருளின் ஆக்கம்
பொறியினுல் பகுத்தா ராய்ந்து
விலக்குதல் விலக்கி மக்கள்
விலககாத மேன்மை ஒன்றே
உலகினுக் களித்த ஆன்ருேர்
உள்ளமே உயர்நூ லாகும். 6

— கவிஞர் வாணிதாசனுர்

நூல் வளர்ச்சி

கருத்தினில் பிறந்து, மக்கள்
காதினில் தவழ்ந்து. தாளிக்
குருத்தினில் வளர்ந்து. தோலில்,
குன்றினில் துள்ளி யாடிப்
பெருந்தோலும் உழுந்து கெற்று
மீசையும பெற்று, நூலே!
விருந்தூட்டு கின்ருய் இன்று
வெள்ளைத்தாள் கோட்டைக் குள்ளே. 7

—கவிஞர் வாணிதாசனுர்

குறிப்புரை

இப் பகுதியில் முதலைந்து பாடல்களும் தனிப்பாடல் திரட்டினின்று எடுக்கப்பட்டவை. பிற பாட்டுக்களுடன் தொடர்பு இல்லாமல் அவ்வப்போது புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்புக்குத் தனிப் பாடல்கள் என்று பெயர். இவை தனிப்பாடற் றிரட்டு, தனிச் செய்யுட்

சிந்தாமணி, தமிழ் நாவலர் சரிதை போன்ற நூல்களில் அமைந்துள்ளன.

1. வழுதி - பாண்டியன். வாடை - வாடைக்காற்று. தழீஇ - மூடி. பேழை - பெட்டி. உயிர்க்கும் - பெருமூச்சு விடும்.

2. சிலேடை - இருபொருள் வரும்படி பாடுதல். பாம்பு:—விடம் - விஷம், பித்தர் - சிவபெருமான். அரிகாற்று. உப்பும் மேலாடும் - மேலே உயர்ந்து ஆடும். எலுமிச்சம்பழம் :—பெரிய இடமே சேரும் - பெரியவர் களிடத்திற் சேரும். பித்தர் - பைத்தியம் பிடித்தவர். அரியுண்ணும் - அரியப்படும்.

3. பூநக்கி - பூவை நக்கும் வண்டு. வண்டுக்கு ஆறு கால் உண்டு. புள் இனம் - பறவை இனம். ஒன்பதுகால் - $(9 \times \frac{1}{4} = 2\frac{1}{4})$ இரண்டேகால். பதினேழுகால் $(19 \times = 4\frac{1}{4})$ நாலேகால். முண்டகம் - தாமரை மலர். நீலம் - குவளை.

4. தறிக்க - பிளக்க. பிளவு - பாக்கு.

5. ஊரின் பெயர் - மதுரை. முதலெழுத்து இல்லையேல் துரை. (மன்னர் பெயர்) நடுவெழுத்து இல்லையேல் மரை. (மான்) இறுதி எழுத்து இல்லையேல் மது. (தேன்) கன்னம் - பெருமை. மிருகம் - மான்.

கவிஞர் வாணிதாசனார் பல்லாண்டுகளாகப் புதுவைக் கல்வே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய வர். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கடலூரைச் சார்ந்தவர்; மொழி, கலை, சமூகம், தொழில் பற்றிய புதுக் கருத்துக்கள் அமைந்த இனிய எளியவி கதைகள் பாடுவதில் வல்லவர்; கவிஞர் பாரதிதாசனாரிடம் நீங்கா அன்புடைய வர். பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் என்னும் மும்மொழிப் புலமையும் உடையவர்.

வினாக்கள்

1. நாரையின் அலகு எவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளது?

2. புலவர் நாரையிடம் கூறிய செய்தி யாது?

3. 'பாம்பு எலுமிச்சம் பழத்தைப் போன்றது. எப்படி?

4. 'பூநக்கி ஆறுகால்; புள்ளினத்துக்கு ஒன்பதுகால்; ஆனைக்குப் பதினேழுகால்'—எப்படி? விளக்குக.

5. 'முண்டகத்தின் மீது முழுநிலவம் பூத்தது' - எப்படிப் பொருந்தும்?

6. பாக்குவெட்டி புலவருக்கு எந்தெந்த வகையில் பயன்பட்டது?

7. மதுரை என்னும் பெயர் ஒவ்வோரெழுத்தில்லாவிடில் எங்ஙனம் பொருள் மாறுபடும்?

8. உயிர் நூலாவது யாது?

9. நூல் வெளியீட்டு முறை எவ்வாறு வளர்ச்சியடைந்தது?

பயிற்சி

1. கூர்வாய், கேட்டதில, நாலாறு, விருந்தூட்டுகின்றுய், பெருந்தோல்—இவற்றைப் பிரித்துக் கூறுக.

2. 'நாரை விடு தூது' என்னும் பகுதியை உரைநடைப் படுத்தி எழுதுக.

3. ஏழாவது செய்யுளில் உள்ள வினையெச்சங்களை எடுத்துக் கூறுக.

உரைநடைப் பகுதி

தமிழ்த் தென்றல்

நம் தண்டமிழ் நாட்டின் தலைவராகவும், தமிழ்த் தாயின் தவமைந்தராகவும் விளங்கிய **திரு. வி. கலியாணசுந்தரனாரை** அறியாத தமிழ் மக்கள் எவரும் இரார். அவர் எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைத்த ஏந்தல் ஆவார். அவர் தமிழ் எழுத்தாளர் உலகத்துக்கே தந்தையாக விளங்கினார். தொழிலாளர் குலத்துக்குத் தாயாக இருந்தார். தூய்மையும், எளிமையும், பொதுமையும் கலந்த அறநெறி வாழ்வு வாழ்ந்த அண்ணலாரைத் தமிழர்கள் **திரு. வி. க.** என்றே செல்வமாக அழைத்துக் கொண்டாடினர்.

அவர் முன்னோர்களின் ஊர் திருவாரூர். திரு என்னும் அடைமொழி திருவாரூரையே குறிப்பதாகும். திரு. வி. க. அவர்கள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் கொள்கையுடையவராய்த் தம் வாழ்வின் இறுதிக்காலம் வரை பிறர்க்குரியாளராகவே வாழ்ந்தார். அவர் வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாகும். சுருங்கக் கூறின் அவர் மனித வாழ்வின் கலங்கரை விளக்கமாக இருந்தார் என்றே கூறலாம்.

திரு. வி. க. அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த துள்ளம் என்னும் கிராமத்தில் 1883-ஆம் ஆண்டில் தோன்றினார். அவருடைய

பெற்ருேர் விருத்தாசல முதலியாரும் சின்னம்மாளு மாவர். விருத்தாசல முதலியார் வாணிப சம்பந்தமாகச் சென்னையைச் சார்ந்த இராயப்பேட்டையில் வந்து தங்கி இருந்தார். கலியாணசுந்தரனாரின் தமயனார் திரு. வி. உலகநாதர் என்பவர். இருவரும் இளமையி லிருந்தே உயிரும் உடலும்போல இணைபிரியாது அன் புற்று இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

முதுமைப் பருவத்தில் மிக மெலிந்த உடலோடு காட்சியளித்த நம் திரு. வி. க. இளமைப் பருவத்தில் 'திண்ணன்' என்று பலரும் கூறும் வண்ணம் நல்ல உடற்கட்டு வாய்க்கப் பெற்றிருந்தார். அவர் சிறுவராக இருந்தபோதே யாருக்கும் அஞ்சாத துணிவுடையவ ராக விளங்கினார். 'விளையும் பயிர் முளையிலே தெரி யும்' என்னும் பழமொழிக்கிணங்க இளமையிலேயே அவரிடம் அருங்குணங்கள் அரும்பிக் கிடந்தன.

அவர் ஆறு வயதுச் சிறுவராக இருந்தபோது ஒரு நாள் தம்மையொத்த சிறுவர்களுடன் தெருவில் விளையா டிக்கொண்டிருந்தார். அவ் வமயம் அமீனா **முனிசாமிப் பிள்ளை** என்பவர் சலங்கைகள் கட்டப்பட்ட தமது இரட்டை மாட்டு வண்டியில் இவர்ந்து சென்ருர். அக் காலத்தே அமீனா முனிசாமிப் பிள்ளை என்ருல் சிறி யோர்க்கும் பெரியோர்க்கும் அச்சமாக இருக்கும். அவர்கள் மரியாதையுடன் ஒருபுறமாக ஒதுங்கிக்கொள் வார்கள். எனவே அன்று கலியாணசுந்தரனாருடன் விளையாடிய பிள்ளைகள் வண்டியின் 'கலகல' வென்ற ஒலி கேட்டு, "ஐயோ! அமீனா வருகிருர்," என்று கூறிக் கொண்டே ஓடத்தொடங்கினார்கள். ஆனால் கலியாண சுந்தரரோ அச்சம் சிறிதுமின்றி ஓடும் நண்பர்களைப்

பார்த்து, "ஏன் இப்படிப் பயந்து ஓடுகிறீர்கள்? அமீனு தலையில் கொம்பு முளைத்தவரோ?" என்று கேட்டார். விளையாடும் சிறுவரின் பேச்சை அமீனு செவிமடுத்தார்.



அதற்காக அவர் வருத்தப்படவில்லை. வண்டியைவிட்டிறங்கினுர். கலியாணசுந்தரரைக் கையில் பற்றிக் கொண்டு அவர் தம் தந்தையாரை அடைந்தார். தந்தை

யார் விருத்தாசல முதலியாரைப் பார்த்து, "இச்சிறுவன் பிற்காலத்தில் பேரறிஞனாக வரக்கூடியவன். இவனை நீங்கள் நல்ல முறையில் வளர்த்தல் வேண்டும்," என்று கூறிச் சென்றார்.

திரு. வி. க. வும் அவர்தம் அண்ணலாரும் இராயப் பேட்டையில் உள்ள வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பில் சேர்ந்து பயின்றனர். கலியாணசுந்தரனார் அப்பள்ளியில் ஆறும் படிவம் வரையில் படித்தார். அவ் வமயம் அப்பள்ளியில் யாழ்ப்பாணம். **நா. கதிரை வேற் பிள்ளை** என்னும் பேரறிஞர் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தார். அவரது தோற்றப்பொலிவும், பேச்சுவன்மையும் கலியாணசுந்தரரைப் பெரிதும் கவர்ந்தன. தமிழில் அவரது நுண்மாண் நுழை புல மையைக் கண்டு வியந்தார். தாமும் அவரைப்போலவே தமிழ்ப்புலமை நிறைந்து விளங்க வேண்டுமென விழைந்தார். அவர் ஆறும் படிவ அரசாங்கத் தேர்வுக் குச் செல்லும் சமயத்தில், தம் தமிழாசிரியர் மீது அருட் பாவைக் குறித்து நடந்த ஒரு வழக்கின்பொருட்டுச் சான்று பகரவேண்டியவரானார். தேர்வு நடைபெற வேண்டிய நாளிலேயே சான்றுக்குச் செல்லவேண்டும். சான்றுக்குச் செல்வதா? தேர்வுக்குப் போவதா? இரண்டு எண்ணங்களும் அவரை மாறிமாறி வாட்டின. ஒரு பக்கம் தம் ஆசிரியர்: மற்றொரு பக்கம் வாழ்வு. அவர் தம் ஆசிரியர்பால் இருந்த அன்பே விஞ்சியது. மறுநாள் நீதிமன்றத்துக்குச் சான்று கூறச் சென்றார். தேர்வுக்குச் செல்லவில்லை. அத்துடன் அவர் பள்ளிப் படிப்பு முற்றுப்பெற்றது. இங்ஙனம் திரு. வி. க. விடம் தியாக உணர்வு இளமையிலேயே ஊறிக் கிடந்தது.

சில நாட்களுக்குப் பின்னர் கதிரைவேற் பிள்ளை காலமானார். நம் சுந்தரனார் மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரை அடைந்தார். அவர்பால் தமிழிலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கண்ணுங் கருத்துமாகக் கற்றறிந்தார். அவர் தமிழ்மொழியே யன்றித் தனிமையில் ஆங்கிலமும் நன்கு பயின்றார். பாதிரிமார்கள் பலருடன் அடிக்கடி அளவளாவிக் கிறித்தவ சமயத்தின் சீரிய கருத்துக்களைத் தெளிவுறக் கற்றார். மற்றும் பலப்பல அறிஞர்களின் நூல்களைப் பயின்றும், சொற்பொழிவுகளைக் கேட்டும் தம் பொது அறிவைக் கடல்போலப் பெருக்கிக்கொண்டார்.

1906-இல் கலியாணசுந்தரனார் ஸ்பென்ஸர் கம்பெனியில் இரண்டாண்டுகள் பணியாற்றினார். பின்னர் ஆயிரம் விளக்கு என்னுமிடத்திலிருந்த வெஸ்லி பள்ளிக்கூடத்தில் முதற் படிவ ஆசிரியராக இருந்தார். ஆறு ஆண்டுகட்குப்பின் வெஸ்லி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரானார். ஆனால் அப் பதவியில் அவர் நீடித்துப் பணியாற்ற விரும்பவில்லை. ஒன்றரையாண்டுகளே ஆசிரிய சேவை புரிந்தார். நம் அருமைத் தாய்நாடு பரம்பரை பரம்பரையாக அடிமைத் தளையிற் சிக்கி இருக்கும் அவல நிலையை எண்ணி எண்ணி ஏங்கினார். 'நம்முடைய நாட்டை நாமே ஆள வேண்டும். வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்ற வேண்டும்' என்பனபோன்ற கருத்துக்கள் அவ்வமயம் நாட்டில் உலவின. அக் கருத்துக்கள் நம் பெரியாரை ஈர்த்தன. 1917-ஆம் ஆண்டில் **தேசபக்தன்** என்னும் வெளியீட்டைத் துவக்கினார். அவ் வெளியீட்டுக்குப் பின் **நவசக்தி** என்னும் வாரத்தாளை

நடத்தி மக்களினிடையே நாட்டுப்பற்றை வளர்த்தார்.

இவற்றுக்கிடையே நம் பெரியார் **கமலாம்பிகை** என்னும் பெண்மணியை மணந்து ஆறு ஆண்டுகளே இல்லறம் நடத்தினர். அவ் வம்மையார் 1918-இல் மண்ணுலக வாழ்வை நீத்தார். அவருக்குப் பிறந்த இருகுழந்தைகளும் பிறந்த சின்னாளிலேயே மறைந்தன. நம் பெரியார் துணைவியை இழந்த பின்னர் மறுமணம் செய்து கொள்ளாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்து வந்தார். இளம் பருவத்தே மனைவியைத் துறந்த அவர் தமிழ்ப்பற்றும் தாய் நாட்டுப் பற்றுமே நிறைந்து ஒல்லும் வகையில் அறப்பணியாற்றி வந்தார். இவ்வருங்குணங் கருதி அவரைத் தமிழர்கள் **தமிழ் முனிவர்** என்றழைக்கலாயினர்.

தொழிலாளர் நிலை உயரவேண்டும் என்னும் எண்ணமும் திரு. வி. க. அவர்களிடம் நிலைத்திருந்தது. அதனால் தொழிலாளர் சங்கமொன்றை நிறுவி அவர்கள் ஒற்றுமைக்கு அடிகோலினர். அவர்கள் உரிமையைக் காப்பதற்காகப் பெரும் போராட்டங்கள் பல நடத்தினர். ஒரு சமயம் பக்கிங்காம் கர்னடிக் பஞ்சாலையில் மிகப்பெரிய வேலைநிறுத்தம் ஏற்பட்டது. ஆங்கில ஆட்சியினரால் தொழிலாளர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கலியாணசுந்தரனர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவரை அரசியலார் நாடு கடத்த உத்தரவிட்டனர். அதற்காக அறிஞர் திரு. வி. க. சிறிதும் அஞ்சவில்லை. தொழிலாளரின் சிறந்த துணைவராக இருந்து அவர்களுக்கு ஊக்கமளித்தார். அவ் வமயம் முதலமைச்சராக இருந்த **பானகல்**

மன்னர் நாடு கடத்தும் உத்தரவை எதிர்த்துப் போராடி னார். அவர் முயற்சியால் அவ் வுத்தரவு நீக்கப் பெற்றது.

திரு. வி. க. தமிழ்மொழி, சமயம், சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், இளைஞர் இயக்கம் முதலிய துறைகளிலும் பெரும்பணி யாற்றினார். இத்துறைகளில் அவர் சற்றேறக்குறைய ஐம்பது நூல்களை இயற்றி யுள்ளார். அந் நூல்கள் அனைத்தும் இனிய செந் தமிழ் நடையில் இயன்றவை. படிக்கப்படிக்கத் தெவிட் டாத சொல்லழகும் பொருளழகும், தொடையழகும் நடையழகும் வாய்ந்தவை. தமிழ் உரைநடை நூல் களே யன்றிப் பலப்பல கவிதை நூல்களும் ஆக்கி யுள்ளார்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் எழுதிய நூல்களில் 'முருகன் அல்லது அழகு,' 'பெண்ணின் பெருமை,' 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என் னும் உரைநடை நூல்கள் குறிப்பிடத்தக்கவை. முரு கன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், பொதுமை அருள் வேட்டல் முதலிய கவிதை நூல் கள் பொருட் செறிவு வாய்ந்தவை. அவர் சைவ சித் தாந்த சமாஜ மகாநாடுகளுக்கு மும்முறை தலைமை தாங்கியுள்ளார். அவர் காந்தியடிகளாரிடம் நீங்காத அன்புடையவர். காந்தியடிகளின் கொள்கைகளையே தம் நூல்கள் பலவற்றிலும் விளக்கிக் காட்டியுள்ளார். மேடைகளில் தாம் பேசும் போதும் காந்தீயக் கொள்கைகளையே வற்புறுத்திப் பேசுவார். அவர் போலித் துறவையும் ஆடம்பரமான வாழ்க்கையையும் அறவே வெறுப்பவர். திருவள்ளுவர் கருத்துக்களே

உலகில் எங்கும் பரவி நிலவவேண்டும் என்பது அவர் தம் நோக்கம். மக்கள் உலகத்தை ஒரே குடும்பமாகக் கருதி வாழவேண்டுமென அவர் விரும்பினார். அவர் தம் பேருரைகளின் தொகுப்புக்குத் **தமிழ்த் தென்றல்** என்று பெயர்.

திரு. வி. க. அவர்கள் இளைஞர்களின் முன்னேற்றத்துக்காகப் பெரிதும் உழைத்தவர். மாணவர்கள் அவர்தம் சொற்பொழிவைக் கேட்கத் தேனீப்போலச் சூழ்ந்துகொள்வர். இளைஞர்களால்தான் இந்த வுலகம் ஈடேறும் என்னும் உறுதியான நம்பிக்கையே அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. பற்பல மாநாடுகளிலும் பிற இடங்களிலும் இளைஞர்களை ஊக்கும் வீரவுரைகளையே முழங்கினார். தமிழிளைஞர்களிடம் அவருக்குத் தணியாத அன்பு உண்டு.

தமிழ்ப் பெரியாரின் இறுதி வாழ்க்கை மிகவும் உருக்கமானது. அவர் இறுதிக்காலத்துக்கண்ணொளியை இழந்தபோதும் கருத்தொளியை இழக்காமல் அறவுரை நூல்கள் பல ஆக்குவதில் முனைந்திருந்தார். அவர் பார்வை இழந்த அச் சமயத்திலும் இருளில் ஒளி, இருமையும் ஒருமையும், அருகன் அருகே, முதுமை உளறல் முதலிய நூல்களை இயற்றினார். மரணப்படுக்கையிலும் படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை ஆக்கினார். என்னே அவர்தம் தியாகத் திறன் !

மொழிக்கும் நாட்டுக்கும் விழுப்பணியாற்றிய தமிழ்த் தந்தையார் திரு. வி. க. சில திங்கள் உடல் நலமின்றி 17-9-1953 வியாழக்கிழமையன்று தமிழ்நாட்டுப் பேரறிஞர்களும், ஆடவரும், மகளிரும், இளைஞரும், முதியோரும், உற்றாரும், உறவினரும் கதறி

அழ இராயப்பேட்டையில் உள்ள தமது இல்லத்தில் மறைந்தார். தமிழன்னை தன் கண்மணியை இழந்து கண்ணீர்விட்டாள். நாடெங்கும் உள்ள தமிழ் மக்களனைவரும் ஒப்புயர்வற்ற அரிய தலைவரை இழந்துவிட்டோமே என்று தவிக்கலாயினர். தமிழ்ப் பெரியாரின் சடலம் பிரம்பூரிலுள்ள தொழிலாளர் சங்கத்திலிருந்து ஒரு மைல் நீளமுள்ள வெள்ளம் போன்ற மக்கள் ஊர் வலத்துடன் மயிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக்கடன் ஆற்றப்பெற்றது. ஊர்வலத்தில் அன்று பெய்தபெருமழையையும் மக்கள் பொருட்படுத்தவில்லை. தமிழ்ப் பெரியாரின் பொன்னுடல் மறைந்தது. ஆயினும் அவர்தம் புகழுடல் தமிழ் மொழியும், தமிழ் நாடும் உள்ளளவும் நிலைபெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

திரு வி. க. அவர்கள் அன்பே உருவமானவர்; தூய உள்ளம் படைத்தவர்; எளிய வாழ்க்கை உடையவர். அவர் என்றும் செல்வத்தைப்பற்றியே சிந்தித்ததில்லை. பிறர் நலம் போற்றுவதிலேயே அவர் நாட்டம் சென்றது. அவர் சமரச சன்மார்க்க நிலை கண்டவர். அறத்தன்மை பூண்ட அந்தணர். நேர்மைக்கு உறைவிடமானவர். மரணத்துக்கும் அஞ்சாத மாவீரர். தமது மரணப்படுக்கையிலும் அவர் தமிழர் வாழ்வின் உயர்வைப்பற்றியே எண்ணியும் பேசியும் வந்தார். அவர் தம் இறுதி வேண்டுகோளும், தமிழகத்தின் எதிர்காலத்தைப்பற்றி அவர்கூறிய உரைகளும் இன்னும் நம் காதுகளில் எதிரொலிக்கின்றன. அவர், “என் உயிர் உடலை விட்டு நீங்கிய பிறகு எடுத்துவந்து சாது அச்சக முன்றில் கிடத்துங்கள். எலலோரும் வந்து பார்க்கட்டும்,

அப்போது என்க்காக எவரும் அழலாகாது. பின்னர் இடுகாடு சென்று எரியூட்டி விடுங்கள். உங்கள் கடன் அன்றோடு ஒழிந்தது. அதன்பின் எனக்காக எத்தகைய சடங்குகளும் கூடா. மீறிச் செய்பவரை என் ஆவி சபிக்கும்," என்றார்.

தமிழகத்தின் எதிர்காலத்தைப்பற்றிக் கூறுகையில், அவர், "மரணம் என்னைத் தழுவ நிற்கின்றது என்பதை அறிந்து மனமகிழ்கிறேன். எல்லோரையும் போல மரணம் கண்டு எனக்கு அச்சம் எழவில்லை. எத்தனையோ பேருடன்—பலதுறை அன்பர்களுடன்—பழகினேன். ஆனால் இப்போது தமிழ்த்துறை அறிஞர்களே அடிக்கடி நினைவில் வந்து நிற்கிறார்கள். நான் நல்ல முறையில் வாழ்ந்துவிட்டேன். இன்று தமிழக ஞாயிற்றைக் கரிய மேகக்கூட்டங்கள் மூடிக் கொண்டிருக்கலாம். ஆனாலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இருட் படலம் விலகும். இளஞாயிறு எழுந்து கதிர் பரப்பும்: தமிழகத்துக்கு நல்ல எதிர்காலம் உண்டு, தாழ்வு வேண்டா," என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வுரைகளைக் கூர்ந்து நோக்கின தமிழ்த் தந்தையார் திரு. வி. க. வின் தமிழ் மாண்பை நன்கு அறியலாம். இளைஞர்கள் அவர் தம் நூல்களைக் கற்று, வாழ்வைப் பின்பற்றி வளமுற வேண்டும். அவர்தம் வாழ்க்கை யாவருக்குமே படிப்பினையாக இருக்கவேண்டும்.

பயிற்சி

பொருளறிக :

ஏந்தல்
தூய்மை
எளிமை
பொதுமை
இறுதி
திண்ணம்
அரும்பி
இவர்ந்து
பேரறிஞன்
பொலிவு
சான்று
விஞ்சியது
ஆதிக்கம்
ஒல்லும் வகை
காந்தியம்
விழுப்பணி
ஞாயிறு
முன்றில்
கதிர்

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

சுருங்கக் கூறின், உயிரும் உடலும்போல, வாய்க்கப் பெற்று, மாறி மாறி, எண்ணி எண்ணி, வெளியேற்ற, ஈடேறும்.

விடை கூறுக :

1. திரு. வி. க. அவர்களுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

2. கலியாணசுந்தரனாரின் பிறப்பிடம் யாது? பெற்றோர்கள் யாவர்?

3. கலியாணசுந்தரனார் யாருக்கும் அஞ்சாத துணிவு உடையவர் என்பதை இளமையிலேயே எவ்வாறு புலப்படுத்தினார்?

4. திரு. வி. க. அவர்களின் எதிர்காலம்பற்றி அமீனா முனிசாமிப் பிள்ளை என்ன கூறினார்?

5. அவர்தம் ஆசிரியர்பால் நீங்காத அன்புடைவர் என்பதைக் குறிப்பிடும் நிகழ்ச்சியை விளக்குக.

6. அவர் யார் யாரிடம் கல்வி பயின்றார்?

7. திரு. வி. க. அவர்கள் ஆற்றிய உத்தியோகங்கள் யாவை?

8. தமிழ் முனிவர் என்னும் பெயர் அவருக்கு எவ்வாறு பொருந்தும்?

9. திரு. வி. க. அவர்கள் தொழிலாளர்களுக்குச் செய்த தொண்டுகள் யாவை?

10. அவர் இயற்றிய தமிழ்த் தொண்டுகள் யாவை?

11. தமிழ்ப் பெரியார் இளைஞர்களிடம் மிகவும் பற்றுடையவர் என்பதைப் புலப்படுத்துக.

12. திரு. வி. க. அவர்களின் தியாகத்தைக் குறிக்கும் சான்றுகள் யாவை?

13. தமிழகத்தின் எதிர்காலம்பற்றி அவர் என்ன கூறியுள்ளார்?

இலக்கணம்:

1. கலியாணசுந்தரனார் ஓடும் நண்பர்களைப் பார்த்து, "ஏன் இப்படிப் பயந்து ஓடுகிறீர்கள்? அமீனா தலையில் கொம்பு முளைத்தவரோ?" என்று கேட்டார்.—இதனை அயற்கூற்று வாக்கியமாக மாற்றிக் கூறுக.

2. ஆசிரியர்பால் இருந்த அன்பே விஞ்சியது. மறுநாள் நீதிமன்றத்துக்குச் சான்று கூறச் சென்றார்.—இத்தனி நிலை வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாகச் சேர்த்து எழுது.

2. வில் வீரன்

அவன் சொந்தமாக ஓர் ஆட்டு மந்தை வைத்திருந் தான். தினந்தோறும் அந்த மந்தையைப் புல்வெளி களுக்கு ஓட்டிச்சென்று மேய்த்து வருவான்; மிகவும் துன்பப்பட்டு வேலை செய்வான்; சிக்கனமாகச் செலவு செய்வான்; ஆகையால் உணவுக்குக் கவலையே இல்லா மல் அமைதியாக வாழ்ந்து வந்தான்.

அவனுக்கு ஆடுமாடு மேய்க்க மட்டுந்தான் தெரி யும் என்று நினைக்க வேண்டா. வில் வித்தையிலும் அவன் கெட்டிக்காரன். அவனை ஒரு சிறந்த வில்வீரன் என்று சொல்லலாம். அவன் பெயர் **வில்லியம் டெல்.** அவன் சொந்த நாடு ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள ஸ்விட்ஸர்லாந்து. வில்லியம் டெல்லுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் வயதில் சிறியவன். அழகான உடல்; சிரித்த முகம்; தூய்மையான மனம்; சுருள் சுருளாக வளர்ந்த தலைமயிர்—இவற்றுடன் அவன் எப் போதும் ஆடிப்பாடிக் கொண்டு இன்பமாகத் திரிவான்.

ஆட்டு மந்தையிலுள்ள ஆடுகளெல்லாம் அவனு டைய தோழர்கள். ஆட்டுக் குட்டிகளுடன் அவன் குதித்து ஓடி விளையாடுவான். ஒவ்வொரு ஆட்டுக் குட்டிக்கும் அவன் ஒவ்வொரு பெயர் வைத்து அழைத்து வந்தான்.

இங்ஙனம் தந்தையும் மகனும் இன்பமாகவும், அமைதியாகவும் காலங்கழித்து வந்தனர். அந்தச் சம யம் அவர்களுடைய நாட்டை அந்நியர்கள் ஆண்டுவந்த னர். அவர்கள் மக்களை மிகவும் இழிநிலையில் நடத்தி வந்தனர். அங்கே செங்கோல் செத்துக்கிடந்தது!

கொடுங்கோல் குதித்து ஆடியது! அப்போது, ஸ்விட்ஸர்லாந்தை அந்நியர்களின் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வந்தவன் மிகவும் பொல்லாதவன்; இரக்கம் என்பதே இல்லாத அரக்கனைப் போன்றவன்: ஆணவம் மிகுந்தவன்: ஆடம்பரப் பிரியன்.

ஒருநாள், அவன் தன்னுடைய தொப்பியை உயரமான ஓரிடத்தில் மாட்டி வைத்தான். "இங்குள்ள அடிமைகளுக்கெல்லாம் ஓர் ஆணை. இங்கு வரும் ஒவ்வொருவரும் என்னுடைய தொப்பிக்குத் தலைகுனிந்து வணக்கம் செலுத்தவேண்டும். இல்லையேல் அவர்கள் உயிர் துறக்க நேரும்," என்று தன்னுடைய அதிகாரத் திமிரைக் காட்டினான், அந்தப் பிரதிநிதி!

*　　　*　　　*

அன்று காலை நேரம். வில்லியம் டெல்லும். அவனுடைய மகனும் குடிசையை விட்டுக்கிளம்பினர். போகும் போது வழக்கம் போல் வில்லைக் கையிலே எடுத்துக் கொண்டான் வில்லியம் டெல். தந்தையும் மகனும் ஆடுகளை ஓட்டிக் கொண்டு சென்றனர்.

செல்லும் வழியிலே ஓரிடத்தில் மக்கள் திரள் திரளாக நின்றனர். அவர்களுக்கு இடையிலே, ஓர் உயரமான இடத்தில் ஒரு தொப்பி தொங்கிக்கொண்டிருந்தது. அத்துடன் அங்கு நின்ற காவலர்கள். "ஏ அடிமைகளே, வணக்கம்

செலுத்துங்கள். தொப்பிக்கு வணக்கம் செலுத்துங்கள்." என்று அந்தக் கூட்டத்தாரைப் பார்த்துக் கத்தினார்கள்.

வில்லியம் டெல் இந்தக் காட்சியைக் கண்டான். தொப்பிக்கு அண்மையில் வந்து நின்றான். ஆனால், வணக்கம் செலுத்தவில்லை. இதைப் பார்த்த காவலர்கள், "வணங்கு. உம், தலை குனிந்து வணங்கு!" என்று உரக்கக் கத்தினர்.

டெல் அப் பேச்சைக் கேட்டு அணுவளவும் அச்சமின்றிக் குன்றுபோல் நிமிர்ந்து நின்றான். அவன் காவலரைப் பார்த்து, "முடியாது! வணக்கம் செலுத்த முடியாது! எல்லாம் வல்ல இறைவனைத்தான் நான் வணங்குவேன். என்னை இவ் வுலகில் படைத்துக் காப்பவன், இறைவனேயாவான். என்னுடைய உயிர் அந்நியர் கையிலே இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால், என் மனச்சான்று என்னிடத்தில் தான் இருக்கிறது." என்று அமைதியாகப் பதிலளித்தான்.

இதைச் செவியுற்றதும் அங்கிருந்த மக்கள் மலைத்தனர். காவலாளிகள் கடுங்கோபம் கொண்டனர். அந்தக் கொடுங்கோலன் கோபங்கொண்டான். நாகம்போல் சீறினான்.

"ஆ! அவனுக்கு அவ்வளவு ஆணவமா? என்னுடைய ஆணையை அவன் கேலி செய்கிறானா? அவனை விடாதீர்கள். பிடித்து வாருங்கள். அரசனையே எதிர்த்த அவனை வாளா விடக்கூடாது. உயிரைப்போக்கவேண்டியதுதான்." என்று கண்களில் கனற்பொறி பறக்கக் கூறினான்.

உடனே, வில்லியம் டெல்லைப் பிடிக்கக் காவலர் கள் வந்தனர். அவர்களைக் கண்டு டெல் ஓடவில்லை: ஒளியவில்லை; நின்ற இடத்திலேயே ஆடாமல் அசையா மல் நின்றான்! அதனால் அவனை எளிதில் கைது செய்து விட்டனர்.

டெல், கொடுங்கோலன் முன்னால் கொண்டு வரப் பட்டான். அவனைப் பார்த்ததும் அந்தக் கொடுங்கோ லன், "சிறிது பொறுங்கள். ஸ்விஸ் தேசத்தவர் குறி தவறாது அம்பு எய்பவர்கள் என்று எல்லோரும் கூறு கிறார்கள்; அதை இப்பொழுது பார்த்துவிடலாம்," என்று கூறிக் காவலர்களிடம் ஓர் ஏற்பாட்டைச் செய்யும்படி கூறினான்.

அந்த ஏற்பாட்டின்படி பணியாளர்கள் வில்லியம் டெல்லின் அருமை மகனை அழைத்துச் சென்றனர். அங்கிருந்த ஒரு கிச்சிலி மரத்தில் அவனைப் பிணித்த னர். பிறகு, அவன் தலையிலே ஓர் ஆப்பிள் பழத்தை வைத்தனர். அந்தச் சிறுவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இங்குமங்கும் பார்த்துக்கொண்டே நின்றான்.

சிறுவனுக்கு ஐம்பதடி தூரத்தில் டெல்லைக் கொண்டு வந்து நிறுத்தினர். நிறுத்திய பிறகு, "உம், இப்போது நீ என்ன செய்யவேண்டும். தெரியுமா? அதோ, அந்தச் சிறுவனின் தலைமேல் இருக்கிறதே ஆப் பிள் பழம், அதைப்பார்த்து அம்பெய்தல் வேண்டும். நீ விடும் அம்பு, அந்த ஆப்பிளை இருதுண்டாகப் பிளந்து விடவேண்டும். அப்படிச் செய்யின் உனக்கு விடுதலை கிடைக்கும். எங்கே, உன் வில்வித்தையைக் காட்டு, பார்க்கலாம்;" என்று கடுமையான குரலில் கூறினான் அந்தக் கொடுங்கோலன்.

டெல் திடுக்கிட்டான். ஆ! இஃது என்ன தண்டனை! நான் ஏதோ பெருங்குற்றம் செய்துவிட்டதாகக் கூறுகிறீர்கள். சரி, அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் குற்றம் செய்தவனுக்குத்தானே தண்டனை கொடுக்கவேண்டும்? எதற்காக ஒரு பாவமும் அறியாத இந்தச் சிறுவனைப் பழிவாங்க வேண்டும்? ஐயோ! என் மகனை விட்டுவிடுங்கள்," என்று அரற்றினான்.

அதற்குக் கொடுங்கோலன், "என்னால் உன் மகனுக்கு ஒருவிதத் தீங்கும் இல்லை. ஆனால் அவன் உயிர் உன் கையில்தான் இருக்கிறது. நன்றாகக் குறி பார்த்து அம்பு விடவேண்டும். தவறிப்போய் உன் மகன்மீது அம்புபட்டு, அதனால் ஒரு சொட்டு இரத்தம் வெளிவந்தால் நீயும் பிழைக்கமாட்டாய். உன் உயிரை வாங்கி விடுவோம். உன்னுடைய வில்லைக் கையில் எடு. அதில் அம்பைப் பூட்டிச் சரியாகக் குறிபார்த்து விடு. ஆப்பிள் பழந்தான் உன்னுடைய இலக்கு. அதுதான் உனக்கு விடுதலை அளிக்கப்போகிறது. தயங்காதே!" என்று முழங்கினான்.

இவற்றைக் கேட்டதும் அங்கிருந்த மக்களில் சிலர் அடங்காத சினங்கொண்டனர்: சிலர் மனமுருகினர்; சிலர் அந்தக் கொடுங்கோலனை மனத்திற்குள் வைதனர். பெண்கள் வாய்விட்டுக் கதறி அழுதனர்.

டெல், சிறிதுநேரம் ஒன்றும் புரியாமல் அப்படியே சிலைபோல நின்றான். பிறகு வில்லைக் கையிலே எடுத்து அதில் நாணேற்றினான். அப்படியே வாயை மூடிக் கொண்டு அசையாமல் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தான்.

இக காட்சியைக் கண்ட மக்கள் கண்ணீர் விட்ட

னர். அவர்கள் ஏற்கனவே அந்நியர்களால் அளவுக்கு மிஞ்சிய துன்பங்களை அடைந்திருக்கின்றனர். அவை யெல்லாம் போதாவோ? இந்த இரக்கமான காட்சியையுமா பார்க்கவேண்டும்?

அசையாமல் நிற்கும் தந்தையை மகன் பார்த்தான்.

"தந்தையே! ஏன் தயங்குகிறீர்? நேராக அம்பை விடுங்கள். உங்கள் குறி என்றுமே தவருது. இன்றும் அது தவறப் போவதில்லை," என்று உரக்கக் கூறினன்.

"மகனே, உன்னைக் கடவுள் காப்பாற்றுவார். உன் வீரத்தைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்," என்று கூறிக்கொண்டே வில்லியம் டெல் ஆப்பிள் பழத்தை நோக்கிக் குறி வைத்தான்.

மறுகணம் அம்பு விர்ரெனப் பறந்து சென்றது. நேராகச் சென்று ஆப்பிள் பழத்தில் பாய்ந்தது; உடனே ஆப்பிள் பழம் இரண்டாகப் பிளந்து மரத்தடியில் விழுந்தது!

"நன்று! நன்று! அருமை மைந்தன் தப்பிவிட்டான்!" என்று அங்குக்கூடி நின்றவர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

வில்லியம் டெல்லின் வில்லின் திறமையைக் கண்ட கொடுங்கோலனுக்கு என்ன சொல்வது, என்ன

செய்வது என்றே தெரியவில்லை. அவன் நாணத்தால் தலை கவிழ்ந்தான். எனினும் அவன் டெல்லை நோக்கி, "வில் வீரனே! நீ தைரியமாக நான் இட்ட கட்டளையை நிறைவேற்றிவிட்டாய். ஆகையால், நானும் என்னுடைய வாக்கை நிறைவேற்றுகிறேன். நீயும் உன் மகனும் ஆடுகளுடன் வீடு செல்லலாம். உங்களுக்கு விடுதலை!" என்றான்.

வில்லியம் டெல், "அப்படியா! சரி, எனினும் உங்களுக்கு நான் இப்போது நன்றி செலுத்தப் போவதில்லை. கடவுள் ஒருவருக்குத்தான் நான் நன்றி செலுத்துவேன். அவருக்குத் தான் நான் மனமார நன்றி செலுத்தக் கடமைப் பட்டவன். ஆனால் ஒன்று மட்டும் நீர் தெரிந்துகொள்ள வேண்டும். நான் எய்த அம்பு, குறி தவறி என் மகன் மீது பட்டு, அவன் இறந்திருப்பின் அதே நேரத்தில் என் அடுத்த அம்பு உமது உயிரைப் போக்கியிருக்கும். இதோ பாருங்கள். இந்த இரண்டாவது அம்பை நான் சித்தமாகவே வைத்திருந்தேன். நல்ல வேளை, கடவுள் உம்மைக் காப்பாற்றினார். அவரை நீர் மனமாரப் போற்ற வேண்டும்; வாயார வாழ்த்தவேண்டும்."

இறைவன் நேர்மையானவர்களுக்கு உதவி புரிகிறார்; பாவிகளுக்கு மன்னிப்பு அளிக்கிறார்; வலியவர்களிடமிருந்து எளியவர்களைக் காப்பாற்றுகிறார்; செருக்கு

உடையவர்களைத் தலை குனிய வைக்கிறார். அவரையே நான் போற்றுவேன். அவருக்கே நான் மரியாதை செலுத்துவேன்."—இங்ஙனம் உரக்கக் கூறிக் கொண்டே வில்லியம் டெல், தன்னுடைய அருமை மக னுடன் ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

அவர்கள் செல்லும் திசையையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றான், அந்தக் கொடுங்கோலன். டெல் சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவன் செவி களில் விநாடிக்கு விநாடி விடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தது.

பயிற்சி

பொருளறிக :

துறக்க	மலைத்தல்	கனல்
திரள்	ஆணை	பிணைத்தனர்
மனச்சான்று	வாளா	எய்தல்

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

திரள் திரளாக, எல்லாம் வல்ல, மலைத்தனர், நாகம் போல் சீறி, ஒரு பாவமும் அறியாத.

விடை கூறுக :

1. வில்லியம் டெல்லின் அருங்குணங்கள் யாவை ?
2. ஸ்விட்ஸர்லாந்துக் கொடுங்கோலன் புரிந்துவந்த அநீதி யாது ?

3. வில்லியம் டெல் தொப்பிக்குத் தலை வணங்க மறுத்ததேன்? அவன் கூறிய வீர வுரைகள் யாவை?

4. கொடுங்கோலன் வில்லியம் டெல்லுக்கு இட்ட கட்டளை யாது?

5. வில்லியம் டெல்லின் வில்லாற்றலைப் புலப் படுத்துக.

6. இப் பாடத்தால் நீ அறியும் நீதி யாது?

இலக்கணம் :

1. (i) அவன் தன்னுடைய தொப்பியை உயரமான இடத்தில் மாட்டி வைத்தான்.

(ii) ஒவ்வொரு ஆட்டுக்குட்டிக்கும் ஒவ்வொரு பெயர் வைத்து அழைத்து வந்தான்.

— இவ் வாக்கியங்களில் செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றி எழுதுக.

2. ஆ! இஃது என்ன தண்டனை!—இஃது என்ன வாக்கியம்? இதனைப் பொருள் மாறாதபடி செய்தி வாக்கிய மாக மாற்றிக் கூறுக.

3. அடிமை நீக்கிய அண்ணல்

அமெரிக்காவில் **கெண்டகி** மாகாணத்தில் **நியூ ஆர்லியான்ஸ்** என்னும் நகரமொன்று உள்ளது. அதற்கண்மையில் **ராக்ஸ்பிரிங்** என்னும் ஒரு சிற்றூரில் ஒருநாள் காற்றாலும மழையாலும் சிதைந்து கிடந்த குடிசையினின்றும் சிறுவனொருவன் விறகுக் கட்டைத் தலையிற் சுமந்து வெளியே சென்றான். ஒட்டிய கன்னங்களும், உருக்குலைந்த மேனியும், கந்தலாடையும் உடைய அச் சிறுவன் அந் நகரின் சந்தையில் விறகுச் சுமையை விற்றுவிட்டு வீடு திரும்பினான்.

வரும் வழியில் ஒரு வணிகன் சில நீக்ரோ மக்களை ஏலத்தில் விற்றுக் கொண்டிருந்தான். நகர மக்கள் திரளாகக்கூடி ஏலத்தில் எடுத்த அடிமை நீக்ரோக்களை ஆடு மாடுகளைப்போல் கடத்திச் சென்றனர். அவர்கள் அவ் வடிமைகளைத் தம் விருப்பம்போல் கடுமையாக நடத்தி வந்தனர். அந் நிலையை உணர்ந்த சிறுவன் கடிதில் தன் இல்லம் அடைந்து தந்தையிடம் நடந்ததைக் கூறி, "மனிதனை மனிதன் மாடுபோல் நடத்துவது இந் நாட்டவர்க்குத் தகுந்த செயலோ?" என்றான். அதற்கு அவர், "இதிலொன்றும் வியப்பில்லை. இது பரம்பரை பரம்பரையாக நடந்து வரும் நிகழ்ச்சிதானே?" என்றார். அது கேட்ட மகன் ஆத்திரத்துடன், "அப்பா, என்றேனும் ஒருநாள் நான் ஆட்சிப் பீடத்தின் அதிபதியாக வரும்போது இந்த அடிமை வாணிபத்தை அழிப்பது தான் என் முதல் வேலையாகும்," என்று கூறினான். வறுமையால் வாடும் தந்தை தன் மைந்தனின் வீரவுரைகள் வெற்றுரைகளேயெனக் கேலிச் சிரிப்புச் சிரித்தார்.

தந்தையின் ஏளனமும், ஏழ்மையும், கல்வியின்மையும் சூழ்ந்த அச் சிறுவன் அன்று கூறிய தன் சூளுரைப் படியே பிற்காலத்தில் அமெரிக்கக் குடியரசுத் தலைவ ஞகி அடிமை வாணிபத்தை, சட்டத்தின் அடிப்படை



யில் அழித்தொழித்தான். மனிதனை மனிதன மதிக்கும் மனப்பான்மை உண்டாக்கிய அம் மாவீரன் உலகம் போற்றும் உத்தமஞக விளங்கினுன்.

இத்துணைப் பெருமைகளுக்கு உரியவராக இருந்தவரே **அபிரகாம் லிங்கன்** என்பவர். அவர் கி. பி. 1809-ஆம் ஆண்டில் **தாமஸ் லிங்கன்** என்னும் ஓர் ஆங்கிலேயருககும் **நான்சி ஹாங்க்ஸி** என்னும் ஓர் அம்மையாருக்கும் நன் மகனுகப் பிறந்தார். அவரை இளமையில் பள்ளியிற் படிக்கவைக்கத் தக்க செல்வ நிலை இல்லாமையால் அவர் தாயாரே எழுத்துக்களை மட்டும் நன்ருக எழுதக் கற்றுக்கொடுத்தார். அவரது பத்தாம் அகவையில் அவ் வம்மையார் காலமானுர். தாயின் பிணத்தைத் தக்க சடங்குகளுடன் புதைக்கவும் செல்வமின்றித் தந்தை யொருபுறம் பிடிக்கத் தான் ஒரு புறம் தூக்கிச் சென்று இடுகாட்டில் புதைத்தனர்.

பள்ளியிற் படிக்கும் பேறு இல்லையே என்று வருந்திய அபிரகாம், அக்கம் பக்கங்களிற் படித்தவர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள்பால் சென்று புத்தகங்களை இரவலாகப் பெற்றுத் தாமே பயின்ருர். அவர் அவற்றைப் பன்னிப்பன்னிப் படித்து அவற்றில் உள்ள நயங்களை உணர்வார். தாம் அறிந்த கதைகளைத் தம்மை யொத்த பிற சிறுவர்களுக்கும் கூறி மகிழ்விப்பார். ஒரு சமயம் அபிரகாம் ஒரு பண்ணை முதலாளியிடம் வாங்கிய புத்தகம் நீரில் நனைந்து விட்டது. அவர் புத்தக உரிமையாளரிடம் என்ன சொல்வதென்று தோன்ருமல் திகைத்தார். பண்ணை முதலாளி அவரைப் பார்த்து, "தம்பி, நீ என் வயலில் மூன்று நாட்கள் வேலை செய்துவிடின் அப் புத்தகத்தை நீயே சொந்தமாக்கிக் கொள்ளலாம்," என்ருர். அபிரகாம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர் அங்ஙனமே வயல்

வேலையைச் செய்து முடித்துப் புத்தகத்தைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டார். புத்தகத்தில் அவருக்கிருந்த ஆர்வத்தினை என்னென்று புகழ்வது !

லிங்கன் சிறுவயதில் வறுமையாற்பட்ட துன்பத்துக்கு எல்லையில்லை. வயிற்றுக் கொடுமையைப்போக்க அவர் சில நாட்கள் விறகுக் கட்டைச் சுமந்து விற்று வந்தார் ; சில நாட்கள் படகோட்டும் தொழிலில் ஈடுபட்டார் ; பின்னர், கடிதங்கள் எடுத்துச் செல்லும் தபாற்சேவகனாக இருந்தார். அவரது அறிவும் திறமையும் அறிந்த ஒரு வணிகன் தனது பலசரக்குக் கடையினை நடத்துமாறு அமர்த்தினான். ஆனால் அவர் கடையினைச் சரியாகக் கவனிக்காததால் வாணிபம் குறைந்தது : கடையும் மூடப்பட்டது. பின்னர் நியூ ஸலாம் என்னுமிடத்தில் இருந்த அபிரகாமின் நண்பனொருவன் பல சரக்குக் கடையொன்று வைத்து அதை நடத்தி வரும்படி கூறினான். அங்கு அபிரகாமுக்கு மக்களிடம் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. கடைக்கு வருவோரிடம் எப்போதும் அபிரகாம் ஏதாவதொரு பொருள்பற்றி விவாதித்துக்கொண்டே இருப்பார். மக்களிடம் அவருக்கு நன் மதிப்பும், பழக்கமும் ஏற்பட்டனவே யன்றி வியாபாரம் வழக்கம்போலவே நசித்து விட்டது.

அபிரகாம் தம்பால் மக்கள் கொண்டிருந்த நன் மதிப்பைப் பயன்படுத்திக்கொண்டு அரசியலில ஈடுபடலானார். அக காலத்தே அவர் பலருடன் பழகிய அனுபவத்தால் அறிவும் ஆராய்ச்சித் திறனும் மிக்கவராக இருந்தார். 1832-ஆம் ஆண்டில் இல்லினாய்ஸ் என்னும் மாகாணத்தின் சட்டசபை உறுப்பினர் தேர்

தலுக்கு நின்றார். அப்போது அவர் மிக்க இளமை யுடையவராக இருந்தனராதலின் அவருக்கு அனுபவம் போதாதென மக்கள் எண்ணினர். அதனால் தேர்தலில் அவர் வெற்றிபெற இயலவில்லை.

தேர்தலில் தோல்வியுற்ற லிங்கன் பின்னர் வழக் கறிஞரான ஒரு நண்பரின் தூண்டுதலால் சட்டக்கல்வி பயின்று தாமும் வழக்கறிஞரானார். வழக்கறிஞர் தொழி லில் தம் நுண்ணறிவால் லிங்கன் ஒப்புயர்வற்று விளங்கி னார். சட்டங்களைப் பற்றிய நுட்பமான செய்திகளை அவர் நன்கு அறிந்திருந்தமையினாலும், சொல்லாற்றல் படைத்தவராயிருந்தமையினாலும் விரைவில் அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று. அவர் தம்மிடம் வரும் வழக்கு களை உண்மையானவைகளா என்றுணர்ந்த பின்னரே அவற்றிற்காக நீதிமன்றங்களில் வாதாட இசைவார். பொய்வழக்குகளால் எவ்வளவு பொருள் கிடைப்பதா யினும் அவற்றை லிங்கன் துரும்பென மதித்தார்.

வழக்கறிஞர் லிங்கன், 1830-ஆம் ஆண்டில் இல் லினாய்ஸ் மாகாணத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலுக் கும் உறுப்பினராக நின்றார். அவர்தம் நாட்டுப்பற்றி னாலும், நேர்மையினாலும், சொல்லாற்றலினாலும் இம் முறை தவறாது வெற்றி பெற்றார். 1840-இல் நடந்த தேர்தலிலும் மீண்டும் வெற்றி பெற்றார். தாம் நெடு நாளாகக் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்ற விரும்பிய லிங்கன் சட்டசபைக் கூட்டங்களில் நீக்ரோக் களின் அடிமைத்தளையை நீக்கும் திட்டங்களைச் சமயங் கிடைத்த போதெல்லாம் வற்புறுத்திப் பேசினார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட பகுதி மாகா ணங்களில் வாழும் மக்கள் அடிமை வாணிபத்தை

ஒழிக்கவேண்டு மென்னும் கொள்கையை மனமார ஆதரித்தனர். ஆனால் தென் பகுதி மாகாணங்களில் வாழ்ந்தோர் அடிமை வாணிபத்தையே விரும்பினர். அதனை நாகரிகமாகவும் கருதினர். "அடிமைகள் எமக்கு உழைக்கப் பிறந்தவர்கள்; அவர்களை எம் விருப்பம் போல் விற்கவும் வாங்கவும் எமக்கு உரிமையுண்டு," என்று அவர்கள் கூறினர். தென்னாட்டார் மனப்பான்மையை அறிந்த லிங்கன் மனம் வருந்தினார். அடிமை வாணிபத்தை ஒழிப்பதற்காக அவர் ஐக்கிய அரசியல் மன்றத்திற் கொண்டுவந்த தீர்மானமும் தோற்று விட்டது. எனினும் அவர் வாளா இருந்து விடாமல் நாடெங்கும் சுற்றுப்பயணங்கள் செய்து அடிமை வாணிபத்தை ஒழிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பிரசாரங்கள் புரிந்து வந்தார்.

அவருடைய பேச்சாற்றலும் உண்மைக் கருத்துக்களும் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. வட நாட்டாரின் முழு ஆதரவும் லிங்கனுக்குக் கிடைத்தது. 1857-ல் நடைபெற்ற குடியரசுக் கட்சி மாகாட்டில் அபிரகாம் லிங்கனையே அடுத்துவரும் தேர்தலில் குடியரசுத் தலைவராக ஆக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அத்தீர்மானத்திற் கிணங்க 1861-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் அபிரகாம் லிங்கனே பெருவாரியான வாக்குறுதிகள் பெற்று வெற்றியடைந்தார். லிங்கன் குடியரசுத் தலைவரானதைத் தென்னாட்டார் விரும்பவில்லை. அடிமை வாணிபத்தைப்பற்றி அவர்களுக்குள் ஏற்பட்ட குழப்பத்தை லிங்கன் அடக்கினார். ஐக்கிய நாடுகளினின்று பிரிந்து தனியாட்சி அமைக்க முயன்ற தென்னாட்டார்க்குப் பல

சமாதானங்கள் கூறியும் பயனில்லை. இறுதியில் வட நாட்டார்க்கும் தென்னாட்டார்க்கும் பெரும்போர் மூண்டது. அபிரகாம் எதற்கும் அஞ்சாமல் 1-1-1862-ஆம் நாளில் வடநாடு, தென்னாடு என்னும் இருபகுதிகளிலும் வாழ்ந்து வந்த அடிமைகள் யாவருக்கும் விடுதலையளிக்கும் சட்டத்தை நிறைவேற்றிவிட்டார். அடிமைகளை விடுதலை செய்யும் முதலாளிகளுக்கு ஐக்கிய அரசாங்கத்தினரால் சிறிது நஷ்ட ஈடும் வழங்கப் பெறும் என்னும் அறிக்கையை வெளியிட்டார். இதனால் லிங்கன்,

> 'எண்ணிய எண்ணியாங்(கு) எய்துவர் எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்'

என்னும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். விடுதலை யறிக்கையை உணர்ந்த தென்னாட்டு அடிமைகள் தத்தம் முதலாளிகளிடமிருந்து தப்பியோடி வட நாட்டினருடன் சேர்ந்து கொண்டனர். வரவரத் தென்னாட்டாரின் வலிமை குன்றியது.

மீண்டும் 1865-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் தேர்தல் நிகழ்ந்தது. அத் தேர்தலிலும் நம் லிங்கனே பெருவாரியான வாக்குகள் பெற்று வாகை சூடினார். அதற்குள் தென்னாட்டார் தமக்கு அடுத்தடுத்து உண்டான தோல்விகளால் மனமுடைந்து மேலும் போரைத் தொடர்ந்து நடத்துவது வீணேயென உணர்ந்து வட நாட்டாரிடம் சரணடைந்தனர். லிங்கன் மட்டிலா மகிழ்ச்சி யடைந்தார். அவர் கண்ட கனவு பலித்தது. அடிமை வாணிபம் அடியோடு தொலைந்தது.

அபிரகாம் லிங்கனின் வெற்றியைக் கொண்டாட 1865-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாளிரவு வாஷிங்டன் நகரில் போர்டு (Ford) கொட்டகையில் ' நம் பங்காளிகள் ' என்றொரு நாடகம் நடத்த ஏற்பாடு செய்யப்பெற்றது. அபிரகாம் லிங்கன் தம் மனைவி மக்களுடனும் நண்பர்களுடனும் நாடகத்தைப் பார்த்துக் களித்துக்கொண்டிருந்தார். அவ் வமயம் திடுமென்று அவர் தலைமீது பின்புறமாக இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. அடிமை நீக்கிய அண்ணல் அப்படியே தரையிற் சாய்ந்து உயிர் விட்டார். அவர் கொள்கையில் வேறுபட்ட ஒரு கல்லாக் கனிமகன் எங்கிருந்தோ வந்து அண்ணலின் உயிரைப் பிரித்துவிட்டான். ஆனால் அவர் புகழ் உலகம் முழுவதும் பரவி நிலைபெற்றது.

உலகைத் திருத்திய உத்தமர் அபிரகாம் லிங்கனின் செயற்கரும் செயல் உலக மக்களால் என்றும் மறக்கப் படுவதன்று. அவர் தம் அஞ்சா நெஞ்சமும், விடா முயற்சியும், ஏழைகட் கிரங்கும் இயல்பும், ஆட்சி முறையும் எல்லோராலும் பாராட்டப்படுவனவாம்.

பயிற்சி

பொருளறிக :

கடத்தி	வெற்றுரை	அகவை
அதிபதி	குளுரை	திண்ணியர்

சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

உருக்குலைந்த, பன்னிப்பன்னி, துரும்பென, ஈடுபட

விடை தருக :

1. அடிமை வாணிபத்தை ஒழிக்கவேண்டுமென்னும் எண்ணம் அபிரகாம் மனத்தில் எப்போது ஊன்றிற்று ?

2. லிங்கன் இளமையில் எவ்வாறு கல்வி கற்றார்?

3. லிங்கன் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுச் செய்த வேலைகள் யாவை?

4. தென்னாட்டார் லிங்கனை வெறுத்த காரணம் என்ன?

5. அபிரகாம் லிங்கன் குடியரசுத் தலைவரானவுடன் செய்த முதல் வேலை யாது?

6. வடநாட்டாருக்கும் தென்னாட்டாருக்கும் ஏற்பட்ட போர் எவ்வாறு அடங்கிற்று?

7. லிங்கன் எவ்வாறு இறந்தார்?

8. அபிரகாம் லிங்கனின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணம்:

1. லிங்கன் சிறு வயதில் வறுமையாற்பட்ட துன்பங்களுக்கு எல்லை இல்லை.—இதனை உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக.

2. அடிமை வாணிபத்தை அழிப்பதுதான் என் முதல் வேலையாகும்.—என் என்னும் சொல் என்னால் என்று வருமாறு வாக்கியத்தை மாற்றிக் கூறுக.

கட்டுரைப் பயிற்சி;

இப்போது நம் நாட்டுக் குடியரசுத் தலைவராக இருப்பவர் யார்? அவரைப்பற்றி இரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரை எழுதுக.

4. வானொலி நிலையம்



விஞ்ஞான அற்புதங்கள் மலிந்த இக்காலத்தே **வானொலி**யை அறியாதவர்கள் யார் இருக்கிறார்கள்? வானொலி மூலம் கதைகளும், நாடகங்களும், பாடல்களும் கேட்க விரும்பாத சிறுவர் சிறுமியர் உளரோ? வானொலி கேள்விச் செல்வத்தை நமக்கு அளிக்கின்றது. 'கற்றலில் கேட்டல் நலம்' அல்லவா?

'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை'

என்பது திருவள்ளுவரின் திருவாக்கன்றோ?

வானொலிப் பெட்டிக்கும் நம்மைப் போலவே காது, மூளை, வாய் என்னும் உறுப்புகள் உண்டெனில் உங்களுக்கு வியப்பாக இருக்கிறதல்லவா? ஒருவர் ஓரிடத்தில் நின்று பாடுவதையும், பேசுவதையும் **ஏரியல்** என்னும் செவியாற் கேட்டு, **வால்வு** என்னும் மூளைக்குக் கொண்டு வந்து, **ஒலிபெருக்கி** என்னும்

வாயின்மூலம் வானொலி நம்மைக் கேட்கச் செய்கின்றது. மக்களின் பொது அறிவைப் பெருக்குதற்கு வானொலியைவிடச் சிறந்த சாதனம் வேறொன்றும் இல்லை எனலாம்.

வேலன் மூன்றும் படிவத்திற் படிக்கும் மாணவன். அவன் வானொலி நிலையத்தின் அமைப்பையும், அது வேலை செய்யும் விதத்தையும் காணவேண்டுமென்று விரும்பினான். சென்னை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகளை நடத்தும் அலுவலாளருக்குத் தான் நிலையத்தைப் பார்க்க விரும்புவதாக ஒரு கடிதம் எழுதினான். வேலனை வருமாறு வானொலி நிலையத்துச் சிறுவர் நிகழ்ச்சித் தலைவர் வானொலி மூலமாகவே அறிவித்துவிட்டார். அவன் மிகவும் இன்பமடைந்து எழும்பூரில் உள்ள வானொலி நிலையத்தை அடைந்தான்.

சிறுவர் நிகழ்ச்சி அலுவலரை அவன் சந்தித்தான். அவரைப் பார்த்து முதற்கேள்வியாக, "ஏன் ஐயா, வெகு தொலைவில் இருக்கும் இடங்களுக்கெல்லாம் சென்னையிலிருந்து பாடினால் நன்றாகக் கேட்கிறதே: ஆனால் என் வீட்டிலிருந்து என் தங்கை பாடுவது ஏன் வானொலியிற் கேட்கக் கூடாது?"

சிறுவர் நிகழ்ச்சி அலுவலர்: தம்பி, வானொலியை எங்கு வேண்டுமாயினும் வைத்துக் கேட்கலாம். ஆனால் பாடுவதும் பேசுவதும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்துதான் நடைபெறுதல் வேண்டும். அதனால் ஏற்படும் ஒலி மின் ஒலிகளின் மூலம் காற்றலைகளில் கலக்கப்படும் காற்றில் கலந்து செல்லும் அம் மின் அலைகள் **ஏரியலால்** இழுக்கப்பட்டு, 'வால்வி'ன் மூலம் மீண்டும் ஒலி அலைகளாக மாற்றப்படுகின்றன.

அப்போதுதான் நாம் அதை வானொலி மூலம் கேட்க முடியும். நீ அவற்றைப் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் வானொலி நிலையத்தின் அமைப்பு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வா காட்டுகிறேன். (என்று வேலனை அழைத்துச் சென்றார்.)

அலுவலர் : முதலில் இருப்பதுதான் வரவேற்பு அறை. இங்குத்தான் வருகிறவர்களை அழைத்து உட்கார வைத்து, அவர்கள் கேட்கும் வினாக்கட்குப் பதில் சொல்லி அனுப்புவார்கள். அடுத்துள்ள சில அறைகள் வானொலி நிலையத்தில் ஒலிபெருக்குவது பற்றிப் பயிற்சி நடத்தும் தனி இடங்கள். அங்கே பயிற்சி கொடுத்துப் பாடுவது, பேசுவது முதலியவைகளை மற்றொரு அறையிலிருந்து கேட்பார்கள். அடுத்தபடியாக, நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப நாலைந்து அறைகள் (ஸ்டுடியோக்கள்) உள்ளன. (அலுவலர் ஒவ்வொரு இடத்தையும் காட்டியபடியே பேசிக்கொண்டு போனார்.)

வேலன் : (இடைமறித்து) ஒரே சமயத்தில் ஒரு நிகழ்ச்சி தானே ஒலிபரப்பப்படும். அதற்கு நான்கைந்து அறைகள் ஏன் ?

அலுவலர் : நீ வானொலியில் தொடர்ந்து நிகழ்ச்சிகளைக் கேட்கிறாய் அல்லவா ? ஓர் அறையில் ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போதே, மற்றொரு அறையில் அடுத்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும். ஆகவே இடையில் காலதாமதம் ஏற்படாமல் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறும்.

அலுவலரும் வேலனும் ஓர் ஒலிபரப்பும் அறையைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். வேலன்

அறையின் சுவரிலே பதிக்கப்பட்டிருந்த கண்ணுடியின் வழியாக உள்ளே பார்த்தான். உள்ளே ஓர் இசைக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. உள்ளே பாடியது வேலன் செவிகளில் விழவேயில்லை. ஆனல் வாய சைப்பு மட்டும் நன்ருகத் தெரிந்தது.

வேலன் : ஏன் ஐயா, உள்ளே பாடுவது சிறிது கூட என் செவிகளில் விழவில்லையே.

அலுவலர்: வேலா, 'ஸ்டுடியோ' என்று அழைக்கப்படும் இவ்வறைகள், சாதாரணமாக நம் வீட்டு அறைகள் போன்றவை அல்ல. இவற்றின் சுவர்கள் எதிரொலி ஏற்படாதவண்ணமும், வெளியில் ஏற்படும் ஒலிகள் உட்புகாவண்ணமும், நடக்கும் நிகழ்ச்சிகள் வெளியே கேட்காதவாறும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வேலன் : ஐயா, இப்படிக் கெட்டியாக மூடப்பட்ட அறைகளில் நிகழ்ச்சிகளை நடத்துபவர் காற்றில்லாமல் மிகவும் துன்பப்படுவார்களே! அதற்கு என்ன செய்வது?

அலுவலர் : இந்த அறைகளுள் ஒன்று மின்சார சாதனங்களைக்கொண்டு குளிர்ச்சியாக (Air-Conditioned) ஆக்கப்பட்டிருக்கிறது. நல்லகாற்றைத் தூசு இல்லாமல் சரிப்படுத்தி உடல் நலத்துக்குப் போதுமான அளவு குளிர்வித்து உள்ளே புகவிடுவர். இது போன்ற அறை ஒன்றில்தான் உங்களுக்கான சிறுவர் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

வேலன் : ஐயா, எனக்கு ஐயம். இந்த அறைகள் மிகச் சிறியனவாக இருக்கின்றன. திருவிழா போன்ற ஏதாவது நல்ல நாட்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பலப்பல உறுப்பினர் கலந்து கொள்ளுகிருர்களே,

அவ்வளவு பேர்களும் இந்தச் சிறிய அறைக்குள் எப்படி அடைபட முடியும்?

அலுவலர்: சரியான கேள்வி கேட்டாய், வேலா. நிகழ்ச்சிகள் இந்த அறைகளில்தான் நடக்க வேண்டுமென்பதில்லை. ஒரு பெரிய கொண்டாட்டம்; காந்தி பிறந்த நாள், சுதந்திரத் திருநாள் போன்ற முக்கிய நாட்களில் சிறுவர் சிறுமியர் பலர் கூடுவதால் அந் நிகழ்ச்சிகள் திறந்த வெளியிலேயே நடைபெறுகின்றன.

வேலன்: ஐயா, அந்த இடங்களில் நடக்கும் பாட்டும் பேச்சும் எப்படி வெளியே கேட்கமுடியும்? அதற்கு ஏதேனும் சாதனம் உண்டோ?

அலுவலர்: தம்பி, பாடுவதையும் பேசுவதையும் கிரகித்து வெளிவிடுவதற்கான சாதனம் **மைக்** எனப்படும் ஒலிபெருக்கியாகும். அதனால்தான் இந்த அறைக்குள் நடக்கும் நிகழ்சசிகள் ஒலி பரப்பப்படுகின்றன.

வேலன்: ஐயா, இவ்வொலி பெருக்கியால் எல்லாத் திசைகளிலும் ஒலி பரவுமோ?

அலுவலர்: இங்கு மூன்று வகையான ஒலி பெருக்கிகள் பயன்படுகின்றன. அவை, ஒரு திசையிலிருந்து மட்டும் ஒலியை இழுக்கக் கூடியது, இரண்டு திசைகளிலிருந்தும் ஒலியை இழுக்கக் கூடியது, எல்லாத் திசைகளிலிருந்தும் ஒலியை இழுக்கக்கூடியது என மூன்று வகைப்படும். சிறுவர்கள் பலர் கூடியிருக்கும் போது எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒலியை இழுக்கக் கூடிய ஒலிபெருக்கியே உபயோகப்படும்.

வேலன்: ஏன் ஐயா, நாடகங்களிலும் சிறுவர் நிகழ்ச்சிகளிலும் இடி, புயல், குதிரை ஓடும் ஓசை, கிளி

கத்தும் ஒலி முதலியவற்றைக் கேட்க முடிகிறதே, அஃது எப்படி? கிளியையும் குதிரையையும் ஒலிபரப்பும் நிலையத்துக்கு எப்படிக் கொண்டுவர முடியும்?

அலுவலர் : இப்போது கேட்டாயே, அதுதான் நல்ல கேள்வி. சொல்லுகிறேன் கேள். நீ இசைத் தட்டுகள் பார்த்திருக்கிறாய் அல்லவா? அவற்றைப் போல் இங்கேயும் ஒலிப்பதிவு செய்து கொள்ளும் சாதனங்கள்



இருக்கின்றன. சில சமயங்களில் பெரிய அறிஞர்களும், அமைச்சர் போன்றவர்களும் பேசவேண்டி வரும். சில இன்றியமையாத நிகழ்ச்சிகளையும் அறிவுரைகளையும் கூற அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். பல அலுவல்களில் சிக்கியிருக்கும் அவர்களை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வந்து பேசும்படி அழைத்தால் அவர்களால் இயலாமல் போகலாம். ஆகையால், மெழுகினால் ஆக்கப்பட்ட ஒருவகைத் தட்டு

களில் அவர்கள் பேசும்போது, அப் பேச்சைப் பதிவு செய்து கொண்டு, குறிப்பிட்ட நேரத்தில் ஒலிபரப்பு கிறோம். அதைப் போலவே, நாடக நேரத்தில் இடியை யும் புயலையும் ஏற்படுத்த முடியாது. ஆகையால், அவை இயற்கையாக நிகழும் சமயங்களில் அவற்றை ஒலிப் பதிவு செய்து கொண்டு, பிறகு வேண்டும்போது மின் சார இசைத்தட்டு இயக்கியில் வைத்து ஒலி பரப்பு வார்கள்.

வேலன் : ஐயா, வானொலியில் **மத்திய அலை, சிற்றலை** என்று வழங்குகின்றார்களே, தயவுசெய்து அவற்றைப்பற்றி விளக்கிக் கூறுங்கள்.

அலுவலர் : வானொலியில் நடத்தப் பெறும் நிகழ்ச் சிகள் எல்லாமே எல்லோருக்கும் பிடிக்கும் என்ப தில்லை. எவருக்கு எது தேவையோ அதைக் கேட்டுக் கொள்ளும் பொருட்டு இரண்டு வகையான நிகழ்ச்சி களை ஒரே நேரத்தில் நடத்துகிறோம். அதற்காக **மத்திய அலை** என்றும், **சிற்றலை** என்றும் இரண்டு இடங் களில் காற்றில் ஒலி கலக்கப்படுகிறது. நம் நாட்டில் பல மொழிகளிலும் பேசுபவர்கள் இருக்கிறார்கள். அவர் களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை அவரவர் மொழி யில் நடத்துகிறோம். செய்திகளும் பல மொழிகளில் ஒலி பரப்பப்படுகின்றன.

வேலன் : அது சரி, ஐயா, மின்சாரத்தினால் வானொலி எவ்வாறு இயங்குகின்றது? நம் மாகாணத் தில் சென்னையைத் தவிர வேறிடங்களிலும் வானொலி நிலையங்கள் உண்டோ?

அலுவலர் : தம்பி, பேசுவதும், பாடுவதும் மின் சார ஆற்றலினால் கம்பிகள் மூலம் கொண்டு செல்லப்

பட்டு, ஒலியற்ற ஓர் இடத்திலே காற்றில் கலக்கப்படு கின்றன. நமது மாகாணத்தில் சென்னையைத் தவிர திருச்சி, திருவிதாங்கூர், கோழிக்கோடு ஆகிய இடங் களில் இந்த வானொலி நிலையங்கள் இருக்கின்றன. சென்னை நிலையத்திலிருந்து நடத்தப்பெறும் நிகழ்ச்சிகள் கிண்டியில் காற்றோடு கலக்கப்படுகின்றன. திருச்சி நிலைய நிகழ்ச்சிகள் அருகிலிருக்கும் திருவெறும்பூரில் காற்றுடன் கலக்கப்படுகின்றன.

வேலன் : ஐயா, தங்களால் நான் வானொலியைப் பற்றிப் பல அற்புதமான செய்திகளை அறிந்து கொண் டேன். வானொலி மிகவும் பயனுடைய சாதனமே.

அலுவலர் : ஆமாம். மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு உணவும், உடையும் எவ்வளவு தேவையோ, வானொலி அவ்வளவு தேவையாக இருக்கிறது. அன்றாடச் செய்திகளை அறியவும், பாட்டு நாடகம் போன்றவைகளைக் கேட்டுக் களிப்படையவும் உதவும் சாதனம் இது என்பதில் ஐயமில்லை.

தம்பி, நீ நாடோறும் வானொலி கேட்கிறாய் அல் லவா? உன்னால் முடிந்த வரையில் அதன் மூலம் வெளிவரும் செய்திகளையும், பாட்டுகளையும் கேள். அரிய, பெரிய விஷயங்களைச் சிந்தையில் வைத்து அதன்படி நட. அது உனக்கு என்றும் பயன் தரும்.

வேலன் : நல்லது ஐயா, வணக்கம்.

பயிற்சி

பொருளறிக :

வாக்கு — நிகழ்ச்சிக்கு
சாதனம் — ஒலியற்ற

விடை கூறுக :

1. வானொலிக்கும் நம்மைப் போலவே காது, மூளை, வாய் முதலிய உறுப்புகள் இருக்கின்றனவென்பதை விளக்குக.

2. வரவேற்பு அறை, நிகழ்ச்சி அறை - இவற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

3. நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதற்காகச் செய்துள்ள ஏற்பாடு யாது?

4. நிகழ்ச்சி அறைகளுக்கு வெளியில் சிறிதும் ஒலி ஏற்படாததற்குக் காரணம் என்ன?

5. திறந்த வெளிகளில் நடக்கும் நிகழ்ச்சிகள் எவ்வாறு ஒலிபரப்பப் படுகின்றன?

6. இடி, புயல் முதலிய ஒலிகள் எவ்வாறு வானொலியில் கேட்கும்படி செய்கிறார்கள்?

7. மத்திய அலை, சிற்றலைகளின் நன்மை யாது?

8. வானொலியால் நாம் அடையும் நன்மைகள் யாவை?

இலக்கணம் :

1. சிற்றலை, வாயசைப்பு, வானொலி, நிகழ்ச்சியறை - இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

2. ஒலி, ஒளி; அலை, அளை; ஏரி, ஏறி; அரை அறை; பரந்து, பறந்து - இச் சொற்களின் வேற்றுமை விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

கட்டுரை :

'வானொலி மூலம் ஒலி பரவுதல்' என்பது குறித்துச் சுருக்கமாக ஒரு கட்டுரை எழுதுக.

5. மலை கலங்கினும் நிலை கலங்காதவர்

சிலவாண்டுகட்கு முன்னர் நம் தேசத் தலைவர் ஜவஹர்லால் நேருவின் வலக்கை போன்றிருந்த



சர்தார் வல்லபாய் படேல் மறைந்த செய்தி கேட்டு இமயம் முதல் குமரிவரை நாட்டு மக்கள் அனைவரும் துயரக்கடலில் மூழ்கினர். அவருடைய பிரிவு நாட்

டுக்குப் பெரிய இழப்பாகும் என்று தலைவர்கள் பலரும் கலங்கினர். அவர்தம் உடலைச் சந்தனச் சிதையில் இட்டதும் 'சுதந்திர இதிகாசத்தில் ஒரு மாவீரன் கதை முடிந்ததே!' என்று ஜவஹர் மனம் வருந்திக் குறிப்பிட்டார். சர்தார் படேல் காந்தியடிகளாரின் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டு உரிமைக்காக இடைவிடாதுழைத்த பெரியார். அவர்தம் ஆண்மையும், உறுதி படைத்த உள்ளமும், செயலாற்றும் திறமையும், தியாக உணர்ச்சியும் கண்டவர்கள் அவரை **'வீரமலை'** யென்றும், **'இரும்பு மனிதர்'** என்றும் கூறுவதுண்டு.

சர்தார் வல்லபாய் படேல் எளிய குடியானவரினத்தில் பிறந்தவர். அவர் 1875-ஆம் ஆண்டில் அக்டோபர் 31-ஆம் நாள் கூர்ஜர நாட்டைச் சேர்ந்த **கரம்சாத்** என்னுமூரில் தோன்றினர். அவர் தந்தையார் **ஜாவேரி பாய் படேல்** என்னும் குடியானவர். அவருக்குச் சகோதரர்கள் நால்வரும், சகோதரி ஒருத்தியும் இருந்தனர். வல்லபாய் தம் தந்தையாருடன் அடிக்கடி வயல்களுக்குச் சென்று வருவார். அச் சமயங்களில் தந்தையார் தம் மைந்தர்க்கு அறிவை வளர்க்கும் கதைகளையும், வீரர் வரலாறுகளையும் கூறுவதுண்டு. தந்தையார் எளிய குடியானவராயிருந்தும் 1857-ஆம் ஆண்டில் இந்தியச் சிப்பாய்கள் நடத்திய உரிமைப் போராட்டத்தில் கலந்துகொண்டவராதலால் அவர் கூறும் செய்திகள் படேலுக்கு நாட்டுப் பற்றும் வீர உணர்ச்சியும் ஊட்டுவனவா யிருந்தன. அவர்தம் மூத்த சகோதரர் வித்தல்பாய் படேலும் காந்தியடிகளின் இயக்கத்துக்குப் பேருதவியாய் இருந்தார். இத்தகைய சூழ்நிலையில் தோன்றிய நம் வல்லபாய் படேல் நாட்டுச் சுதந்திரப்

போராட்டத்தில் கலந்துகொண்டதில் வியப்பொன்று மில்லே.

வல்லபாய் படேல் இளமையில் தம் கிராமத்தினின்று மூன்று கல் தொலேவிலுள்ள பெத்லத் என்னுமூரில் தொடக்கப்பள்ளியில் பயின்று வந்தார். அவர் அங்கேயே தங்கித் தம் உணவைத் தாமே சமைத்து உண்பார். சமையலுக்கு வேண்டிய உணவுப்பொருள்களே ஒவ்வொரு ஞாயிறுதோறும் தமது கிராமத்துக்குச் சென்று கொண்டுவருவது வழக்கம். பள்ளியில் படிக்கும்போதே வல்லபாய் தளராத உழைப்பும், உறுதியும் உடையவராக இருந்தார். அவர் யாருக்கும் அஞ்சுவதில்லே. வகுப்பில் குறும்புகள் செய்வதிலும் சமர்த்தராக இருந்தார். அவர் சிறு வயதிலேயே பிடிவாத குணமுடையவராகக் காணப்படினும் உண்மையும், நேர்மையுமுடைய கொள்கைகளேத் தலேவணங்கி ஏற்றுக்கொள்வார். அவர் வெறும் ஏட்டுப்படிப்பில் மட்டும் தேர்ச்சியுருமல் உடற்பயிற்சியிலும் வல்லுநராய்த் திகழ்ந்தார்.

1901-ஆம் ஆண்டில் படேல் 'மெட்ரிகுலேஷன்' தேர்வில் வெற்றி பெற்ருர். பின்னர் அவர் வழக்கறிஞர் தேர்விலும் வெற்றிபெற்றுக் 'கிரிமினல்' வழக்குகளே நடத்துவதில் தேர்ந்தவராக இருந்தார். அக்காலத்தே படேல், வழக்கை வாதிக்க வருகிருர் என்ருல் எதிர்க்கட்சிக்காரர்கட்கு மிக்க நடுக்கம் ஏற்படும். நீதிபதிகளும் அவரைக் கண்டு அஞ்சினரெனில் அவர்தம் வழக்கறியும் திறமையை என்னெனப் புகழ்வது! அவர் பார்சாத் என்னுமூரில் வழக்கறிஞராக இருந்தபோது அவருக்கு அஞ்சி ஒரு நீதிபதி தம் வழக்கு மன்றத்தை

வெளியூருக்கு மாற்றிக்கொண்டார். ஆனால் நம் படேல் அவர்கள் அவ்வூருக்கும் சென்று வழக்காட முனைந்து நின்றதால் வழக்குமன்றம் மீண்டும் பார்சாத்துக்கே மாற்றப்பட்டது. படேல் தமது சட்டப்படிப்பை வளர்த்துக்கொள்ள விழைந்து லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் தேர்விலும் முதல்வராய்த் தேறினார்.

நீதிமன்றத்தில் அவர் ஒரு வழக்குக்காகச் சென்றிருந்தார். தீவிரமாக வாதாடி வழக்குரைத்துக்கொண்டிருந்தார். அச் சமயம் தந்திச் சேவகன் ஒருவன் அவசரமாக வந்து ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டுச் சென்றான். படேல் அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். உடனே மடித்துச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, தமது வழக்கைத் தொடர்ந்து வாதித்தார். நீதிமன்றம் கலைந்ததும் அவரது உள்ளம் துடித்தது. அண்மையிலிருந்தவர்கள், "என்ன தந்தி?" என்று கேட்க, அவர் கண்ணீர்விட்டு, "என் மனைவி இறந்துவிட்டாள்." என்று தெரிவித்தார். இங்ஙனம், நம் படேல் உறுதி உள்ளமும், உருகும் உள்ளமும் உடையவராக இருந்தார்.

பாரிஸ்டர் படேல் ஆமதாபாத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றியபோது காந்தியடிகளாரைச் சந்திக்கும் பேறு கிடைத்தது. அதற்கு முன்னர் அவர் ஆங்கில நாகரிகத்தில் மூழ்கி இருந்தார்; ஆங்கிலேயரைப் போலவே ஆடம்பரமான உடையுடைகளைப் பெற்றிருந்தார். அடிகளாரின் எளிய வாழ்க்கையையும் உண்மைக் கொள்கைகளையும் கூர்ந்தறிந்த பின்னர் படேலின் உள்ளம் அடிகளாரிடம் ஈடுபட்டது. 1918-ஆம் ஆண்டில் குஜராத்தில் பருவ மழை தவறியதால் மக்கள் வரி

கொடுக்க மறுத்தனர். வெள்ளையர் அரசாங்கம் அவர்களைத் துன்புறுத்திற்று. அவ்வமயம் நம் படேல் அவர்கள் முன்னின்று **வரிகொடா இயக்கத்தை** வெற்றிபெறுமாறு நடத்தினர். அதனால் அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று. 1920-ஆம் ஆண்டில் நாகபுரி மகாநாட்டுத் தீர்மானத்தின்படி தம் பாரிஸ்டர் பதவியைத் துறந்து தேச விடுதலைக்குப் போராட முன்வந்தார்.

ஒரு சமயம் குஜராத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டு மக்கள் வீடிழந்து பொருளிழந்து தவித்தனர். வெள்ளத்தால் தொல்லையடைந்த மக்களைப் படேல் செல்வர்களிடம் பொருளுதவி பெற்றுக் காப்பாற்றினர். 1924-ஆம் ஆண்டில் வல்லபாய் படேல் நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928-ஆம் ஆண்டு **பர்தோலி** மக்கள் வரிகொடுக்க மறுத்தனர். அவர்கள் அதிகாரிகளால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அச் சமயம் படேல் அவர்கள் அரியேறு போல முன்வந்து மக்களையெல்லாம் ஒருங்குத் திரட்டிப் போரிட்டு வரியைக் குறைக்கும்படி செய்தார். அவரது அஞ்சாநெஞ்சும், ஆண்மையும் கண்ட காந்தியடிகள் **'சர்தார்'** என்னும் பட்டத்தைச் சூட்டினர். சர்தார் என்னும் சொல்லுக்குத் தளபதி என்பது பொருள். அன்றுதொட்டுப் பாரிஸ்டர் படேல், **சர்தார் படேல்** என்று மக்களால் அன்பு ததும்ப அழைக்கப் பெற்றார். அவர் 1930-இல் உப்புச் சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து சிறைப்பட்டார்.

தேசிய இயக்கத்திற் சேர்ந்ததன் பலனாகச் சர்தார் படேல் பலமுறை சிறைபுகுந்தார். 1935-ஆம் ஆண்டில் நடந்த தேர்தல்களிலே காங்கிரஸ் சபை கலந்து வெற்றி

பெற்றது. அச்சமயம் அவர் ஆட்சிக்குழுவின் தலைவராய் (Parliamentary Board) இருந்து சட்டசபைகளின் நடவடிக் கைகளைத் திறம்பட நடத்தினர்; சமஸ்தான மக்களின் உரிமைப் போருக்கு வழிகாட்டியாகவும் இருந்தார். 1939-இல் தொடங்கிய இரண்டாம் உலகப் பெரும் போர் நடந்தபோது 'போரில் அரசாங்கத்துக்கு உதவி செய்யாதீர்கள்' என்று கூறியதால் தலைவர்கள் பலரும் சிறையிலிடப்பட்டனர். 1940-ஆம் ஆண்டில் படேல் சிறைப்பட்டு உடல் நலமின்மையால் மறு ஆண்டில் விடு தலை செய்யப்பட்டார்.

1942-இல் 'வெள்ளையனே! வெளியேறு' என் னும் ' இயக்கம் வலுக்கத் தொடங்கியது. அதனுல் சர்தார் படேல் மூன்ருண்டுகள் ஆமத் நகர்க் கோட்டை யில் சிறைப்பட்டிருந்தார். அவர் 1945-இல் விடுதலை யானதும் தேசிய விவகாரங்களில் தீவிரமான பங்கு கொண்டு உழைத்தார். 1945-இல் ஆங்கிலேயர் இந்தி யாவுக்கு ஆட்சியுரிமை தர முன்வந்தனர். அதற்காக அப்போது இந்தியாவின் வைசிராயாக இருந்த வேவல் பிரபு கூட்டிய சிம்லா மகாநாட்டிலும், ஆங்கில மந்திரி சபைத் தூதுக் குழுவினரின் உரையாடல்களிலும் படேல் பெரும்பங்கு எடுத்துக்கொண்டார்.

1946-ஆம் ஆண்டில் இடைக்கால அமைச்சர் குழு வில் சர்தார் படேல் உள்நாட்டு அமைச்சரானுர். 1947-ல் நம் நாடு விடுதலை பெற்றதும் ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியானுர். அவர்தம் நெருங்கிய துணைவ ரான வல்லபாய் படேல் உதவிப் பிரதம மந்திரியாகப் பதவியேற்ருர். அக்காலத்தே சிதறிக் கிடக்கும் சமஸ் தானங்களை ஒன்ருக்கி அந்தந்த மாகாண ஆட்சியுடன்

இணைக்கும் செயற்கரும் செயலில் ஈடுபட்டுப் பெரு வெற்றி கண்டார். அவர்தம் அறவுரை கேட்டு அறு நூற்றுக்கு மேற்பட்ட சமஸ்தான மன்னர்கள் ஆட்சிப் பொறுப்பினை விட்டு இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைக்கலாயினர். இங்ஙனம் எத்தகையவர் சினத்தையும், பகையையும் பொருட்படுத்தாமல் தலைவர் படேல் அவர்கள், வெள்ளையர் ஆட்சியில் இருந்த இந்தியாவின் அரசியல் அமைப்புப் படத்தையே மாற்றிவிட்டார். அவர்தம் பேரறிவைக் கண்டு பலரும் வியந்து பாராட்டினர். அவர் கலங்கா உறுதியுடன் நாட்டை நேர்வழியில் நடத்துவதில் தம் உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்தார் என்று கூறலாம்.

ஐதராபாத் சமஸ்தானம் மட்டும் இந்திய ஆட்சிக் கடங்க மறுத்தது. அந் நாட்டு மன்னர் **ரஸாக்கர்கள்** என்னும் கூட்டத்தினரால் அடக்கப்பட்டிருந்தார். அங்கு வாழ்ந்த இந்துக்களும் குறிப்பாகச் சமஸ்தான காங்கிரஸ்காரர்களும் ரஸாக்கர்களின் தாங்கொணு அட்டூழியங்களுக்கு ஆளாயினர். படேல் இக் கொடுமையைக் கண்டு வாளா இருப்பாரா? அவர் துணிவுடன் இந்தியப் படைகளை ஐதராபாத் சமஸ்தானத்தில் ஏவி, ரஸாக்கர்களை அடக்கினர். ஐதராபாத் அரசாங்கம் இந்திய ஆட்சிக்குப் பணியுமாறு செய்தார். இவ்வாறு நாட்டுக்காக அரிய பெரிய செயல்களை ஆற்றிய சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் உடல் நலம் குன்றி 1950-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். இந்தியாவின் இணையற்ற வீரர் மறைந்தமை யறிந்து நாட்டுத் தலைவர்களும், மக்களும் கண்ணீர் சோரக் கவன்றனர்.

சர்தார் வல்லபாய் படேல் அருங்குணங்களுக்கு உறைவிடமானவர். தமக்குச் சரியென்று தோன்றும் கொள்கையை அவர் எத்தகையோரின் பாராட்டுதலுக்கும், பகைக்கும் அஞ்சாமல் எடுத்துக் கூறும் இயல்பு வாய்ந்தவர். அவர் வைரம் போன்ற உறுதி படைத்தவர்; ஆழ்ந்த அறிவு படைத்தவர், சீர்திருத்தக் கருத்துக்கள் உடையவர். அவரிடத்தில் இடையறாத தெய்வ பக்தியும் உண்டு. எத்தகைய துன்பம் நேரினும் அவர் கட்டுப்பாட்டை மீறி நடக்க மாட்டார். அதுபோலவே பிறர் கட்டுப்பாட்டை மீறி நடப்பதையும் அவர் அறவே வெறுப்பார். இத்துணை நற்குணங்களை உடைய அண்ணல் மறைந்து விட்டார். ஆனால் இன்று அவர் அழியாப் புகழ்பெற்ற அமரராக நம்மிடையே நிலவுகிறார். நம் நாட்டு மக்கள் என்றும் ஒன்றுபட்டுப் பணியாற்றுவதே அவருக்கு நாம் செலுத்தும் அன்புக் காணிக்கையாகும்.

பயிற்சி

பொருளறிக :

சிதை	*கூர்ந்தறிந்து*	*தாளாண்மை*
சூழ்நிலை	*அரியேறு*	*அமரர்*
நேர்மை	*ஈடுபட்டு*	

வாக்கியத்திற் சேர்த்தெழுதுக :

பின்பற்றி, இடைவிடாது, வழக்காட, தீவிரமாக, கூர்ந்தறிந்து, முன்னின்று.

எதிர்ப் பதம் கூறுக :

எளிய, வாதி, துறந்து, மதிக்கப்பட்டு, சமைப்பார்.

விடை கூறுக :

1. சர்தார் படேலின் ஆண்மையைக் குறிக்கும் சொற்றொடர்கள் யாவை?

2. படேலின் கல்விப் பயிற்சியைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

3. அவர் சிறந்த வழக்கறிஞர் என்பதற்குச் சான்றுகள் தருக.

4. சர்தார் படேல் 'மலை கலங்கினும் நிலை கலங்காதவர்' என்பதை விளக்கும் நிகழ்ச்சி யாது?

5. படேல் அவர்கள் நாட்டுக்குச் செய்த நற்பணிகள் யாவை?

6. ஐதராபாத் குழப்பத்தை அவர் எவ்வாறு அடக்கினார்?

7. வல்லபாய் படேலின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணம் :

1. அவர் வெறும் எட்டுப்படிப்பில் மட்டும் தேர்ச்சியுறாமல் உடற் பயிற்சியிலும் வல்லவராக இருந்தார். —இதனை இரண்டு தனிநிலை வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

2. ஒரு நீதிபதி தம் வழக்கு மன்றத்தை வெளியூருக்கு மாற்றிக்கொண்டார்.—வழக்குமன்றம் எழுவாயாக வருமாறு வாக்கியத்தை மாற்றிக் கூறுக.

3. அண்மையிலிருந்தவர்கள், 'என்ன தந்தி?' என்று கேட்க, அவர் கண்ணீர் விட்டு "என் மனைவி இறந்துவிட்டாள்," என்று கூறினார்.—இதனை அயற்கூற்றாக மாற்றிக் கூறுக.

6. செங்குட்டுவன் அரசியல்

சங்க நூல்களில் நம் பண்டைக்காலத் தமிழரசர் களின் ஆட்சிமுறையை அறியலாம். அவற்றிற் கூறப் பட்ட அரசியல் முறை யெல்லாம் பொதுவாகச் சேர மன்னருக்கும் உரியனவேயாகும். சங்க காலத்தில் முடி யாட்சியே தமிழ்நாட்டில் நிலவி இருந்தது. குடியாட்சியில் நாம் மேற்கொள்ளும் நன்மைகளுள் பல கோனாட்சியி லும் பின்பற்றப்பட்டன. அந்நாளைய அரசன் தன் விருப் பம்போல் ஆளாமல் குடிகளின் கருத்தறிந்தே தன் னாட்சியை நடத்தினான். அதனால்தான் சேர மன்னர் களில் பலரும் இருபது முதல் ஐம்பது ஆண்டுகள்வரை உள் நாட்டில் கலகம் எதுவுமின்றி அமைதியாக அரசாள முடிந்தது. சேரன் செங்குட்டுவன் ஆட்சிக் காலமும் ஐம்பது ஆண்டுக் காலம் நிலவி வந்தது. அன்றியும் செங்குட்டுவன் வடநாட்டுப் போர்களையெல் லாம் முடித்து வெற்றி வீரனாய்த் திரும்புவதற்குட்பட்ட முப்பத்திரண்டு மாதங்கள் வரையில் தலைநகரில் இல்லாமலிருந்தும், சேர நாட்டில் யாதொரு உள் நாட்டுக் கலகமும் தோன்றாமல் அமைதியாக அரசியல் நிலை கலங்காமல் நடந்து வரவும் முடிந்தது. இத்தகைய அமைதியான ஆட்சியை நடத்திய சேர அரசனது அரசியல் முறையைப்பற்றி இங்கே தெரிந்து கொள் வோம்.

செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் அர சியலை வெறுத்துத் துறவியலை மேற்கொண்டுஅருளாட்சி புரிந்ததை நீங்கள் அறிவீர்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு நற்சோணையின் மணிவயிற்றில்

பிறந்த இவ் விருபெருவீரரும், அரசாட்சியும் அருளாட்சியும் நடாத்தி எதிர்காலத் தமிழகத்துக்கு ஏற்றமும் புகழும் ஏற்படச் செய்தமைபோல வேறெந்தத் தமிழ் மன்னரும் செய்யவில்லை எனில், அது மிகையாகாது.

செங்குட்டுவன் அரசியலில், முற்கால முறைப்படி ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் அரசியற் செயற் குழுவாகச் சிறப்புற்றிருந்தன. ஐம்பெருங் குழுவில், அமைச்சர், புரோகிதர், சேனைபதியர், தூதுவர், ஒற்றர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர். கரணத்து இயலவர் எனப்படும் கணக்கர்களும், கருமவிதிகள் எனப்படும் அரசன் ஆணை நிறைவேற்றும் அதிகாரிகளும், கனகச் சுற்றம் எனப்படும் பண்டாரம் காப்போர்களும், கடை காப்பாளர் எனப்படும் அரண்மனைக் காவலர்களும், நகரமாந்தர்களும், படைத்தலைவர்களும் யானை வீரர்களும், குதிரை வீரர்களும் எண்பேராயத்தில் அடங்கியிருந்தனர். இவரன்றிக் கரும வினைஞர், கணக்கியல் வினைஞர், தரும வினைஞர், தந்திர வினைஞர், பெருங்கணியென ஐந்து பேரடங்கிய குழுவும் அன்றுட அரசியலைச் செயற்படுத்த உதவினர்.

சேரன் செங்குட்டுவன் ஆட்சியில் இவரெல்லாம் அரசனுடைய மந்திராலோசனைக்கு உரியவர்களாக மதிக்கப்பட்டனர். செங்குட்டுவனது தரைப்படைக்கு வீரன் **வில்லவன்கோதை** தலைமை வகித்தான். இவனே சேரன் வடவரொடு செய்தபோரில் படை நடத்திச்சென்று வெற்றி பெற்றவன். நாட்டு வருவாயின் தலைமை, **அழும்பில்வேள்** என்ற அமைச்சனைச் சார்ந்திருந்தது. இவன் வரும்பொருள் அறிந்து செங்குட்டுவனுக்குத் தக்க இடத்தில் சூழ்ச்சி புரைக்கும் மாட்

சிமை உடையவன். குட்டுவன் ஆட்சியில் தூதுவர்க் ளாக ஆயிரம்பேர் பணிபுரிந்தனர். அவர்களுக்குச் **சஞ்ச யன், நீலன்** என்ற இரண்டு பேரறிவாளிகள் தலைமை வகித்தனர். அவர்கள் அரசர்களிடம் அடுத்தடுத்துச் சென்று வருவோராதலால் எஞ்ஞான்றும் சட்டையும் தலைப்பாகையும் தரித்திருப்பது வழக்கம். இத் தூதுவர் களைக் **கஞ்சுக முதல்வர்** எனவும் அழைப்பதுண்டு.

செங்குட்டுவனது ஆட்சியில் பகைவர்கள் நன்கு ஒடுக்கப்பட்டனர். சேரன் கப்பற்படையை வலிமை மிக்கதாக வைத்திருந்தான். கடல் வழியாகப் புகுந்த பகைவர்களைக் கடல் வழியாகவே நெடுந்தூரம் துரத்திச் சென்றழித்ததனால் செங்குட்டுவனைக் **கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன்** என்று யாவரும் அழைத் தனர். வட நாட்டரசர்களையும் இருமுறை செங்குட்டு வன் தம் முன்னோர்களைப்போலவே அடக்கியுள்ளான். ஆயினும், பகைவர்களுக்கு அருளும் கருணையுள்ளம் சேரர்களுக்கு இயல்பாக அமைந்திருந்தது. இதைச் செங்குட்டுவன் தன் பகைவர்களான கனகவிசயரைப் பத்தினி விழாவின்போது மன்னித்து விடுதலையளித்து சிறப்புச் செய்ததால் அறியலாம்.

செங்குட்டுவன் ஆட்சிக்குச் சோழ பாண்டிய நாடு களும் உட்பட்டிருந்தன. அதனால் குட்டுவன் தன் அர சாங்க முத்திரைச் சின்னமாக வில், புலி, கயல் ஆகிய மூவேந்தரின் முக்கொடிகளையும் ஒன்றாக்கி அமைத்த தமிழ்க்கொடியையே கொண்டிருந்தான்.

அந் நாளைய வழக்கங்களில் சில இந் நாள் வழக் கில் இல்லை. எவரேனும் அரசரிடம் வந்து ஏதேனும் கூறப் புகுமுன்னும் கூறியபின்னும், "அரசே, நீடு

வாழ்க!" என வாழ்த்துதல் வழக்கம். திருமுகம் எழுதுவோர் **கண்ணெழுத்தாளர்** எனப்பட்டனர். கண்ணெழுத்து என்னும் வட்டெழுத்து அந் நாளில் பழந்தமிழ் எழுத்தாய்ச் சாசனங்களில் மட்டும் வழங்கப் பட்டது. இதனைச் சிலர் சித்திர எழுத்தென்றும், கோலெழுத்தென்றும் வழங்குவர். செங்குட்டுவன் திருவோலக்கத்தில் அரசியாகிய கோப்பெருந்தேவியும் அரசனோடு அமர்ந்து ஆலோசனைகள் கூறுவது வழக் கம். அரண்மனையிலும், கோயில்களிலும், படைவீரர் பகைவர்மேற் செல்லுங்கால் தங்குமிடங்களிலும், கூத்தரும் பாணரும் ஆடியும் பாடியும் மகிழ்விப்பது அந் நாளைய வழக்கம். அரசவையில் ஆடும் கூத்துக் களில் சாக்கைக் கூத்து மிகவும் புகழ்பெற்றது.

சிற்றரசர்கள் திறை செலுத்தக் காலவேளையில் முரசம் முழங்கும். இஃதன்றிக் கொடை முரசு, படை முரசு, மணமுரசு ஆகிய மும்முரசுகளும் தலை நகரங் களில் காலந்தோறும் முழங்கின. குடிகள் அரசன் பிறந்த நாளைப் பெருநாளாகக் கொண்டாடினர். இதனைப் **பெருமங்கலம்** என்பர். அந்நாளில் அரசன் கருணைக்கு அறிகுறியாக மங்கலவண்ணமாகிய வெள் ளணி அணிந்து வறிஞர்க்கு வேண்டியவற்றை மாறா மல் வழங்குவான். சிறைப்பட்டவர்களையும் விடுதலை செய்வான். கலைஞர்களையும் புலவர்களையும் வீரர்களை யும் சிறப்பிப்பான். சேர நாட்டில் இந் நாளிலும் இவ் வழக்கம் நிகழ்தல் இதனை மெய்ப்பிக்கும். தக்க அந்தணர்க்குத் தன் எடையளவுப் பொன்னை நிறுத்துத் துலா பார தானமும் நடத்துவதுண்டு.

போரில் இறந்துபட்ட வீரர்களின் பரம்பரையின

ருக்கும், இறவாமல் அடிபட்டுத் திரும்பிய வீரர்களுக்கும், போரில் தத்தம் திறமையை வெளிப்படுத்திய வீரர்களுக்கும் அரசனே நேரில் அழைத்துப் பரிசும் பட்டமும் தந்து சிறப்புச் செய்வான். இந்நாளில் ஆங்கில அரசினரும், நம் அரசியலாரும் 'விக்டோரியா கிராஸ்', வீரச்சக்கரம் முதலிய பட்டங்களை முறையே வீரர்கட்கு வழங்குவதை நீங்களும் அறிந்திருப்பீர்கள். படைவீரர்கள் படைமேற் செல்லுங்கால் அரசன் உடனிருந்து வீரர்களை ஊக்குவித்தும் விருந்துபசரித்தும் அனுப்புவான். இதனைப் **பெருஞ்சோற்று நிலை** எனக் கூறுவர். பகைமேற் செல்லுமுன் நல்லநாளில் அரசன் குடையையும் வாளையும் விழாச்செய்து தன்னாட்டு எல்லைக்கு அப்பால் சிறப்புடன் அனுப்பி வைத்துப் பிறகு வாய்ப்பான நாளில் தான் போரில் கலந்து கொள்வது வழக்கம்.

இறந்துபோன வீரர்களுக்கும் வீரக் கற்பில் சிறந்த கற்புடைப் பெண்டிர்களுக்கும் **நடுகற்கள்** எடுத்து விழாக் கொண்டாடுவது அந்நாள் மரபாகும். இவ்விழா இந்நாளில் சிறந்தோர்களுக்குச் சிலை திறப்புவிழாச் செய்வதைப்போன்றது. பத்தினிச் சிலைக்குரிய கற்களை இமயமலையிலோ பொதியமலையிலோ வெட்டி எடுப்பர். கங்கையிலோ அன்றிக் காவிரியிலோ நீராட்டித் தூய்மை செய்வர். பிறகு சிலையாக்குவர். முடிவில் நடுகல் விழா நடைபெறும்.

சேர அரசாட்சி உரிமை முறை மக்கள் தாயமாய்—அரசனின் மூத்த மகனுக்கு உரிமையாய்—வந்ததாகும். ஆனால் இந்நாளில் அது சேரநாட்டில் மருமக்கள் உரிமையாய் மாறியுள்ளது. சேர மன்னர்களுள் முன்னோன்

ஒருவன் அரசர் எழுவரை வென்றதன் அறிகுறியாக "எழு முடியாரம்" என்னும் ஒரு மாலை அணிந்திருந்த வழக்கத்தைப் பின்பற்றிச் செங்குட்டுவனும் எழு முடியாரம் அணிந்திருந்தது குறிப்பிடத் தக்கது. எழு முடியாரம் என்பது ஏழு அரசர்களது முடிகளினின்று சிறிதளவு பொன்னெடுத்து உருவாக்கிய மாலையாகும். அரசன் நாட்டுவளம் காணச் செல்லும்போது அந்நாட்டுக் குடிகள் விலையுயர்ந்த பொருள்களைக் காணிக்கையாக்கி ஆடியும் பாடியும் அரசனை மகிழ்விப்பர். அரசனும் அவர்களைச் சிறப்பிப்பது வழக்கம். இவ்வழக்கம், இந்நாளில் அஸ்ஸாம் மலைப்பிரதேசங்களுக்கு நம் இந்திய முதலமைச்சர் சென்றபோது அந்நாட்டுக் குடிகள் அவரைச் சிறப்புற வரவேற்றுக் காணிக்கை தந்தும், களி நடமாடியும், மகிழ்வித்ததுபோல் உள்ளதல்லவா?

செங்குட்டுவன் மற்றைத் தமிழரசர்களைப்போலவே செந்நாப் புலவர்கள் பொன்னுரைகளை ஏற்றுக்கொண்டு சிறப்பித்துள்ளான். பிற அரசர்களைப்போலின்றித் தன் ஓரே மனைவியுடன் இறுதிவரைக்கும் வாழ்ந்து பெருமை பெற்றுள்ளான். இவனாட்சியில் பெண்ணுரிமை மிகவும் போற்றப்பட்டு வந்திருத்தல் வேண்டும் என்பது, கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடியதாலும், தன் மனைவியையும் அரசியலில் பங்குகொள்ளுமாறு அனுமதித்ததாலும் விளங்குகிறது. செங்குட்டுவன் ஆட்சிக்காலம், தமிழராட்சியிலேயே ஒரு **பொற்காலம்** என்று அழைப்பதில் தவறுண்டோ?

பயிற்சி

பொருளறிக :

நிலவி	கஞ்சுகம்	நடுகல்
துறவியல்	மக்கள் தாயம்	காணிக்கை
அருளாட்சி	திருமுகம்	
மிகை	திருவோலக்கம்	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

மேற்கொள்ளும், அறிகுறியாக, விலையுயர்ந்த, இறுதி வரை.

விடை தருக :

1. செங்குட்டுவன் ஆட்சியில் தலைநகரில் அரசன் இல்லாதபோதும் அமைதி நிலவி இருந்தது என்பதற்குச் சான்று கூறுக.

2. செங்குட்டுவனின் பெற்றோர் யாவர்?

3. ஐம்பெருங் குழு, எண்பேராயம், கஞ்சுக முதல்வர், பெருமங்கலம், பெருஞ்சோற்று நிலை, எழுமுடியாரம்—இவற்றை விளக்குக.

4. செங்குட்டுவன் படை வலிமையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

5. செங்குட்டுவன் பகைவரிடமும் அன்பு காட்டும் பண்புள்ளவன் என்பதை எதனாலறியலாம்?

6. அரசன் போர் வீரர்களுக்கு எவ்வாறு சிறப்புச் செய்தான்?

7. நாட்டுவளம் காணவரும் மன்னனைக் குடிகள் எங்ஙனம் வரவேற்றார்கள்?

8. குட்டுவன் காலத்தில் பெண்ணுரிமைக்கு உயர்வான இடம் வழங்கப்பெற்றதென்பதைச் சான்றுகளுடன் விளக்குக.

9. செங்குட்டுவன் காலத்தைத் தமிழாட்சியின் பொற்காலம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

இலக்கணம் :

1. கோள்+ஆட்சி, முன்+காலம், செயல்+குழு, அரசன்+அவை, பொன்+காலம்—இவற்றைச் சேர்த்து எழுதுக.

2. அரசே, நீ நீடு வாழ்க.—இவ் வாக்கியத்தில் வாழ்க என்பது வியங்கோள் வினைமுற்று.

வியங்கோள் வினைமுற்று வாழ்த்தல், வைதல், கட்டளை இடுதல், வேண்டிக்கொள்ளுதல் என்னும் பொருள்களில் வரும்.

நீ வாழ்க !—வாழ்த்தல்.

அவன் கெடுக !—வைதல்.

தம்பி வருக !—கட்டளை.

தாயே தருக !—வேண்டல்.

இப்பாடப் புத்தகத்தில் பிறபாடங்களில் வியங்கோள் வினைமுற்றுகளிருப்பின் அவற்றை எடுத்துக் கூறுக.

7. மேழிச் செல்வம்

"*மேழிச் செல்வம் கோழை படாது*" என்பது ஒரு பழமொழி. 'மேழி' என்னும் சொல் ஏரைக் குறிக்கும். கல்விச் செல்வம், பொருட் செல்வம், செவிச் செல்வம் போல மேழியையும் கீழ்மையடையாத செல்வமாக நம் ஆன்றோர் போற்றி வந்தனர் : வருகின்றனர். ஏன்? பார் முழுதும் ஏர் முனையிலே இன்றும், அன்றும், என்றும் அடங்கியுள்ளமையால்தான் 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்னும் பழமொழியும் உண்டாயிற்று. ஏர் என்ற சொல்லுக்கு அழகு என்ெறாரு பொருளும் உண்டு. அழகை விரும்பாதார் யார்? ஆகவே, உலக மக்கள் அனைவரும் ஏரை விரும்புவதில் வியப்பில்லையன்றோ?

"*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்*
உழந்தும் உழவே தலை"

என்று வள்ளுவரும் கூறியுள்ளது இங்குக் கருதத்தக்கது. ஏர்த் தொழிலில் எவ்வளவோ இடையூறுகள் இருக்கின்றன. எனினும், செய்யுந் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால், உய்யுந் தொழிலாய் உயர்வது உழவேயாகும். இத்தகைய உழவுத் தொழிலைப் பற்றி இந்நாளைய இளைஞர்கட்கு அவ்வளவாக ஆர்வம் ஏற்படவில்லை.

உலகில் தோன்றிய பல்வேறு உயிரினங்களுக்கும் உரிய உணவுப் பொருள்கள் இயற்கையாகவே வளர்கின்றன. ஆனால் மனிதனுக்கு வேண்டிய உணவுப் பொருள்மட்டும் உழுது பயிரிட்டு உழைத்தால்

ஒழிய இயற்கையாக உண்டாவதில்லை. எனவே ஒவ்வொருவரும் உணவைப் பெற உழுதொழில் புரிவது இன்றியமையாதது. 'உழவே உலக முதல் தொழில் ஆகும்,' என்னும் ருஷ்யஞானி டால்ஸ்டாயின் பொன்னுரையை அறிந்த எவரும் உழவுத் தொழிலை இழிவாக எண்ண மாட்டார்கள். பெருஞ் செல்வராயிருந்த டால்ஸ்டாய் பிரபுவே தம் முதுமைக் காலத்தில் இவ்

வுண்மையை உணர்ந்து தம்செல்வ வாழ்வை ஒழித்து ஏழை உழவனாய் மாறி உழுதுண்டு வாழ்ந்தார். ஆங்கிலக் கல்வி சிறிது கற்றவுடனேயே காலில் சேறுபடக் கூசும் இக்காலை இளைஞர்கள் இவ்வுண்மையை உணர்ந்துழைப்பது நலம். பழைய நாளில் சீனாவில் சீனப் பேரரசரே ஒரு நாள் பொன்னேர்ப் பூட்டிப் புதுவுழவைத் தொடங்கி வைப்பாராம். நம் நாட்டிலும்

ஔவையார் என்ற தமிழன்னையும் 'வரப்புயர!' என்ற மந்திரத்தைத் தம்மை வணங்கியவர்க்கெல்லாம் ஓதி வந்ததும் ஏன் என்பதை உன்னுக. குடபுலவியனார் என்ற சங்கச் சான்றோர் ஒருவரும், உழவுத் தொழிலைப் போற்றாமல் போர்த் தொழிலையே பேணிவந்த தலையா லங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு உழ வின் மேன்மையை அவன் உளங் கொள்ளும் வழிச் சொல்லித் திருத்தியுள்ளார். உழவின் வளர்ச்சியைக் கருதியே சோழ வளநாட்டைச் சோறுடைத்தாக்கக் கரிகாற் சோழன் காவிரிக்குக் கரைகட்டித் திருமாவள வன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். ஆகவே சங்க காலத்துக்கு முன்னிருந்து இன்றுவரை உழவு இன்றியமையாத தொழிலாக உள்ளது. தொழுதுண்டு வாழும் தொழில்களுக்குப் பழுது உண்டாகலாம்: ஆனால் உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பேது? பழுதேது?

இவ்வாறு பாவலராலும் காவலராலும் பாராட்டப் பட்டுப் பாதுகாக்கப்பட்டுவந்த உழவுத் தொழில் இந் நாள் வளங்குன்றிப் போனதேன்? இதற்கு எத் துணையோ காரணங்கள் இருக்கின்றன. எனினும் கீழ் வருவனவற்றைத் தலையாய காரணங்களாகக் கூற லாம்: 1. நாட்டின் மக்கள் தொகை மிகுதி, 2. பண் படாத பூமிகள், 3. உழவர்களின் ஏழ்மை, அறியாமை, கடன் சுமை முதலியவை, 4. விஞ்ஞான முறையில் பயிர்த் தொழில் செய்யாமை, 5. பருவ மழைகள் தவறுங்கால் நிலையான நீர் வசதியின்மை, 6. நிலவளம் பெருக்கப் படாமை முதலியன.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ முக்கால் கோடிபேர் மக்கள்தொகையில் கூடுதலாகின்றனர். அது

போல் பயிரிடத்தக்க நிலப்பரப்பும் வளரவில்லை. குடும்பத்துள் பிள்ளைகள் பெருக்கத்தால் பாகப் பிரிவினை மூலம் நிலம் சிறு சிறு துண்டுகளாகின்றன. இவற்றால் பெரிய அளவில் பயிரிடமுடியாமல் ஊக்கம் குறைந்து உழவுத் தொழில் புறக்கணிக்கப்படுகிறது. நம் நாட்டில் 320 இலட்சம்ஏகர் நிலமே பயிராகிறது. ஆனால், எட்டுக் கோடி ஏகர் நிலம் உள்ள இம் மாநிலத்தில், காடுகளும், சாகுபடிக்குதவாத வெற்று நிலங்களும் போக 205 இலட்சம் ஏகர் நிலம் பயிரிடப்படாமல் உள்ளன. இவ்வளவு பரந்த நிலத்தைப் பண்படுத்தாமல் விட்டிருப்பது நம் குறையேயாகும். உழவர்களுக்கு ஏழ்மையும் அறியாமையும் என்று ஒழியுமோ அன்றே நம் நாட்டு உழவுத் தொழிலுக்கு ஒரு நல்ல வழி ஏற்படும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் அரசாங்க ஆதரவாலும் உழவர்களுக்குள்ள குறைகளை விரைவில் களையவேண்டும்.

அறிவியற் கலைகளின் ஆக்கத்தால் 'டிராக்டர்கள்' போன்ற புதிய கருவிகள் பல பயிர்த்தொழிலை வளப்படுத்த வந்துள்ளன. உழுதல், விதைத்தல், களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல், செடிகளுக்கு நோய் வராமல் தற்காப்புக்குரிய மருந்து தூவுதல், அறுத்தல் முதலிய பல தொழில்களுக்கும் இக்காலத்தில் இயந்திர உதவி எளிதில் கிடைக்கிறது. வீணுகப் பழமை, பழமை என்று பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இன்னும் கவலை ஓட்டிக்கொண்டிருந்தால் நம் கவலைதான் பெருகும்; ஏற்றமே இறைத்துக் கொண்டிருந்தால் நமக்கு ஏற்றம் வந்துவிடாது என்பதை உழவர்கள் உணரச் செய்யவேண்டும். புதிய கருவிகளில் **டிராக்டர்களை** (Tractors) உழுவதற்கும், நீர் இறைக்கும் பொறிகளை

(Oil Engines) நீர் பாய்ச்சுவதற்குமாவது நாம் பயன் படுத்தவேண்டும். பலர் கூடியோ, அல்லது அரசாங் கத்தார் மூலமோ வாடகைக்கு வாங்கியோ இவற்றைப் பயனாக்கிக் கொள்ளுதலே பகுத்தறிவாகும்.

துண்டு நிலங்களை டிராக்டர்களால் உழுதல் இய லாது. ஆகவே, துண்டு நிலங்களை உடையோர் ஒன்று சேர்ந்து ருஷ்யாவில் நடப்பதுபோல் கூட்டுப் பண்ணை கள் ஏற்படுத்தி இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். விளைவால் வந்த பயனை அவ ரவர் நில விகிதப்படிப் பிறகு பிரித்துக்கொள்ளுதல் நல்லது.

பருவ மழை தவறுங்கால் மழை பொழிவிக்கும் விஞ்ஞான முறையையும் மேற்கொள்ளுதல் நல்லது. ஆனால் ஏழைகள் மிக்க இந்தியாவில் இஃது இயலுவ தன்று. ஆகவே, வீணே கடலில் கலக்கும் வற்றாத காவிரி, கோதாவரி, கிருஷ்ணா, கங்கை முதலிய ஆறு களில், மேலும் பற்பல அணைகள் கட்டி நீரைத் தேக்கு தல் இன்றியமையாதது. இம் முறையில் நாம் ஓரளவு தான் முன்னேறியுள்ளோம். பயிர்த் தொழிலுக்கு மின்சார சக்தி சிறந்த ஊழியனாய் உதவும். ஆகவே அணைகள் மூலம் மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படுத்த வும் அரசியலாருடன் நாம் உழைக்கவேண்டும்.

நிலத்துக்கு உரியவன் நாள்தோறும் நிலத்தை ஓம்பி வரவேண்டும். நிலவளம் குறைந்து போகாதபடி தக்க வல்லுநர்களை உசாவி, நிலத்தில் எந்தச் சத்துக் குறைந்திருக்கிறதோ அந்தச் சத்தை இயற்கை உரங் களாகிய தழை, பிண்ணாக்கு, சாணம், எரு முதலிய வற்றாலும், செயற்கை உரங்களாகிய அம்மோனிய

உப்பு, பொட்டாஷ் உப்பு போன்ற உரங்களாலும் வளங் குன்றுதபடி காத்தல் வேண்டும்.

நாட்டைக் காப்பதற்காக நாட்டின் விரோதிகளை அரசன் எப்படிக் கடுமையாகத் தண்டித்து அடக்கு வானே அப்படியே உழவனும், தன் நிலத்தில் பயிர் ஏறியுள்ளபோது, பயிரை அழிக்கும் களைகளையும், புழு, வண்ணாத்திப்பூச்சி, வெட்டுக்கிளி, அரிசி மூட்டைப்பூச்சி, எறும்புச் சிங்கம் முதலியவற்றை ஒழிக்கவும், வரா மல் தடுக்கவும் முயலவேண்டும். சிறந்த வித்துக் களைத் தேர்ந்து எடுத்துப் பருவத்தே பயிர் செய்ய வேண்டும்.

இவ்வளவுக்கும் மேலாக, நாம் பிறநாட்டு நல்ல றிஞர் புதிது புதிதாகக் காணும் உண்மைகளையும் அவ் வப்போது அறிந்துகொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாக ஜப்பான் நாட்டில் நெல் பயிரிடுமுறையைக் கூறலாம். இஃது ஒரு தனி வகை. இம் முறையினால் நம் நாட்டைவிட ஒன்பது மடங்கு நெல் அதிகம் உற் பத்தி செய்யமுடியுமாம். இதைப்போலவே ருஷ்யா விலும் அமெரிக்காவிலும் மேற்கொண்டுள்ள முறை யால் அக் நாடுகள் உணவு உற்பத்தியில் உலகின் முன் னிலையில் நிற்கின்றன. நெல்வேலி, நெற்குப்பை, நெல் வாய், நெல்லூர், நெல் மலி என்றெல்லாம் ஊர்களுக்குப் பெயர்வைத்த தமிழ்நாடு இன்று உணவுப் பொருளுக் காகப் பிறநாட்டை எதிர்பார்க்கும் நிலையை எண்ணிப் பாருங்கள். நம் நாட்டுக்கு வேண்டிய உணவை நாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் பழம் பெருமை பேசிக்கொள்வதில் பொருளுண்டு. இளைஞர்களே! எதிர்காலம் உங்கள் கையில்தான் உள்

ளது! பயிர்த் தொழிலாளன் என்று சொல்லிக்கொள் வதில் உவகைகொண்டு உழையுங்கள்.

ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்றுவர எளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்பின்
என்றும் உழவே இனிது.

பயிற்சி

பொருளறிக :

மேழி	பாவலர்	ஓம்பி
பொன்னுரை	காவலர்	முன்னணி
ஆர்வம்	பழுது	

சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

சீர் தூக்கி, இன்னாமை, தலையாய, புறக்கணிக்க.

விடை தருக :

1. உழவின் சிறப்பைக் கூறும் பழமொழிகள் யாவை?

2. உழவுத் தொழிலைப்பற்றி டால்ஸ்டாய் கூறும் பொன்னுரை யாது?

3. உழவுத் தொழிலின் உயர்வு பற்றிப் பாடிய புலவர்கள் யாவர்?

4. நம் நாட்டில் பயிர்த்தொழில் வளங்குன்றியதற்குக் காரணங்கள் யாவை?

5. பயிர்த்தொழில் முன்னேற்றத்துக்கு நாம் செய்ய வேண்டுவன யாவை?

இலக்கணம் :

1. உழவை விரும்பாதார் யார்?—இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றிக் கூறுக.

2. இப் பாடத்தின் முதல் பாராவில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சங்களைத் தனித் தனியே எடுத்துக் கூறுக.

8. கொடியைக் காத்த குமரன்

கோவை மாவட்டத்தில் சென்னிமலை என்னும் ஊர் இயற்கை எழில் மிக்க ஊராகும். ஆண்டுச் செல்வ ராய் இருந்து பின்னர் ஏழ்மை நிலையை எய்தியவர் **நாச்சியப்ப முதலியார்** என்பவர். நாச்சியப்பரின் நற்றவப் பயனாய் 1904-ஆம் ஆண்டில்,குமாரசாமி என் னும் நன்மகன் அவதரித்தார். அவர்தம் வீர அன்னை யின் பெயர் **கறுப்பாயி யம்மாள்**. குமாரசாமிக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. மூவரில் குமாரசாமியே இளையவர் ஆவர். சின்னஞ் சிறு பிராயத்திலேயே குமாரசாமி நற்குணங்கள் பலவற்றுக்கும் உறைவிடமாய் விளங்கினார். ஏழைக் குடும்பத்தில் பிறந்திருப்பினும் அவர் கல்வியில் கருத்தாக இருந்து ஆண்டு தோறும் தேர்வில் வெற்றி பெற்று வல்லவராக விளங்கினார். ஆரம்பப்பள்ளிப் படிப்புடன் குமாரசாமி தம் பயிற்சியை நிறுத்த வேண்டியதாயிற்று.

குடும்பத்தைக் காக்கப் போதிய வருவாய் இல் லாத நாச்சியப்பர் தம் மகனை நெசவுத் தொழிலை மேற் கொள்ளச் செய்தார். அதனால் வரும் சிறு ஊதியத் தைக் கொண்டு தம் எளிய குடும்பத்தைச் சீரிய முறை யில் நடத்தி வந்தார். அறிவாற்றல்களில் சிறந்த குமார சாமி உயர்நிலைப் பள்ளியிற் சென்று பயிலவேண்டும் என்னும் அவாக்கொண்டவராயினும், தம் குடும்ப நிலை கண்டு மனந்தளர்ந்து தம் பத்தாம் வயதிலேயே தறி நெய்வதில் ஈடுபட்டார். தொழிலில் கண்ணுங் கருத்துமாக விளங்கினார்.

அவர்தம் பதினான்காம் வயதில் பள்ளிப் பாளையம் என்னும் ஊரில் உள்ள தம் மாமன் வீட்டை அடைந்தார். அங்கு மூன்று ஆண்டுகள் தங்கி நெசவுத் தொழிலில் சிறந்த தேர்ச்சி பெற்றார். பின்னர், தம் பதினேழாம் வயதில் மீண்டும் சென்னிமலைக்கு வந்தார்.

1926-இல் குமாரசாமி தன் குடும்பத்துடன் கோவைக் கடுத்த திருப்பூரிற் குடியேறினார். அங்கே பருத்தி வாணிபம் நடத்திய முதலாளிகளிடம் ஊழியஞ் செய்துவந்தார். திருப்பூருக்குச் சென்ற நாளிலிருந்து குமாரசாமி நாட்டின் விடுதலைக்காகத் தலைவர்கள் புரியும் தொண்டுகளைக் கவனித்தார்; அவர்கள் பேசும் பேச்சுக்களை உற்றுக் கேட்டார். அவர் உள்ளத்தில் நாட்டுப்பற்று வேரூன்றத் துவங்கியது. நாட்டுரிமைக் கிளர்ச்சியில் நாட்டங் கொண்ட குமாரசாமி, 1930-ஆம் ஆண்டில் தீவிரமான தேசாபிமானியாகத் திகழ்ந்தார். அண்ணல் காந்தியடிகளின் அறவுரைகளைக் கடைப் பிடித்துத் தம்மால் இயன்றமட்டும் நாட்டுப் பணியாற்றி வந்தார். அயல் நாட்டுத் துணியை அறவே வெறுத்தார்; சொந்த நாட்டுக் கதர் அணிந்து தூய உள்ளத்தினராய் வாழ்ந்து வந்தார்.

ஆங்கில அரசியலார், மகாத்மா காந்தி, ஜவஹர் முதலிய தேசத் தலைவர்களின் கிளர்ச்சிகளைக் கண்டு இந் நாட்டுக்கு எத்தகைய ஆட்சியுரிமை நல்கலாம் என்பதை உணர்வதன் பொருட்டு, **ஸர் ஜான் ஸைமன்** தலைமையில் 1928-இல் இந்தியாவுக்கு ஒரு குழுவினை அனுப்பினர். மகாத்மா காந்தியடிகளாரின் விருப்பப்படி ஸைமன் குழு புறக்கணிக்கப்பட்டது. திருப்பூர்க்

குமரன் இல்லமறை காய் போல் இருந்து தேசிய இயக்கத்துக்கு வேண்டிய உதவிகள் புரிந்தார். அவ்வமயத்தில்தான் முதலாவது **சட்டமறுப் பியக்கம்** நாடெங்கும் நடைபெற்றது. குமரனின் மனம் குடும்பத் தொல்லையிலும், சட்ட மறுப்பு இயக்கத்திலுமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. முடிவாக நாட்டின் விடுதலைக்காக எத்தகைய தியாகத்துக்கும் முன் வருவதெனத் தீர்மானித்தார். அக் காலத்தில் அவர் தந்தையார் நாச்சியப்ப முதலியாரும் காலமானார். குமரன் குடும்பத்திலிருந்து விலகினார். ஆனால் அவர் அறப் போரில் சேரத் தலைவரின் இசைவு கிடைக்கவில்லை. அதனால் மனமுடைந்த குமரன் சில நாட்கள் உண்ணா நோன்பு பூண்டார். அச்செயலின் மூலம் மக்கள் குமரனின் தியாக சிந்தனையையும் நாட்டுப் பற்றையும் நன்கு அறிந்தனர்.

மீண்டும் ஓர் அறப்போர் விரைவில் தொடங்க வேண்டுமெனக் குமரன் இறைவனை இறைஞ்சி வந்தார். 1930-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகள் சட்டமறுப் பியக்கத்தை மறுபடியும் துவக்கினார். அந்நியர் நாட்டுத் துணிமறியல் நடைபெற்றது. அச் செய்தியைக் கேள்வியுற்ற குமரன் இன்பக் கடலில் திளைத்தார். குடும்பக் கவலையைச் சிறிதும் நினையாமல் அறப்போரில் சேர உறுதி கொண்டார். 10—1—32 ஞாயிற்றுக் கிழமையன்று தன் அருமை அன்னையாரிடமும் வாழ்க்கைத் துணைவியாரிடமும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். குமரனின் துணிவைக் கண்டு அவ்விருவரும் பெரிதும் மனம் வருந்தி ஒருவாறு இசைவு தந்தனர்.

பொழுது புலர்ந்தது. குமரன் வைகறையில் தன் படுக்கையை விட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டார் : புத்தாடை அணிந்தார் : காலை எட்டு மணிக்கெல்லாம் உணவுண்டு காங்கிரஸ் சபையின் அறப்போர் அலுவலகத்துக்குச் சென்றார். குமரனின் உண்மை உள்ளத்தை உணராத சத்தியாக்கிரகத் தளபதி அவரை அறப் போரில் சேர்த்துக்கொள்ள இயலாது எனத் தெரிவித்து விட்டார். என் செய்வார் குமாரசாமி? எண்ணிய எண்ணத்தில் இடி விழுந்ததே எனத் துடித்தார். அங்கு வந்திருந்த மற்றத் தொண்டர்கள் குமாரசாமியின் உண்மை நாட்டுப் பற்றையும் ஆர்வத்தையும் அறப்போர்த் தளபதிக்கு விளக்கி அவரையும் தம்முடன் அறப்போர் மறியலில் சேரும்படி செய்தனர். தொண்டர்கள் அந்நிய நாட்டுத் துணி மறியலுக்குப் புறப்படச் சித்தமாய் இருந்தனர்.

மணி ஒன்பது அடித்தது. சர்வாதிகாரியின் ஆணைப்படி தொண்டர்கள்,

"சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி அஞ்சிடோம்"

என்னும் புரட்சிக் கவிதையைப் பாடிக்கொண்டே அந்நிய நாட்டுத் துணி மறியலுக்குப் புறப்பட்டனர். அமைதியுடனும் உணர்ச்சியுடனும் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. அவர்கள் பாடிய தேசிய கீதங்களும், முழங்கிய வீர உரைகளும் விண்ணையும் மண்ணையும் அதிரச் செய்தன. அவர்கள் போக்கு சகிக்க முடியாதெனை உணர்ந்த போலீஸ் அதிகாரி அவர்களைக் கலைந்து போகுமாறு குறுந்தடி கொண்டு தாக்கினார். தொண்டர் படை சின்னா பின்னமாகச் சிதறியது.

ஆனால் வீர உள்ளம் படைத்த குமரன் மட்டும் நின்ற இடத்தை விட்டு அணுவளவும் அப்புறம் போகவில்லை. கையில் பிடித்த தேசியக் கொடியைத் தாழ விடவில்லை. குறுந்தடியினால் கொடுமையாகத் தாக்கப்பட்டபோதும் கொடியை இறுகப் பற்றி நின்றார் குமரன். போலீசார் தங்கள் கை ஓயும் வரையில் நம் குமரனைத் தடியினால் தாக்கினார்கள். தலையில் ஓரடி பலமாக விழுந்தது. அந்தோ! குமரன் கொடியைக் கைவிடாமல் குற்றுயி ராய் மண்ணில் சாய்ந்தார். 'உச்சி மீது வானிடிந்து விழ்ந்துவிட்ட போதிலும் அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமில்லை!' என்னும் பண்டைத் தமிழர் வீர மரபைச் சார்ந்த குமரனின் ஆண்மையையும், அறிவு நுட்பத்தை யும், தேசப் பற்றையும் கண்டு அனைவரும் வியந்தனர். அவருக்கு நேர்ந்த இடுக்கண் கண்டு ஆருத்துயரில் ஆழ்ந்தனர்.

குமரனின் உடல் சிகிச்சைக்காக மருத்துவ விடு திக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மறுநாள் காலை குமரன் இவ்வுலக வாழ்வை நீத்தார். அன்னையின் விடுதலைக்காக அவர் இன்னுயிரையே பலியாக்கினார். என்னே அவர்தம் தியாகம்!

ஒரு நாட்டுக்கும் சமூகத்துக்கும் உள்ள வலிமை யின் அறிகுறியாக விளங்குவதே அந் நாட்டில் விறுடன் பறக்கும் கொடியாகும். தம் கொடி தாழுமாறு எந்த நாட்டினரும் விரும்பமாட்டார்கள். வீரர்களுக்கு ஊக்க மும் உற்சாகமும் அளிப்பது தாய் நாட்டின் கொடியே யாகும். தம் உயிரையும் பொருட்படுத்தாது கொடி யினைக் காத்து நின்ற குமரன் பெயரால் தற்காலத்தில் ஆங்காங்கே சில கழகங்களும் படிப்பகங்களும் ஏற்

-பட்டுள்ளன. வீரத் தியாகி குமரன் புகழ் என்றும் மங்காமல் இருக்க நினைவுச் சின்னமொன்று அமைப்பது தமிழர்களாகிய நமக்கு உற்ற கடமையாகும்.

பயிற்சி

பொருளறிக :

வாய்ப்பு	இயக்கம்	இடுக்கண்
சிந்தனை	துஞ்சிடோம்	ஆருத்துயர்
உறைவிடம்	குறுந்தடி	குற்றுயிர்
நாட்டம்	தளபதி	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

சின்னஞ் சிறு, இலைமறை காய் போல், ஊசலாடி, மனமுடைந்து, கண்கொள்ளாக் காட்சியாக, கண்ணும் கருத்துமாய்.

விடை தருக :

1. திருப்பூர்க் குமரனின் பெற்றோர்கள் யாவர்?

2. குமாரசாமியின் உள்ளத்தில் நாட்டுப்பற்று வேரூன்றி வளர்ந்த விதத்தைப்பற்றி விளக்குக.

3. குமரன் அறப்போரில் சேர்ந்து கொள்வதற்குச் செய்த முயற்சி யாது?

4. குமரனைக் 'கொடியைக் காத்த குமரன்' என்று போற்றுவது எப்படிப் பொருந்தும்?

5. குமரன் வாழ்க்கையால் நாம் அறிவது யாது?

இலக்கணம் :

சொல்லிலக்கணம் கூறுதல் :

1. **குமரன் கொடியைக் காத்தார்.**

குமரன் : பெயர்ச் சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை யெண், படர்க்கை இடம், எழுவாய் வேற்றுமை. காத்தார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

கொடியை : பெயர்ச் சொல், அஃறிணை, பலவின்பால், பன்மை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, செயப்படுபொருளாகி, காத்தார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

காத்தார் : வினைமுற்று, உயர்திணை, ஆண் பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம். குமரன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

2. பாடிய பெண்.

பாடிய—உடன்பாட்டுப் பெயரெச்சம். பெண் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தது.

3. பாடி ஆடினாள்.

பாடி—உடன்பாட்டு வினையெச்சம்; ஆடினாள் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

4. மேற்கூறியவாறு கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.

(i) சென்னிமலை எழில் மிகுந்த ஊராகும்.

(ii) அவர் உள்ளத்தில் நாட்டுப்பற்று வேரூன்றத் தலைப்பட்டது.

9. சந்தச் சாமியார்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் இராமநாதபுரத்தை முத்துராமலிங்க சேதுபதி என்பவர் ஆண்டுவந்தார். அவருடைய அண்ணலார் பொன்னுசாமித் தேவர் சிறந்த தமிழறிஞர். அவர் தம்பிக்கு அமைச்சராயிருந்து ஆட்சியைச் செவ்வனே நடத்தி வந்தார். பொன்னுசாமித் தேவர் புலவர்கள் பலர்க்கும் அவர்தம் வரிசை யறிந்து பரிசுகள் வழங்கி ஆதரிக்கும் அருங்குணம் படைத்தவர். சங்ககாலத்து அரசர்களைப் போலவே சகோதரர்களிருவரும் தமிழில் சிறந்த கவிகள் பல பாடியுள்ளனர்.

பொன்னுசாமித் தேவரவர்கள் தாமே புலவர்களிடம் பல துறைகளைக் கூறியும், அடி எடுத்துக் கொடுத்தும், பாடச் செய்து, சோதித்தறிந்து அவர்கள் புலமையைச் சுவைத்து மகிழ்வார். இம்முறையினால், பொன்னு சாமித் தேவரிடம் செல்லும் அரை குறைப் புலவர்களும், போலிக்கவிஞர்களும் அவமானமடைந்து திரும்புவது வழக்கம். அங்ஙனம் அவமதிப்புற்றுத் திரும்பியவர் பலர். அவர்களுள் சந்தச் சாமியார் என்பவரும் ஒருவர் ஆவார்.

சந்தக்கவிகள் பாடுதல் எளிதன்று. அதற்கு நிரம்பத் தமிழ்ப் பயிற்சி வேண்டும். சந்தச் சாமியார் சந்தக் கவிகள் பாடுவதில் திறமையுடையவரா யிருந்தார். ஆனால் அவர் ஆணவமும் தற்பெருமையும் உடையவராகவும் இருந்தார். சந்தச் சாமியார் தம்மை முருகன் அவதாரம் என்றும். வேண்டியவர்க்கு வேண்டிய வரங்

களைத் தர வல்லவர் தாம் என்றும் கூறி விளம்பரஞ் செய்து வந்தார். தம் மாணவர்களுடனும், பல விருதுகளுடனும் செல்வர்களையும், நிலக்கிழார்களை.யும், வள்ளல்களையும் சந்தித்து அவர்கள்மேல் சந்தக் கவிகள் பாடி முருகன் தம்மேல் ஆவேசித்துள்ளதாகப் புகன்று, பொய்யாக வெறியாடுவார். அப்பெருமக்கள் அவர் ஆரவாரத்துக்கு அஞ்சி அளிக்கும் அளவற்ற பொருளைக் கொண்டு தம் வாழ்க்கையைச் சிறிதும் துன்பமின்றி இன்பமாக நடத்தி வந்தார்.

ஒரு நாள், சந்தச் சாமியார் இராமநாதபுரம் போந் தார். சேதுபதியையும் பொன்னுசாமித் தேவரையும் கண்டு தம் திறமையைக் காட்ட எண்ணினார். சாமி யார் வருகையை முன்னதாகவே தேவர் அவர்கள் அறிந்து கொண்டார். சாமியாரின் போலித் தன்மையை வெளிப்படுத்தத் தேவரவர்கள் மனங் கொண்டார்.

மறுநாள் வழக்கம்போலத் தேவரவர்களின் புலவர் திருச்சபை கூடிற்று. தேவர் அவர்கள் புலவர்கள் சூழ வீற்றிருந்து, அவர்கள் பாடி வந்த புதிய கவிகளைக் கேட்டு மகிழ்ந்தார். சிலர் பழங்கவிகளுக்கு விரிவுரை களை விளக்கிக் கூறக் கேட்டு உவந்தார். தேவரவர்கள் இவ்வாறு அருங்கவி நயத்தைச் சுவைப்பதில் ஈடு பட்டி ருந்த வேளையில், கையில் வேல் ஏந்தியவாறு சந்தச் சாமியார் அங்கு வந்து சேர்ந்தார். "முருகா! முருகா!" என்று உரக்க ஓசையிட்டவாறு அவைக்குள் நுழைந்த சாமியாரைத் தேவர் வரவேற்க வில்லை. எனினும் சபையை ஊடறுத்துக்கொண்டு தாமே சென்று தேவ ரவர்கள் அருகில் காலின்மேல் கால் போட்டவாறு, சிறிதும் மரியாதை இல்லாமல் செருக்குடன் அமர்ந்து

கொண்டார். சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு ஏதோ முணு முணுத்துக் கொண்டார். தேவர் இவற்றை யெல்லாம் கண்டும் வாய் மூடி மௌனி யாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இதை யறிந்த சாமியார் தம்மைத் தேவர் அவமதித்ததாகக் கருதி ஆவேச முற்றவர்போல் எழுந்து நின்று, கைகளை வீசிக் கொண்டும், கண்களை மிரள மிரள விழித்துக் கொண் டும். அவையோர்க்கு அச்சம் உண்டாகும்படி இங்கு மங்கும் அலைந்தார்.

சபையோர் காணுததைக் கண்டவர்போல் வியப்புற் றும் திகைப்புற்றும் தேவரையும் சாமியாரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந் நேரத்தில் சாமியார், "அடா, நம்மை யார் என்று தெரிந்து கொள் ளாமல் அகந்தை மேலிட்டு அவமதித்தாய். நாமே சூரனைக் கொன்ற வீரக்கடவுள் முருகன். பன்னிருகை யுடைய பழனிவேலன். ஆறுமுகம் படைத்த ஐயன் யாமே என்பதறிக. இனியாவது முறையறிந்து நடந்து கொள்வாயாக. நீ எம் மெய்யன்பன் என்று இரக்கம் கொண்டு நினக்கு அருள்புரிய யாமே வலிய வந்தோம் அன்றி வேறில்லை." என்று கணகளில் கனல் பறக்கக் கூறி அமர்ந்தார். சபையினர் சந்தச் சாமியின் கடுஞ் சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டனர். அப்போழ்து, தேவர் சபையினரை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, "அடா! அடா! அறிந்து கொண்டேன்: அடியேனைப் பொறுத்தருள வேண்டும்," என்று புகன்றார்.

தேவர் குரலைக்கேட்ட சாமியார், "சரி, உன் வேண்டு தலை ஏற்றுக்கொண்டோம். நீ செய்த பிழையை மன் னித்து விடுகிறோம். இனிமேலாவது எம்போன்ற பெரி

யோர்களை அவமதித்து அவதிப்படாதே,'' என்று சொல்லி மேலும் பல அறிவுரைகளைக் கூறலானார். அச்சமயம் சபையின் ஒரு கோடியிலிருந்து 'முசு முசு' வென்று ஓரோசை சிறிதாகக் கிளம்பிப் பெரிதாக வளர்ந்தது. மேலும், மாளிகை முற்றும் எதிரொலிக்குமாறு வளர்ந் தது. சிறிது நேரத்தில் ஓசை வந்த பக்கமிருந்து கருத்துப்



பருத்த ஓர் உயர்ந்த உருவம், வெடிபடச் சிரித்து, இடி போன்ற கடுங்குரலில், "அடா, அடா, என்ன விந்தை! என்ன மாயம்!'' என்று குமுறிற்று. அந்த ஆவேச மூர்த்தி தேவர் எதிரே தோன்றிற்று. சுற்றுமுற்றும் பார்த்து முடிவில் சாமியாரை நோக்கி வெறிகொண்டு நகர்ந்தது. "எங்கே அவன்?'' என்று சாமியாரைத் தேடு வதுபோல் இங்குமங்கும் தேடிவிட்டு அவரை நோக்கி,

"ஆ! இங்கேயா இருக்கிருய்?" என்று கூறி எட்டிப் பாய்ந்து சாமியார் கையிலிருந்த வேலைப் பறித்துத் தன் கையில் பிடித்துக்கொண்டது. சாமியாரை அசையவிடா மல் அவர் முதுகின்மீது ஏறி நன்ருக அமர்ந்து, "அடா! மோசக்காரனே, உன் பொய்யை வெளிப்படுத்த நாமே நேரில் வந்துவிட்டோம். நீ புளுகுவதெல்லாம் எமக்குத் தெரியாதென்று நினைத்தாய்? நீ நம்மைப் பழநியில் வந்து அடுத்ததனுல், நம்மன்பர் தேவரவர்களிடம் போய்ச் சந்தக்கவி பாடி, வந்த பரிசைக்கொண்டு மகிழ்ந்து வாழ்க என்று சொல்லி யனுப்பினேம். இங்கே வந்து நாமே நீயென்றும், வேண்டியது அருளவல்ல வன் என்றும் இப்படியா புளுகுவாய்?" என்று முழங்கி யது. சந்தச் சாமியார் மூச்சுவிட முடியாமல் திணறினர். மேலும் அந்த உருவம், "அடா, மூடா! நம் பெயருக்கு இழுக்குத் தேடி வைத்தாய். பாதகா, உன்னை என்ன செய்தாலும் தகும். ஆனல் எம் மேல் சந்தக் கவிகள் பல பாடியுள்ளாய். அதனுல் உன் குற்றத்துக்குத் தண் டனையாகப் பொய்கூறிய உன் நாவை அறுக்காமல் மன்னித்துவிடுகிறேன். இனி இப்படிப்பட்ட ஏமாற்றுத் தொழிலில் ஈடுபடுவதில்லை என்று சத்தியம் செய். இன்றேல் உன்னை விடமாட்டோம். என்ன சொல் கிருய்?" என்று கேட்டது. வேலால் சாமியாரை இடித்து விலா முறியும்படி அழுத்தி அமுக்கியது. சணப்பன் வீட் டுக் கோழி தானே வலையில் சிக்கிக்கொண்டது போல ஆபத்தில சிக்கி அவதிப்படும் சாமியார், 'எப்படித் தப்பு வது?" என்பது தெரியாமல், "முருகா, பிரபுவின் அரு மையை அறியாமல்போனேன்," என்று கதறினர். அவை யோரில் சிலர் எழுந்து அக்கரிய உருவத்தைப் பணிந்து

நோக்கி, "சுவாமி, தேவர் அவர்களின் தகுதி, அறியாது தவறிழைத்த இப் போலிச் சாமியை மன்னித்து விடுங்கள்; இவர் கூறிய கொடுஞ் சொற்களையும், ஏமாற்ற முயன்ற செயலையும் பொருத்தருள் புரியுங்கள். சிறியோர் செய்த சிறு பிழையை மட்டுமே பெரியோர் பொறுப்பது முறையோ? தெரியாமல் சிறியோர் பெரும் பிழை செய்தால் அதையும் அருள் கூர்ந்து மன்னிக்கத்தான் வேண்டும்." என வேண்டினர். சாமியாரும் சமயோசிதமாக, "ஆம், சுவாமி, அடியேனை இம்முறை மன்னித்தருள்க. இனி இவ்வாறு நடவேன். இப்பக்கம் இனித் திரும்பியும் பாரேன்," என வேண்டினர்.

அந்த உருவம், "அடா அறிவு வந்ததா? பிழைத்துப் போ. உன்னை மன்னித்தோம்," என்று கூறிச் சாமியாரை விட்டு இறங்கியது. தப்பியது தம்பிரான் அருள் என்று சந்தச் சாமியார் அச்சம் மிக்கவராய் ஓடிப்போனார்.

தேவர் அப் போலிச்சாமியாரை அடக்க விரும்பியே முன்னர் அவையைச் சுற்றி உற்றுப் பார்த்தார். அவர் குறிப்பை உணர்ந்த மீனாட்சிசுந்தர குருக்கள் என்ற அறிஞரே அவ்வாறு ஆவேச மூர்த்தியாக நடித்துப் போலிச் சாமியாருக்குப் புத்தி புகட்டினர். இச் செய்தியை அறிந்த சபையினர் யாவரும் தேவரின் அறிவு நுட்பத்தை வியந்து பாராட்டினர்.

பயிற்சி

பொருளறிக:

சந்தக்கவி	விருந்து	விலா
செவ்வனே	துறை	
வரிசை	அகந்தை	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

வரிசை யறிந்து, வெளிவேடம், முணுமுணுத்து, மிரள மிரள, உற்றுப் பார்த்து, இங்குமங்கும்.

விடை தருக :

1. பொன்னுசாமித் தேவரின் அருங்குணங்கள் யாவை?

2. போலிப் புலவர்பால் பொன்னுசாமித் தேவர் எங்ஙனம் நடந்துகொண்டார்?

3. சந்தச் சாமியார் ஆணவத்தைக் குறிக்கும் நிகழ்ச்சியைச் சுருக்கி எழுதுக.

4. "அடா அடா! என்ன விந்தை! என்ன மாயம்"— இதனை இடஞ்சுட்டி விளக்குக.

5. சந்தச் சாமியாரின் செருக்கு எவ்வாறு அழிந்தது?

6. ஆவேச மூர்த்தியாக நடித்தவர் யார்? அவர் ஏன் அங்ஙனம் நடித்தார்?

7. இப் பாடத்தால் நீ அறியும் நீதிகள் யாவை?

இலக்கணம் :

1. சாமியாரும் சமயோசிதமாக, " ஆம் சுவாமி, அடியேனை இம்முறை மன்னித்தருள்க; இனி இவ்வாறு நடவேன்; இப்பக்கம் இனித் திரும்பியும் பாரேன்," என வேண்டினர். —இதனை அயற்கூற்ருக மாற்றிக் கூறுக.

2. ஓர் உயர்ந்த உருவம் வெடிபடச் சிரித்து இடிபோன்ற கடுங்குரலில் அடடா என்ன விந்தை என்ன மாயம் என்று குமுறிற்று. —இவ்வாக்கியத்தில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடுக.

10. பயணக் கடிதம்

135, பவழக்காரத் தெரு,
சென்னை,
27-1-'51.

அன்பே உருவமான புகழேந்தி,

வணக்கம். உன் அன்புமடல் வரப் பெற்றேன். சென்ற ஐந்து நாட்களாக நான் சென்னையில் இல்லை. அதனால்தான் உன் கடிதத்துக்கு உடனே மறு கடிதம் எழுதவில்லை. மன்னிக்க வேண்டும்.

சென்ற வாரம் என் வாழ்நாளில் ஒரு பொன்னான வாரம் என்றே கூறுவேன். ஜனவரித் திங்கள் 22-ஆம் நாள் முதல் 26-ஆம் நாள் முடிய எங்கள் பள்ளிக்கூட ஆசிரியர்களும், மாணவர்களும், பழைய மாணவர்களு மாகச் சேர்ந்து ஏறக்குறைய 350 பேர் தமிழ் நாட்டு நெற்களஞ்சியமெனப் போற்றப்பெறும் தஞ்சை, கும்ப கோணம் முதலிய நகரங்களைப் பார்த்து மீள்வதெனப் புறப்பட்டனர். அக் குழுவினருள் நானும் ஒருவனாகக் கலந்து பெரும் பயனடைந்தேன். தென்னாட்டில் நான் கண்ட இயற்கைக் காட்சிகளையும் கலைச் செல்வங்களின் கவினுறு தோற்றங்களையும் இன்னும் என் மனக் கண்ணால் கண்டு இன்பக் கடலில் திளைக்கிறேன்.

சென்ற 22-1-'51 திங்கட்கிழமையன்று காலை 9 மணிக்கெல்லாம் தலைமையாசிரியர் சுற்றுலாக் கையேட்டில் குறிப்பிட்ட வண்ணம் நாங்கள் எல்லோ ரும் பள்ளிக்கூட வழிபாட்டுக் கூடத்தில் கூடினோம். எங்கள் பயணத்துக்கு வேண்டிய பெட்டி படுக்கைகளை முன்னாளிலேயே பொருட்காப்புக் குழுவினரிடம்

சேர்த்துவிட்டோம். அவற்றை அவர்கள் முன்னதாகவே புகைவண்டி நிலையத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தனர். சரியாக 9-30 மணிக்கெல்லாம் பிரயாணக் குழுவினர் அனைவரும் அணிவகுத்துப் புகைவண்டி நிலையத்துக்கு ஊர்வலமாகப் புறப்பட்டோம். முன்னே இன்னிசைக்

Courtesy: The Head-Master, The Hindu Theological High School, Madras.

கருவிகள் முழங்க, பின்னே பள்ளிக்கூடத் தேசிய ராணுவப் படையினரும் சாரணரும், அவர்களின் பின்னே மாணவர்கள் தத்தம் குழுத் தலைவர்களுடன் வரிசை கலையாமல் செல்ல, இருபுறமும் ஆசிரியர்கள் தொடர்ந்துவர, ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நாங்கள் வீறுபெற்ற நடையுடன் முகம் மலர நடந்து சென்றோம். ஊர்வலத்தைக் கண்ட பெற்றோரும்

மற்றோரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லோரும் கடற்கரை மின்வண்டியிலேறி எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம்.

ஆயிரக் கணக்கான நண்பர்களும், அன்னையரும், தந்தையரும், பொதுமக்களும் வந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறி வழியனுப்பினர். 'சுற்றுப் பிரயாணக் குழுவினர் வாழ்க' என்னும் ஒலி வானைப் பிளந்தது. ஏறக்குறைய முந்நூற்று ஐம்பது பிள்ளைகள் அமர்ந்து செல்வதால் ஒரு பள்ளிக்கூடத்தையே தான் ஏற்றிச் செல்வதாகப் பெருமிதம் கொண்ட புகைவண்டி, 'குப் குப்' பென்று புகையைக் கக்கிய வண்ணம் புறப்பட்டது.

வழிநெடுக வறண்ட காட்சிகளையே பார்த்த நாங்கள் சோழ நாட்டின் எல்லையைக் குறுகியதும் பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகளை இருமருங்கும் கண்டு இன்புற்றோம். எங்கணும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற புல் வெளிகளும், 'சோழவளநாடு சோறுடைத்து', 'சோற்றால் மடையடைக்கும் சோணாடு' என்னும் அவ்வையாரின் அமுதமொழிகளை மெய்ப்படுத்தும் நெல்வயல்களின் இனிய தோற்றமும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்தன.

நாங்கள் இரவு ஏழரை மணிக்குக் குடந்தையை அடைந்தோம். குடந்தைப் பொதுமக்கள் எங்களை வரவேற்பதற்காகப் பல சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். எங்கள் தலைமையாசிரியருக்கு மாலையணிவித்து இன்னிசை முழங்க எங்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். கும்பகோணத்தில் இரு நாட்கள் தங்கினோம். இருநாட்களில் பல அற்புதமான இடங்களையும் காட்சிகளையும் கண்டு களித்தோம்.

முதல்நாள் காலையில் கும்பகோணத்துக்கு அருகில் உள்ள முருகன் திருத்தலமாகிய சுவாமிமலைக்குச் சென்ருேம். அங்கு, வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளமுடைய காவிரியாற்றில் நீராடினேம். இருகரையிலும் அடர்ந்த மரஞ்செடி கொடிகளைக் கண்டு மகிழ்ந்

Courtesy: The Head-Master. The H. T. H. School, Madras.

தோம். கங்கையினும் புனிதமாய காவிரியின் போக்கில் உள்ளத்தைப் பறிகொடுத்தோம்.

பின்னர் இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள சுவாமிநாதப் பெருமானை வழிபட்டோம். இது முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று. முருகனடியவர்கள் திரள்திரளாகப் போந்து வழிபாடு புரிகிருர்கள். மக்கள்,

சிவபெருமானுக்குப் பிரணவ மந்திரத்தின் பொருளைக் குழந்தை முருகன் ஆசிரியர் நிலையிலிருந்து விளக்கியது இத்தலமே யாகுமென்று கூறுகிறார்கள்.

நாங்கள் மீண்டும் குடந்தைக்குச் சென்றோம். இந்நகர் காவிரியாற்றங் கரையில் அமைந்த அழகிய நகரமாகும். இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் கும்பேசுவரர். இறைவியின் பெயர் மங்கள நாயகி. இங்குச் சாரங்கபாணிப் பெருமாள் கோயில், இராமசுவாமி கோயில், சக்கரபாணி கோயில் முதலிய பல தேவாலயங்கள் பார்க்கத் தகுந்தவையாகும். இக் காரணத்தினால் இந்நகரத்தைக் **கோயில் நகரம்** என்று குறிப்பது முண்டு. இராமசுவாமி ஆலயத்தில் உள்ள சிற்பங்களின் வனப்பையும், இராமாயண வண்ணப் படங்களையும் பார்த்து நாங்கள் பண்டைத் தமிழர்களின் கலையாற்றலை நினைந்து மகிழ்ந்தோம். கும்பேசுவரர் கோயிலில் உள்ள கல் நாதசுரம் கருத்தைக் கவருகிறது.

கும்பகோணத்தில் **மகாமகக் குளம்** என்னும் பெயர் பெற்ற குளமொன்று உண்டு. பனிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மாசித் திங்கள் மகநாளில் இந்தியாவில் உள்ள புண்ணிய நதிகள் யாவும் இதிற் கலப்பதாக மக்கள் பாராட்டி அந்நாளில் நீராடுவர். சென்ற மகநாள் 1945-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இக் குளக்கரையைச் சுற்றிலும் தேவாலயங்கள் பல கட்டப் பட்டுள்ளன.

கும்பகோணத்தில் தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிகளையும் சிறந்த முறையில் பயிற்றுவதற்கெனப் பற்பல கல்லூரிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. தொழிற் றுறையிலும் கும்ப

கோணம் மிகவும் முன்னணியில் நிற்பதாகும். கும்ப கோணத்து வெண்கலப் பாத்திரங்கள் சிறந்தவை என்று கேள்விப் பட்டிருப்பாய். மற்றும் செம்பு, பித்தளை முதலிய உலோகங்களாலும் இங்குப் பலவகைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. மிகச் சிறந்த ஆடை வகைகளும் இங்கே நெய்யப்படுகின்றன. இந் நகரின் சிறந்த விளைபொருள்கள் நெல், தென்னை, வாழை, வெற்றிலை முதலியனவாம்.

இத்தகைய காட்சிகளை யெல்லாம் கண்டு நாங்கள் 23-ஆம் நாள் மாலை தஞ்சைக்குப் புறப்பட்டோம். அங்கும் பொதுமக்கள் எங்களை வாயார உளமார வரவேற்றனர். தஞ்சையில் பலவகை வசதிகளும் ஒருங்கே வாய்ந்த காடார் தோட்டத்தில் நாங்கள் தங்கினோம். நகரசபையின் சார்பில் அதன் தலைவரால் எங்களுக்கு ஒரு வரவேற்பு இதழ் வழங்கப் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

தஞ்சையில் பார்க்கத் தக்க இடங்கள் பலப்பல உள்ளன. அவற்றுள் முதன்மையாகக் குறிப்பிடத் தகுவது **தஞ்சைப் பெரிய கோவில்.** அங்கு நாங்கள் கண்ட கலைக்காட்சிகளின் எழிலை என்னென்று புகழ்வது? இராசராச சோழனின் கடவுட்பற்றையும், கலையார்வத்தையும் இங்குள்ள சிற்பங்களும் சித்திரங்களும் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றன. இராசராசனால் இவ் வாலயம் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டதாம். இதற்கு இராசராசேச்சுரம், பிரகதீஸ்வரர் ஆலயம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. 216 அடி உயரமுள்ள இதன் கோபுரம் வானத்தை முட்டுவதுபோன்ற

காட்சியை அண்ணாந்து கண்டு ஆச்சரியப் பட்டோம்.
பெரிய கோயில் என்னும் பெயருக்கேற்ப இக்கோயி



லும் பெரியது. இக்கோயிலில் உள்ள சிவலிங்கமும் பெரியது; நந்தியும் மிகப் பெரியது. இவ் வாலயத்தில்

வீற்றிருக்கும் இறைவனின் பெயர் **தஞ்சைப் பெருவுடையார்**: இறைவியின் பெயர் **பெரியநாயகி**. கோயிலின் உயரிய கோபுரத்தின் நிழல் தரையின்மேல் படுவதில்லை. அடியகன்று, நுனி சிறுத்து நாற்கோண வடிவில் அமைந்திருப்பதே இதற்குக் காரணமாகும். கோயிலில் உள்ள மிகப் பெரிய நந்தி பார்வையாளரை வியப்படையச் செய்கிறது. 12 அடி உயரமும், 16 அடி நீளமும், 7 அடி அகலமும், 25 டன் நிறையும் உள்ள இது 400 மைல் தொலைவிலிருந்து கருங்கல்லில் செதுக்கிக் கொண்டுவரப்பட்டதாகக் கூறுகிறார்கள். கோயிற் சுவர்களில் பழங்கால ஓவியங்களும், கல் வெட்டுக்களும் காணப்படுகின்றன.

ஆலயத்தின் அற்புதங்களைக் கண்ட நாங்கள் தஞ்சை அரண்மனையையும் அங்குள்ள சரஸ்வதி மஹால் என்னும் பெரிய நூல் நிலையம், இசைமன்றம் முதலிய இடங்களையும் கண்டு களித்தோம். அரண்மனை பழங்காலக் கட்டடமாகும். இஃது ஐந்து அடுக்குகளைக் கொண்டது. அரண்மனையின் கீழ்த்திசையில் உள்ள கொலு மண்டபத்தில் தமிழரின் பழம் பெருமைகளைக் குறிக்கும் சின்னங்கள் பலவற்றைக் கண்டோம். சரஸ்வதி மஹால் என்னும் நிலையத்தில் இரண்டாயிரத்துக்கு மேலான வடமொழி நூல்கள் கையெழுத்துப் படிகளாகவும் ஓலைச் சுவடிகளாகவும் காட்சியளிக்கின்றன. ஆயிரக் கணக்கான பழங்காலத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை இங்கே காணலாம். இந் நூல் நிலையத்தில் பற்பல கலை நூல்கள் இருப்பதை யறிந்து நாட்டின் பற்பல விடங்களிலும் வாழும் அறிஞர்கள் இங்கு வந்து அவற்றைப் பயின்று பயன்பெறுகின்றனர்.

தஞ்சைக்கு அண்மையில் உள்ள மாரியம்மன் கோயி லுக்கும் சென்று அங்குக் காணப்படும் ஓவியச் சிறப்புக் களைப் பார்த்து இன்புற்றோம். தஞ்சையின் எழிலை ஒரு நாளில் கண்டு மகிழ்ந்து மறுநாள் வடக்கே ஏழு மைல் தொலைவில் உள்ள திருவையாற்றுக்குச் சென்றோம். திருவையாறு தென்னாட்டுப் புண்ணியத் தலங்களில் தலை சிறந்தது. **தென் கைலாயம்** என்னும் சிறப்புப் பெயரை உடையது. இரு ஊர்களுக்கும் இடையே வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்னும் நான்கு ஆறுகளும், திருவையாற்றின் வடக்கே கொள் ளிடமும் பாய்வதால் இவ்வூர் திருவையாறு எனப் பெயர் பெற்றது. திரு என்பது சிறப்பைக் குறிக்கும் அடைமொழியாகும். திருவையாற்றில் கோயில் கொண்டருளிய இறைவனின் பெயர் **ஐயாறீசன்** என் பதாகும். இறைவியின் பெயர் **அறம் வளர்த்த நாயகி** என்பதாகும். நாவரசர் இத் தலத்தில் கயிலாயக் காட்சியைக் கண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

திருவையாறு மற்றொரு வகையிலும் சிறப்புடை யது. கர்நாடக இசைக் கர்த்தரான தியாகராஜ சுவாமி கள் தம் பிற்கால வாழ்வை இப்பதியிலிருந்து கழித்தார். அவரது கல்லறை காவிரிக்கரையில் மிகச் சிறந்த அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் தைத் திங்களில் தியாகர் இசைவிழா பத்துநாட்கள் நடை பெறுகிறது. தமிழ் நாட்டின் சிறந்த இசைவாணர்கள் பலரும் இவ்விழாவில் பங்கு கொள்வர். நல்ல வேளை யாக நாங்கள் சென்ற மறுநாளே அந்த விழா துவங்குவ தாக ஏற்பாடுகள் நடைபெற்றன. பல்லாயிரக்கணக் கான மக்கள் அமர்ந்து இசை கேட்கும் வகையில் பரந்த

தொரு பந்தல் வேயப்பட்டிருந்தது. திருவையாற்றில் சரபோஜி மன்னரால் ஏற்படுத்தப்பட்ட அரசர் கல்லூரியைப் பார்த்து மகிழ்ந்தோம். இவ்வளவையும் கண்டு களித்த நாங்கள் தஞ்சைக்குத் திரும்பினோம்.

மறுநாள் மாலை 8-20 மணிக்கு வண்டியேறினோம். இரவு 7-30 மணிக்குச் சென்னை வந்து சேர்ந்தோம். சென்னையை அடைந்ததும், "அடடா! இதற்குள் திரும்பி விட்டோமே." என்று நாங்கள் வருத்தப் பட்டோம். எங்கள் பயணத்தில் குறைவு ஒன்றுமில்லை. குறிப்பிட்ட நேரங்களில் எல்லா நிகழ்ச்சிகளும் வெற்றியுடன் நிறைவேறின. முதலுதவிக்கென எடுத்துச் சென்ற மருந்துப் பெட்டி முதலிலிருந்தே மூடியது மூடியபடியே இருந்ததென்றால் எங்கள் பயணம் எவ்வளவு இன்பமயமாக இருந்ததென நீயே எண்ணிப் பார். நூற்றுக் கணக்கான மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு பெருங் குழுவினரைத் தகுந்த முன்னேற்பாடுகளுடன் அழைத்துச் சென்று நலம் புரிந்த தலைமையாசிரியரை நாங்கள் எல்லோரும் பலபடப் பாராட்டினோம்: அவருக்கு நன்றி கூறினோம்.

இவ் வாண்டில் நாங்கள் வரலாற்றுப் புகழ்பெற்ற மதுரை இராமநாதபுரம் போன்ற இடங்களுக்குச் செல்வதாகத் திட்டமிட்டுள்ளோம். சென்றபின் அவற்றைப் பற்றிய விவரங்களையும் உனக்கு எழுதுவேன்;

உன் அன்புள்ள,

பாரிவள்ளல்.

முகவரி :

திரு. த. புகழேந்தி
33, பெரிய தெரு,
திருவத்திபுரம்.

பயிற்சி

பொருளறிக :

பொன்னுன	எங்களும்	பிரணவம்
கவின்	மடை	சார்பில்
வீறு	புனிதமாய	வீற்றிருக்கும்
பெருமிதம்	பறிகொடு	மருங்கு

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

அணிவகுத்து, கண்கொள்ளாக் காட்சியாக, கண்ணுக்கும் கருத்துக்கும், திரள் திரளாக, பச்சைப் பசேலென.

விடை தருக :

1. சுற்றுலாக் குழுவினரின் புறப்பாடு எவ்வாறு சிறப்புடையது ?

2. சோழ நாட்டின் எல்லையைக் குறுகியதும் சுற்றுலாக் குழுவினர் கண்ட காட்சிகள் யாவை ?

3. சுவாமிமலையின் பெருமைகள் யாவை ?

4. குடந்தையில் காணப்படும் அரிய காட்சிகள் யாவை ?

5. பெரிய கோயிலின் அற்புதங்கள் யாவை ?

6. தஞ்சை அரண்மனையைப் பற்றியும் அங்குள்ள பிற நிலையங்களைப் பற்றியும் ஒரு குறிப்பு எழுதுக.

7. திருவையாற்றின் சிறப்புக்கள் யாவை ?

இலக்கணம் :

பொருள் மாறுமல் வேறு வகையில் மாற்றி எழுதுக.

1. பெற்றோரும் மற்றோரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

2. மாணவர் தத்தம் குழுத் தலைவர்களுடன் வரிசை கலையாமற் சென்றனர்.

3. நாங்கள் கண்ட கலைக் காட்சிகளின் எழிலை என்னென்று புகழ்வது !

11. கவிக் குயில்

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்கள்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி!"

காலஞ்சென்ற கவியரசர் பாரதியார் எதிர்காலம் குறித்துப் பாடிய பாடல்கள் பலவற்றுள் இதுவும் ஒன்று. இப் பாடற் கருத்தை எழுத்துக்கெழுத்து அப்படியே மெய்யாக்கி வாழ்ந்த மாதரசியார் கவி. சரோஜினி தேவியார். காந்தியடிகளால், 'இந்தியாவின் கவிக் குயில்' என்று பாராட்டப்பெற்ற பெருமையுடையவர். பல பட்டங்கள் பெற்றதோடு, சட்டசபையில் வீற்றிருந்து சட்டங்களும் செய்தார். 1947-இல் இந்தியா சுதந்திர நாடானபோது ஐக்கிய மாகாணம் என்னும் உத்தரப் பிரதேசத்துக்குக் கவர்னராகவும் இருந்து ஆணுக்குப் பெண் அறிவில் மட்டுமன்று; ஆட்சி புரிவதிலும் இளைத்தவள் அல்லள் என்பதை மெய்ப்பித்தும் வாழ்ந்தவர் இக் கவியரசியாரே யாவார்.

ஐதராபாத்தில் டாக்டர் அகோரநாத சட்டோபாத்யாயர் என்ற புகழ்பெற்ற பேரறிஞருக்கும், அருங்குணமும் கவிதையாற்றலும் வாய்ந்த வரதசுந்தரி தேவியார் என்ற மாதரசிக்கும் தலைமகளாகச் சரோஜினி அம்மையார் 1879-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆந் தேதியன்று பிறந்தார். கவியரசியின் சகோதரர்

இருவர். அவர்கள் வீரேந்திரநாதர், கவிஞர் ஹரீந்திர நாதர் என்பவராவர். சரோஜினியைப் போன்றே ஹரீந்திரநாதர் கவிபாடுவதில் பெரும் புகழ் படைத்தவர்: இவர் டெல்லி மத்திய சட்டசபையில் உறுப்பினராயுள்ளார்.

இளமையில் சரோஜினிக்கு இயற்கைக் காட்சிகளின் எழிலைக் கண்டு மகிழ்வதிலும், கற்பனையாகக் கவி பாடுவதிலும் பெரும் பற்றுண்டு. அம்மையார் தம் பனிரண்டாம் வயதில் மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றிபெற்றார். அப்பொழுதே 1300 வரிகள் கொண்ட

ஏரி யுவதி (Lady of the Lake) என்ற ஆங்கிலக் கவிதை ஒன்றும், 2000 வரிகள் கொண்ட ஆங்கில நாடகம் ஒன்றும் எழுதி முடித்தார் என்பது உங்களுக்கு வியப்பாயிருக்கும். நம் தமிழகத்திலும் இளமைக் காலத்தேயே பாடவல்ல திறம்பெற்ற ஞானசம்பந்தர், இராமலிங்க சுவாமிகள், பாரதியார் முதலியவர்களைப் போலக் கவியரசியும் இளம் மேதாவியாய் விளங்கினார்.

பிறகு, மேற்படிப்பிற்காக இலண்டன் அரசர் கல்லூரியிலும், கேம்பிரிட்ஜில் உள்ள பெண்கள் கல்லூரியிலும் சேர்ந்து கல்வி கற்றார். அங்கும் அம்மையார் கவி பாடும் கலையை மறக்கவில்லை. அந் நாட்டாரின் உரிமை உணர்ச்சியையும் அறிவியலையும் அறிந்து வியந்தார். அவ்வாறே தம் நாடும் விளங்கத் தம் கல்விப் பருவம் முடிந்ததும் உழைக்க உறுதிகொண்டார். இவர் கவிதைகளை ஆங்கிலக் கவிகளான சர். எட்மண்டு கோஸ், ஆர்தர் சைமன்ஸ் போன்றார் மனமாரப் பாராட்டி இவரிடம் நட்புங்கொண்டனர்: இந்தியச் சூழ்நிலையை அடிப்படையாக்கிக் கவிதைகள் எழுதுமாறு தூண்டினர். சில நாட்கள் இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினார் கவியரசியார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா—நம்மில்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்று கவியரசர் பாரதியார் பாடினார். 'ஒத்த அறிவுடையோர் ஒரே நினைப்புக் கொள்வர்' என்றொரு பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. அஃதொப்பவே, கவியரசியாரும் சாதிமதபேதச் சழக்கொழிய வேண்டும் என்னும்

கருத்துடையவரா யிருந்தார். தாம் அந்தணர் குலத்தில் பிறந்திருந்துங்கூட, நாயுடு வகுப்பைச் சேர்ந்த டாக்டர் கோவிந்தராஜுலு என்னும் அறிஞர் ஒருவரை மணம் புரிந்து, நாட்டைச் சீர்திருத்த நெறியிற் செலுத்தத் தாமே வழிகாட்டியாக நடந்து காட்டினர்.

"சொல்லுதல் யார்க்கும் எளிது; ஆனால் சொல்லிய வண்ணம் செய்தலே அரிது" என்பது வள்ளுவர் கருத்து. கவியரசியாரோ, சமுதாய நலமே தம் வாழ்வின் பயனாகக் கருதித் தாம் கூறிய சீர்திருத்த நெறியிலேயே வாழ்ந்து வந்தார். பெண்கள் முன்னேற்றம் கருதி அல்லும் பகலும் உழைத்தார். ஐதராபாத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற அகில இந்திய நிதி ஒன்றைத் தம் செல்வாக்கால் திரட்டி உதவினர். காந்தியடிகள் நடத்திய சுதந்திரப் போரில் அம்மையாரும் முழுமூச்சுடன் உழைத்தார். அந் நாட்களில் அம்மையார் ஆற்றிய அரிய சொற்பொழிவுகள் கேட்டாரைப் பிணித்துக் கேளாதவரையும் கேட்கும்படி தூண்டுவதாய் அமைந்திருந்தன. இந்தியாவின் உரிமைப் போரின் உண்மையை ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்குச் சென்று சொற்பொழிவுகள் மூலம் அந்நாட்டார் உணருமாறு செய்தார். நாட்டு விடுதலைப் போரில் பலமுறை சிறை சென்றூர். துன்பம் இன்னதென்று அறியாத செல்வக்குடியில் பிறந்து, பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த கவிக்குயில் பல ஆண்டுகள் சிறைப் பறவையாய்க் கிடந்தார். ஏன்? அக் குயிலுக்குச் சுதந்திரத்தில் இருந்த ஆர்வமே காரணம் அல்லவா?

அம்மையார் அரசியல் பணியில் ஈடுபட்டவுடன்

பாடும்பணி கூடாதாயிற்று. எனினும் அவர் பாடிய பாடல்களும், பேசிய பேச்சுக்களும் நமக்குப் புத்தகங் களாக இப்பொழுது கிடைக்கின்றன. கவியரசி சரோ ஜினியின் பாடல்களில் **காலப் பறவை** (The Bird of Time) **சிதைந்த இறகுகள்** (The Broken wings) **பொன் னிலை வாயில்** (Golden Threshold) என்னும் பகுதி கள் உலகப் புகழ்பெற்றவை. இக் கவிதைகள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுதத் தேன் துளிகளாகும். நீங்கள் பிற்காலத்தில் இவற்றைத் தவருமல் படித்தல் வேண்டும்.

கவியரசியாய் இருந்த சரோஜினி தேவியார் இந் தியா தன்னுரிமை பெற்ற நாடானதும் புவியரசியாய் ஓராண்டுக்காலம் பாராண்டார். அவர் ஐக்கிய மாகாணக் கவர்னராக நியமிக்கப்பட்டார். முன்னொரு முறை லக்ஷ்மணபுரியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் அம்மை யாரும் கலந்து சொற்பெருக் காற்றினர். லக்ஷ்மண புரியை லக்நௌ (Lucknow) என்றும் கூறுவர். அப் போது அம்மையார் லக்நௌவில் கூடியுள்ள நமக்கு '**லக்நௌ**' (அதிருஷ்டம் இப்போதுதான்—Luck—Now) என்று ஆங்கிலத்தில் சிலேடையும் நகைச்சுவையும் ததும் பப் பேசினர். அந்த லக்நௌ நகரில், 1949-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2-ஆம் நாள் தம் எழுபதாம் வயதில் மாரடைப்பால் பொன்னுடல் நீத்துப் புகழுடம் பெய்தினர். இந்தியா ஒரு சிறந்த தலைவியை இழந்து துயருற்றது. ஆங்கில மொழிக்கும் சிறந்த கவியரசியின் இழப்பு பெரிதாயிற்று. உலகமே அம்மையார் பிரி வுக்கு அழுதது. இவர் பிரிவுத்துயரைப் பொருத தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்,

"வெட்டி முறித்த விறகென, ஓர் வீணையினைச்
சுட்டெரித்த பாவியென்று தூற்றாரோ?—சிட்டர்புகழ்
அன்னை சரோஜினியின் ஆவியுண்ட கூற்றமே
உன்னையும் இந்த உலகு"

என்னும் கையறுநிலை பாடி வருந்தினார்.

கவிக்குயில் நம்மைவிட்டுப் பறந்து போனாலும் அக் குயிலின் குரல் நமக்குக் கேட்டுக் கொண்டு தானிருக்கிறது. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் குறளை மெய்ப்பித்த கவிக் குயிலின் பாடல்களைப் படித்து இன்புறுவதோடு அவரைப் போலவே தன்னலமற்ற வாழ்வும், பொதுநலச் சேவையும் நம் நோக்கமாகக் கொண்டு நாம் நாட்டுக்கு உழைப்போமாக.

பயிற்சி

பொருளறிக :

பார்	சமுக்கு	கூற்றம்
வாய்த்த	ஆர்வம்	கையறுநிலை
எழில்	தன்னுரிமை	இழப்பு
பற்றி	புவியரசி	
மேதாவி	சிட்டர்	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

அல்லும் பகலும், சீரும் சிறப்பும், பேரும் புகழும், ஈடுபட்ட, தன்னலமற்ற.

விடை தருக :

1. 'கவிக் குயில்' என்று யாரை யார் பாராட்டினர்? அப்படிச் சொன்னது எப்படிப் பொருந்தும்?

2. கவியரசி எந்த ஊரில் பிறந்தார்? அவர் பெற்றோர் யாவர்?

3. சரோஜினி தேவியார் கல்வி கற்ற முறையைப் பற்றி விளக்குக?

4. கவியரசி 'சாதி மத பேதம் கருதாதவர்' என்பதை அவர் வாழ்க்கையிலிருந்து எப்படித் தெரிந்துகொள்ள லாம்?

5. கவியரசி நாட்டுக்குச் செய்த தொண்டைப்பற்றிச் சுருக்கிக் கூறுக.

6. கவியரசி எழுதிய சிறந்த நூல்கள் யாவை?

7. கவிக்குயில் நகைச்சுவைபடப் பேசுமாற்ற லுடையவர் என்பதை ஓர் எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

8. கவிக்குயிலின் பிரிவுத் துயரைப் பொறுது தேசிக விநாயகம் பிள்ளை பாடிய பாடலின் கருத்தைச் சுருக்கி வரைக.

9. சரோஜினி தேவியாரின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணம் :

1. பின்வரும் சொற்களில் உள்ள வினைமுற்று, பெய ரெச்சம், வினையெச்சங்களைத் தனித் தனியே எடுத் தெழுதுக :

பிறந்தார், கண்டு, உண்டு, உழைக்க, சேர்ந்த, உழைத் தார், இறந்து, பொறுத.

2. உழைப்போம், பாடினர், திரும்பினர், பிறந்தார்— இவற்றின் பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறுக.

12. குடிசைத் தொழில்கள்

நம் நாட்டில் ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாகும். நாட்டின் பெரும்பாலான மக்கள் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் உழவர்கள். மற்றும் தச்சர், கொல்லர், கருமார், குயவர் முதலிய தொழிலாளர்களும் உண்டு. உழவர்கள் எத்துணை உழைத்தாலும் அவர்களுக்குப் போதிய வருவாய் கிடைப்பதில்லை. எனவே அவர்கள் பயிர்த்தொழிலுடன் ஏதேனுமொரு துணைத்தொழிலும் புரிவது இன்றியமையாததாகும். துணைத்தொழில்கள் புரிவதற்கேற்ற மூலப் பொருள்கள் கிராமங்களில் ஏராளமாகக் கிடைப்பதுண்டு. இங்ஙனம் செய்யப்படும் தொழில்கள் இயந்திரங்களின் உதவியின்றி வீட்டில் கையினாலேயே செய்யப்படுகின்றன. இவற்றையே **குடிசைத் தொழில்கள்** என்று கூறுகிறோம். பண்டைக் காலத்தில் நம் நாட்டில் குடிசைத் தொழில்கள் பெருவாரியாகச் செய்யப்பட்டு வந்தன. இயந்திரங்களின் தோற்றத்தினாலும், அந்நியர் ஆட்சியில் ஆதரவு இன்மையாலும், குடிசைத் தொழில்கள் நசித்துவரலாயின. கிராம மக்கள் அவற்றில் அவ்வளவாகக் கவனம் செலுத்தாமையால் தம் தேவைக்குரிய எல்லாப் பொருள்களுக்கும் பிறர் கையை எதிர்பார்க்கலாயினர்.

உழவுத் தொழிலே இந்தியாவில் பெரும்பாலான மக்கள் மேற்கொண்டொழுகும் தொழிலாகும். இத்

தொழில் ஓராண்டு முழுவதும் நடை பெறுவதில்லை. உழவு ஓராண்டில் ஏழெட்டு மாதங்களே நடைபெறு கிறது. இவ்வாறு தொழிலில்லாத மாதங்களிலும் அவ்வப்போது கிடைக்கும் ஓய்வு நேரங்களிலும் நம் நாட்டு மக்கள் தூங்கியும், வீண் பேச்சுப் பேசியும் தம் பொழுதைப் போக்கி விடுகிறார்கள். இதனால் எவ்வளவு இழப்புண்டாகிறது! இவ்வோய்வுக் காலங்களைப் பாழாக்காமல் கைத்தொழில்களில் ஏதேனும் தொழில் ஒன்றைச் செய்து வருவார்களானால் ஏழ்மையை ஓரளவுக்குக் குறைக்க முடியுமல்லவா?

குடிசைத்தொழில் என்பது ஒருவனுடைய மூலாதாரத் தொழிலுக்குத் தடையாகவும் இருக்கக் கூடாது. இத்தொழிலுக்கு ரூ.1000, 2000 என்று அதிக முதல் போடும்படி நேர்வதும் கூடாது; உழவனால் தாங்குமளவுக்குக் குறைந்த தொகையாகத்தான் முதல் வைக்க வேண்டும். இத் தொழிலுக்குரிய மூலப் பொருள்களும் கிராமவாசி வாழும் இடத்திலேயே மிகுந்த செலவில்லாமல் ஏராளமாய்க் கிடைக்கக் கூடியனவாயும் அமையவேண்டும். பருத்தி விளையாத இடத்தில் நூல் நூற்றலைக் குடிசைத் தொழிலாக மேற்கொள்ளலாகாது. பனையோலை கிடைக்காத இடத்தில் பனையோலைப் பாய் முடைதலும் விசிறி செய்தலும் குடிசைத் தொழிலாகா. கிராமத்தில் எந்தப் பொருள் ஏராளமாய்க் கிடைக்குமோ அந்தப் பொருளைக்கொண்டு பிற தொழிலுக்கும் இடையூறில்லாமல் செய்யும் தொழிலே குடிசைத் தொழில் என்று கூறப்படும்.

மிகுந்த பயிற்சியின்றியும், எளிதாகவும் குடும்பத்தில் உள்ள பலராலும் செய்யக் கூடியதாகவும், நல்ல வரு

வாய் தரக்கூடியதாகவும் குடிசைத் தொழில்கள் அமை வதே நன்மை தருவதாம். ஒரு பெரிய ஆலையில் மிக மும் தொழிலுக்கு வேண்டிய பலவேறு சிறு பகுதியான தொழிலை மேற்கொள்ளுவதும் குடிசைத் தொழிலே யாகும். இந்நிலைமை ஜப்பான் தேசத்தில் அதிகமா யுள்ளது.

ஒரு நாடு பெருந் தொழிலுக்கு எவ்வளவு ஊக்கம் தரவேண்டுமோ அவ்வளவு ஊக்கமும் குடிசைத்தொழி லுக்கும் தருதல் அந்நாட்டின் முன்னேற்றத்துக்கு வழி யாகும். ஏனெனில் குடிசைத்தொழிலில், குடிமக்களில் முக்காற் பகுதியினர் ஈடுபடுகின்றனர்கள். இதற்கு மாருகப் பெருந்தொழிலிலோ மிகப் பெருஞ் செல்வர் களும், நடுத்தரச் செல்வர்களுமே ஈடுபடமுடியும். ஆத லால் பலருக்கும் நன்மைபுரிந்து வறுமையைத் தவிர்க்க வல்ல குடிசைத் தொழிலுக்கே தக்க ஆதரவு தருதல் வேண்டும்.

ஆயிரம் பேர் செய்யும் வேலையை ஓரியந்திரம் விரைவில் செய்து முடித்துவிடக் கூடுமாதலால் பலர் பலநாள் வேலையின்றிப் போகவும் இடமுண்டாகிறது. இதனுல் வேலை யில்லாத் திண்டாட்டமும் ஏற்படுகிறது. வேலையில்லாத போது வீணுகக் காலத்தைக் கழிக்க வேண்டி வருகின்றது. கல்வியறிவு குறைந்துள்ள நம் நாட்டார்க்குப் பொறிகளை இயக்கும் நெறிகளும் எளி தில் தெரியாது. ஆதலின் எல்லோரும் இன்புற்றிருக்க கும் வழியாவது நாடு முழுவதிலும் பரவலாகச் சிதறிக் கிடக்கும் குடிசைத் தொழிலை ஆதரிப்பதேயாகும். இதையறிந்தே நம்நாட்டுத் தந்தை மகாத்மா காந்தியடி களும் குடிசைத் தொழிலை ஆதரிப்பதையும் தம் திட்டங்

களில் ஒன்றாகச் சேர்த்து உழைத்தார். தாமே சில திட்டங்களை நடைமுறையில் கொண்டுவந்தார். கைராட்டையும் கதராடையும் காந்தியடிகளின் கருத்துக்கு இனியவை என்பதை எவரே அறியாதார்?

இனி, குடிசைத் தொழில்களாக நாம் எவற்றை மேற்கொள்ளலாம் என்று கவனிப்போம். தேனீ வளர்த்தல், சோப்புச் செய்தல், காகிதம் செய்தல், கோழிப் பண்ணை வைத்தல், பாற் பண்ணை வைத்தல், வாத்து, புறா முதலியவற்றை வளர்த்தல், நூல் நூற்றல், பருத்தியில் பஞ்சு பிரித்தல், கொட்டையைப் பிரித்தல், தென்னை பனை மூங்கில் மரங்களைப் பயன் படுத்திச் செய்யக்கூடிய சிறுதொழில்கள், கால்நடை வளர்த்தல், காய்கறித் தோட்டம் அமைத்தல், மட்பாண்டம் வனைதல், சிற்சிறு பொம்மைகளை மண்ணாலும் தவிட்டாலும் மரத்தாலும் உருவாக்குதல், மாட்டுக் கொம்புகளையும் தந்தங்களையும் கொண்டு பொத்தான், சீப்பு, கத்திப்பிடி போன்றனவற்றைச் செய்தல், பூந்தோட்டம் அமைத்தல், சாயத் தொழிற்சாலை நடத்தல், கூடை முடைதல், ஓவியந் தீட்டுதல், ஊறுகாய் வடகம் அப்பளம் முதலிய தயாரித்தல், இலை தைத்தல், கயிறு திரித்தல் முதலியன வெல்லாம் குடிசைத் தொழில்களாக மேற்கொள்ளத் தக்கனவேயாகும். ஆனால் காலமும், இடமும், பொருளும், தொழில் திறமும், பிறவும் அறிந்து தக்கவாறு நடத்துவதே பலன்பெறும் வழியாகும்.

இத்தகைய சிறு கைத்தொழில்களால் சிறந்துள்ள நாடுகள் பல உள. ஜப்பான், ஜெர்மனி, டென்மார்க், பெல்ஜியம் முதலிய நாடுகள், உலையா முயற்சியுடன் ஒரு கொடியையும் வீணாக்காமல் ஓய்வுக்கால வேலையாக

இச் சிறு கைத்தொழில்களை மேற்கொண்டு பலன் மிகப் பெற்றுள்ளன.

இங்குக் கூறிய ஒவ்வொரு சிறு கைத்தொழிலையும் பற்றி நீங்கள் மேல் வகுப்பில் விரிவாகப் படிக்கலாம். இத் தொழில்களில் அதிக வருவாயைத் தரக்கூடியதும், முதலீடும் உழைப்பும் அதிகம் வேண்டாததும் தேனீ வளர்த்தலே எனலாம். இந்நாளில் கல்வி அதிகாரிகளும் கல்வித் திட்டங்களில் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை ஒவ்வொரு மாணவரும் கற்றுப் பயனுறுமாறு ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

குடிசைத் தொழில் வெற்றிபெற ஊக்கம், உறுதி, உழைப்பு முதலிய குணங்களை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். தேங்காய் நார், மூங்கில், கந்தைத்துணி போன்ற பொருள்களைக் கண்டபடி எறிந்தும் எரித்தும் விடாமல் அவற்றைக் கொண்டு காகிதம் செய்யலாம்; எரு உற்பத்தி செய்யலாம்; இன்னும் முயன்றால் பல வழிகளில் பயன்படுத்தலாம். உழைப்பின் வாராத உறுதிகள் இல்லை. ஆதலால் மேன்மேலும் உழைத்துக் குடிசைத் தொழில்வளம் ஓங்க ஒவ்வொருவரும் பாடு படுவோமாக.

பயிற்சி

பொருளறிக:

மூலப் பொருள்	நெறி	தவிர்க்க
ஏது	பொறிகள்	முதலீடு

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

ஈடுபடு, மேற்கொள்ள, நடைமுறையில், கணக்கற்ற.

விடை தருக :

1. குடிசைத் தொழில்கள் எங்ஙனம் இன்றியமையா தனவாகும்?

2. 'குடிசைத் தொழில்கள் அவ்வவ் விடங்களிற் கிடைக்கும் மூலப் பொருள்களுக்கு ஏற்றவாறு இருத்தல் வேண்டும்.' ஏன்?

3. இயந்திரத் தொழில்களை ஆதரிப்பதைவிடக் குடிசைத் தொழில்களையே ஆதரிக்க வேண்டுவது ஏன்?

4. நம் நாட்டவர் மேற்கொள்ளக்கூடிய குடிசைத் தொழில்கள் யாவை?

5. குடிசைத் தொழில்களால் மேன்மையடைந்துள்ள நாடுகள் யாவை?

இலக்கணம் :

1. இப் பாடத்தில் முதற் பாராவில் உள்ள பெயர்களை எடுத்தெழுதி அவை இன்னின்ன வேற்றுமை உருபுகளை ஏற்றவை என்பதைக் குறிப்பிடுக.

2. இதனால் எவ்வளவு இழப்புண்டாகிறது!—இதனைப் பொருள் மாறுபடாமல் செய்தி வாக்கியமாக மாற்றிக் கூறுக.

3. ஆதலால் பலருக்கும் நன்மை புரிந்து, வறுமையைத் தவிர்க்கவல்ல குடிசைத் தொழிலுக்கே தக்க ஆதரவு தரவேண்டும்—குடிசைத் தொழில் என்னும் சொல்லை எழுவாயாக அமைத்து இதனைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்துக் கூறுக.

13. நான் சிறுவனாக இருந்தபோது

எனக்கு அப்போது வயது ஆறு இருக்கும். எங்கள் வீடு தெருவின் ஒரு முனையில் இருந்தது. பள்ளிக்கூடம் போய் வந்தவுடனே மாலை வேளையில் விளையாடிய பிறகு வீட்டின் எதிர்ப்பக்கத்தில் சுவர் ஓரமாக உட்காருவேன். என்னைவிட்டுப் பிரியாமல் பழகிய பையன்

வேணு என்னும் ஒருவன். அவன் என் எதிரே வந்து உட்காருவான். அவன் என்னைப் பார்த்து, "ஏதாவது கதை சொல்லு," என்று கேட்பான். அவனும் என் வயது உள்ளவனே. அவன் என்னைப் பார்த்துக் கதை கேட்டவுடனே, எனக்கே என்னைப்பற்றிப் பெருமை யாக இருக்கும். உடனே எதையாவது சொல்லத் தொடங்குவேன். பெரும்பாலும் நாய், பூனை, கோழி. காக்கை, குள்ள நரி, புலி, கரடி இவைகளைப்பற்றியே கதை சொல்வேன். வேணு என் எதிரே வாயைத் திறந்தபடி கேட்டுக்கொண்டிருப்பான். நான் சலிக்காமல் எதையாவது சொல்வது வழக்கம்.

என் கதையில் முன்பின் தொடர்போ, நிகழ்ச்சிப் பொருத்தமோ ஒன்றும் இராது. அம்மாவும் அக்காளும், பாட்டியும் ஆசிரியரும் சொன்ன கதைகளை எல்லாம் கூட்டிக் குழப்பிப் பொருத்தம் இல்லாமல எதையாவது சொல்லிக்கொண்டிருப்பேன். ஆனால் அந்தப் பையன் எப்படித்தான் பொறுமையாகக் கேட்டானோ தெரிய வில்லை! நாடோறும் சிறிது நேரமாவது கதை சொல்லும் படி கேட்பான்.

என் கதைகளோ முதலும் முடிவும் இல்லாத கதை கள்! வாயில் வந்தபடி, இது அதைக் கடித்தது; அது இதைத் துரத்தியது; அது ஏமாற்றியது; இது ஏமாந் தது என்று நினைத்ததை எல்லாம் சொல்வேன். அத னால் பெரியவர்களைப்போல் நானும் கதை சொல்லுகிற வன் என்னும் செருக்கு எனக்கு இருந்தது.

என் செருக்கு எல்லாம் திடீரென்று இல்லாமற் போயிற்று. ஏழு, எட்டு வயதாக இருந்தபோது, பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளில் வளர்ந்தவர்கள், பேய்,

பிசாசுக் கதைகளைச் சொல்லி என் கற்பனையைக் கெடுத்துவிட்டார்கள். என்னைப் பயங்கொள்ளியாக்கி விட்டார்கள். அவற்றைக் கேட்ட பிறகு நான் விளக்கு வைத்தபின் தெருவில் தலைகாட்டாமல் வீட்டுக்குள் ஒடுங்கிவிட்டேன்.

வீட்டில் தெற்குப் புறத்துத் தாழ்வாரத்தில் இருந்து பார்த்தால் வேப்பமரம், நுணாமரம், நாவல்மரம் ஆகிய வற்றின் தலைகள் நன்ருகத் தெரியும். இருட்டில் தோன்றிய அவற்றின் கிளைகளில் பேய்களும் பிசாசு களும், மரக்கால் பல்லனும், மிடாவிழுங்கியும் இருப்பது போல் எண்ணுவேன். அதோ அவன் தலை, இதோ அவனுடைய கைகள், அதோ கால்கள், இதோ வயிறு என்று இப்படிப்பட்ட கற்பனைகள் வளரும். உடனே, கண்ணை மூடிக் கொண்டு குப்புறப் படுத்துக்கொள் வேன். என் பயத்தைக் கண்ட பாட்டி அந்தத் தெற் குத் தாழ்வாரத்தில் என்னை இருக்கவிடாமல், வடக்குத் தாழ்வாரத்திற்கே அழைத்துக் கொண்டு போய் விடுவாள்.

இல்லாததைக் கற்பனை செய்து கோழையாக அஞ்சி ஒடுங்கியிருந்த அந்த நாட்களை இப்போதும் நினைத்து வருந்துகிறேன். சிறு பிள்ளைகளுக்குப் பேய் பிசாசு முதலியவற்றைப் பற்றிச் சொல்வது எவ்வளவு கெடுதி என்பதை நான் இப்போது நன்ருக உணர் கிறேன்.

* * *

ஒரு நாள் எதிர்வாடையில் மூன்ருவது வீட்டில் ஒரு பையனுடைய பாட்டி இறந்துபோய் விட்டாள். அந்தப் பையனேடு நான் விளையாடுவது வழக்கம்.

அவனுடைய பாட்டி இறந்துபோனபோது அவன் கதறிக் கதறி அழுதான். பாட்டியின் உடம்பைச் சுடு காட்டுக்கு எடுத்துச் சென்றபோது அந்தப் பையன் 'ஓ' என்று அலறி அலறித் தேம்பியதைக் கண்டு நானும் அழுது விட்டேன். மாலையில் இது நிகழ்ந்தது.

வீட்டுக்குத் திரும்பிய பிறகு அன்று இரவு என்னால் சாப்பிட முடியவில்லை. என் பாட்டியும் இறந்து விடுவாளோ என்று கற்பனை செய்து கண்ணீர் விடத் தொடங்கினேன், அழுதேன்; தேம்பினேன். படுக்கையில் படுத்தபடியே அழுது கண்ணீரால் தலையணையையும் சிறிது நனைத்து விட்டேன். பக்கத்திலிருந்த என் பாட்டி இதைத் தெரிந்துகொண்டு. "இனிமேல் நீ சாவு வீட்டுக்குப் போகாதே," என்று சொல்லித் தன் மடிமேல் படுக்க வைத்துக் கொண்டாள். அப்படியே தூங்கி விட்டேன். என் பாட்டி சில ஆண்டுகளுக்கு முன்னர் உண்மையாகவே இறந்து விட்டாள். அன்று நான் சில துளிக் கண்ணீர் விட்டேனே தவிர, அது போல் அழவில்லை. வாழ்க்கையின் அனுபவம் எனக்குக் கல்மனத்தைக் கொடுத்து விட்டது.

* * *

சிறிய வயதில் சாதி பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. வீட்டில் உள்ள பெரியோர்கள் என்னைப் பார்த்து, "வேறு யார் வீட்டிலும் சாப்பிடக் கூடாது. தண்ணீரும் குடிக்கக் கூடாது. கடையிலும் கண்டதை வாங்கித் தின்னக் கூடாது," என்று அடிக்கடி சொல்லியிருந்தார்கள். அதனால் எவ்வளவு நீர் வேட்கை எடுப்பினும் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகு தான் தண்ணீர் குடிப்பேன்.

ஒருநாள் ஒரு பையனுடைய வீட்டிற்குப் போயி ருந்தபோது, அவனுடைய அம்மா என் கையில் ஒரு முறுக்குக் கொடுத்தார்கள். "வேண்டாம்," என்று மறுத்து வாங்கிக் கொள்ளாமல் இருந்தேன். வற்புறுத்தி னார்கள். பிடிவாதமாக மறுத்தேன். காரணம் கேட் டார்கள். வீட்டார் சொன்னதைக் கூறினேன். அதைக் கேட்டுச் சிரித்தார்கள். என்னுடைய அம்மாவைப் பற் றிக் கேலியாக பேசினார்கள். அதற்குப் பிறகு அந்த வீட்டுக்குப் பலநாள் போகாமலே நின்று விட்டேன். "ஒன்றும் தெரியாத பையன்," என்று அவனுடைய அம்மாவும் அப்பாவும் என்னைப்பற்றி அடிக்கடி சொல்லி வந்தார்கள். உயர்நிலைப் பள்ளியில் போய்ச் சேர்ந்த வுடன் என்னுடைய அறியாமை எனக்குத் தெரிந்து விட்டது. இப்பொழுது சாதி என்பது பேய் பிசாசு போல் இல்லாத ஒன்று என்னும் உண்மை எனக்கு விளக்கமாகத் தெரிகிறது.

உயர்நிலைப் பள்ளிக்குப் போய் ஐந்தாம் வகுப்பில் படிக்கும்போது வேறு பிடிவாதம் வந்து சேர்ந்தது. ஆசிரியர் ஒருநாள் சுகாதார பாடம் கற்றுக் கொடுத்த போது காப்பி குடிப்பதனால் தீமை உண்டு என்று அழுத் தம் திருத்தமாகச் சொன்னார். அன்று முதல் காப்பி குடிக்கும் வழக்கத்தை விட்டு விட்டேன். மறுநாள் வீட்டில் அம்மா காப்பி கொடுத்தபோது, "வேண்டாம்," என்று பிடிவாதமாக மறுத்தேன். ஆசிரியர் சொன்ன காரணத்தைச் சொன்னேன். அம்மாவும் பாட்டியும் சிரித்தார்கள். ஆனாலும் காப்பியைக் குடிக்கவில்லை. அதன் பிறகு இன்றுவரையில் நான் காப்பி குடித்ததே இல்லை. எனக்கு நடத்தப்பட்ட தேநீர் விருந்துகளிலும்

நான் காப்பி குடித்ததில்லை; தேநீரும் குடித்ததில்லை; இவ்வளவு வயதுவரை காப்பி இல்லாமலே காலம் கழித்த பிறகு இனியும் தேவையில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

என்னுடைய ஒன்பதாம் வயதில் ஒரு திருமணக் கூட்டத்தில் குப்பன் என்ற பையனுடன் சேர்ந்து வெற்றிலைப் பாக்குப் போட்டேன். நாக்குச் சிவப்பதை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு பெரியவர் என்னிடம் அன்போடு வந்து, "தம்பி! வெற்றிலை போட்டால் படிப்பு வராது; இனிமேல் போடாதே," என்றார். நான் உடனே வாயில் இருந்த வெற்றிலைப் பாக்கைக் கீழே துப்பிவிட்டேன். அதன் பிறகு இன்று வரையிலும் எந்தக் காரணம்பற்றியும் நான் வெற்றிலைப் பாக்குப் போட்டதே இல்லை. அதனால் கெடுதி இல்லை என்பதை இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன்; ஆனாலும் அது தேவை இல்லை என்று எண்ணி விட்டேன்.

காற்றாடி விடுவதில் எனக்கு விருப்பம் மிகுதி. யார் எங்கே காற்றாடிவிட்டாலும் அங்கே நின்று பார்த்துப் பொழுது போக்குவது என் சிறு வயதில் பழக்கம். சிறிது வளர்ந்த பிறகு, நானே காற்றாடி விடவும், காற்றாடி செய்யவும், சூத்திரம் சரியாகப் பார்த்து முடிபோடவும் கற்றுக்கொண்டு தேர்ந்தவன் ஆகிவிட்டேன். காற்றுக் குறைவாக இருந்த நேரத்தில் காற்றாடி அமைதியாகத் தூங்குவதைக் காணுவதில் எனக்கு அளவிலா மகிழ்ச்சி. ஆனால் அந்தக் காற்றாடிக்கும் மேலே, மிக்க உயரத்தில் வானத்தோடு ஒட்டினாற்போல் கழுகுகள் அமைதியாகப் பறக்கும் காட்சியை அடிக்கடி பார்த்து வியப்படைந்

திருக்கிறேன். "அந்தக் கழுகுகள் போல் அவ்வளவு உயரத்தில் நம்மால் பறக்க முடியாதா ?" என்னும் ஏக்கம் எனக்கு அந்த வயதில் உண்டு. இந்த வயதிலும் எனக்கு அந்த ஏக்கம் முற்றிலும் தீரவில்லை என்றே சொல்லவேண்டும்.

— டாக்டர் மு. வரதராசனார்

பயிற்சி

பொருளறிக :

முனை	சூத்திரம்	மிடா
செருக்கு	தூங்குதல்	
ஏக்கம்	முற்றிலும்	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

பெரும்பாலும், சகிக்காமல், கூட்டிக் குழப்பி, கதறிக் கதறி, முற்றிலும், அழுத்தம் திருத்தமாக.

விடை தருக :

1. சிறுவனாக இருந்தபோது ஆசிரியர் கூறிய கதைகள் எப்படி இருக்கும்?

2. கதை சொல்வதில் ஆசிரியர் செருக்கடைந்தமைக்குக் காரணம் என்ன?

3. பேய்க் கதைகளைக் குழந்தைகளுக்குக் கூறுவது தகாது என்பதை விளக்கும் நிகழ்ச்சி யாது?

4. வாழ்க்கை அனுபவத்தின் பயன் யாது?

5. இளம் பருவத்திலேயே ஆசிரியர் விலக்கிய பழக்கங்கள் யாவை?

6. 'இந்த வயதிலும் எனக்கு அந்த ஏக்கம் முற்றிலும் தீரவில்லை என்றே சொல்லவேண்டும்.' —இதனை இடஞ்சுட்டி விளக்குக.

இலக்கணம் :

1. இப் பாடத்தில் தலையணை, காற்றாடி, வெற்றிலை முதலிய சொற்கள் வந்துள்ளன. இவற்றைச் சில மாணவர்கள் தலையாணி அல்லது தலைகாணி என்றும், காத்தாடி என்றும், வெத்திலை என்றும் கூறுவதுண்டு. இவற்றைச் சரியான முறையில் நீங்கள் எழுத மறக்கலாகாது.

2. சில விளம்பரங்கள் கீழ்வருமாறு எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பிழை நீக்கி எழுதுக.

(i) பிரதி ஞாயிறு தோறும் விடுமுறை.
(ii) உத்திரவன்னியில் உள்ளே வறக்கூடாது.
(iii) வண்டி விரைந்துவிட்டது.
(iv) இங்கே நயமான வெண்ணை விர்க்கப்படும்.

3. எட்டாம் வகுப்பு மாணவர்கள் சிலர் எழுதிய கட்டுரைக் குறிப்புப் புத்தகங்களிலிருந்து எடுத்துத் திருத்தப் பட்ட சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு அறிந்து பிழையின்றி எழுதப் பயில்வது நலம்.

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அடமானம்	அடைமானம்	துளிர்	தளிர்
அதிர்ஷ்டம்	அதிருஷ்டம்	துடங்கு	தொடங்கு
இரன்டு	இரண்டு	எண்ணை	எண்ணெய்
இடை (நிறை)	எடை	என்னமோ	என்னவோ
உசிர்	உயிர்	ஒருவள்	ஒருத்தி
கார்க்கும்	காக்கும்	ஒருக்கால்	ஒருகால்
கேழ்வி	கேள்வி	நாத்தம்	நாற்றம்
சமயல்	சமையல்	முயற்ச்சி	முயற்சி
சிலவு	செலவு	முழுங்கு	விழுங்கு
தாப்பாள்	தாழ்ப்பாள்		

அரும்பொருள் அகராதி

அகவை - வயது
அதிபதி - தலைவன்
அமரர் - தேவர்
அரியேறு - ஆண் சிங்கம்
அரும்பி - மலர்ந்து
ஆணை - கட்டளை
இவர்ந்து - ஏறி
இழப்பு - நஷ்டம்
ஈடுபட்டு - மனத்தைச் செலுத்தி
எங்ஙனம் - எப்படி
எய்தல் - அடைதல்
எழில் - அழகு
ஏக்கம் - மன வருத்தம்
ஏந்தல் - தலைவன்
ஒல்லும் வகை - இயன்ற வகை
ஓம்பி - காத்து
கடத்தி - செலுத்தி
கதிர் - கிரணம்
கவின் - அழகு
கனல் - நெருப்பு
காந்தீயம் - காந்தியின் கொள்கை
கூர்ந்தறிந்து - நுணுகி அறிந்து
கூற்றம் - எமன்
கையறு நிலை - இறந்தோரைப்பற்றிப் பாடும் துன்பப் பாடல்
சழக்கு - வழக்கு, சண்டை
சாதனம் - வழி
சார்பில் - தொடர்பில்
சிட்டர் - தெய்வத் தொண்டர்
சிதை - ஈமம், பிணம் சுடுவதற்காக அடுக்கப்பட்ட விறகுக் குவியல்
சூத்திரம் - விசைக் கயிறு
சூழ்நிலை - சுற்றுப்புற நிலை
சூளுரை - சபதம்
செருக்கு - ஆணவம்
செவ்வன் - ஒழுங்காக
தவிர்க்க - நீக்க
தளபதி - சேனைத் தலைவன்
தன்னுரிமை - சுய உரிமை
தாளாண்மை - முயற்சி
திண்ணியர் - மனவலியுடையவர்
திரள் - கூட்டம்
துஞ்சுதல் - தூங்குதல்

நெறி - வழி

நேர்மை - நடுவு நிலைமை

பறிகொடுத்தல் - ஒன்றின் வசமாதல்

பிணித்தனர் - கட்டினர்

பிரணவம்-ஓம் என்னும் மந்திரம்

புவியரசி - நாட்டின் அரசி

பொதுமை - சமரசத்தன்மை

பொறிகள் - யந்திரங்கள்

பொன்னை - அழகான, சிறந்த

மருங்கு - பக்கம்

மலைத்தல் - வியப்படைதல்

மிடா - பெரும்பானை

முதலீடு - மூலதனம்

முன்றில் - முற்றம்

மூலப்பொருள் - கைத்தொழில் செய்வதற்கு வேண்டிய முதற்பொருள்

மேதாவி - மிக்க அறிவுள்ளவர்

வாக்கு - சொல்

வாய்த்த - பொருந்திய

வாளா - வீணாக

விஞ்சியது - மிகுந்தது

விருது பரிசு

விலா - முதுகெலும்பு

விழுப்பணி - சிறந்த தொண்டு

வீறு - பெருமை

வீற்றிருத்தல் - பெருமை தோன்ற அமர்ந்திருத்தல்

வெற்றுரை - பொருளற்ற சொல்